
கல்கி
KALKI 2.7.1967 40 காசு


வேலையை இழந்தது என்னுடைய தவறு என்றார்கள்!
நாசுகத்தான் வேலையைப் போக்கிக் கொண்டேன் என்றார்கள் வீட்டில் எல்லோரும் எனக்கு உடலில் சோர்வு, மனத்தில் தெம்பில்லை என்றால் என் குற்றமா என்ன!
Horlicks
அவர் சொன்னது முற்றிலும் உண்மை! சில வாரங்களிலேயே என்னுடைய அசதி போய் விட்டது. என்னுடைய புது வேலையில் உற்சாகத்துடன் உழைப்பதற்கான சக்தியும் வந்துள்ளது!
Horlicks
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி யளிக்கிறது!



ஸர்வமங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி (ஆஸ்ரமம்) 102, தையப்ப முதலி தெரு, சென்னை-1, ஆலய கட்டிட நிதிக்காக ஸ்ரீமதி சௌந்தர விஜயலக்ஷ்மி "பஞ்சவேணி ராமாயணம்" சங்கீத உபன்யாசம் தி. நகர் ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயத்தில் பிரதி தினம் இரவு 7-மணிக்கு நடைபெற்று வருகிறது. 12 - 7 - 1967 புதன் மாலை 6-30 மணிக்கு "ஸ்ரீராம பட்டாபிஷேகம்"

சுத்தத்துக்கு ஒரு சாதனம்

''நீ மட்டும் உன் வீட்டை எப்படித்தான் சுத்தமாக வச்சிருக்கியோ? பார்த்தாலே எனக்குப் பொறாமையாக இருக்கு. தரை முதல் எவர்சில்வர், பித்தளைச் சாமான்கள் வரை எல்லாமே பளபளப்பாக இருக்கே! நானும் தான் என்னென்னவோ பண்ணிப் பார்க்கிறேன். செலவும் தொல்லையும்தான் மிச்சம்.''

''ஏன் இப்படி அலுத்துக்கறே?''

''பின்னே என்ன? தரைக்குப் பினைல் போட்டுத் தேய்க்கறேன்; பாத்திரங்களுக்குப் பவுடர் போட்டுத் துடைக்கறேன்; பீங்கானுக்கென்று அலாதி. துணிமணிகளுக்குச் சோப்பும், சோப்புத் தூளுமாக வாங்கிப் போடறேன்; கட்டில், மேஜை, நாற்காலிகளுக்கு வேறே. எத்தனை விதம் போ! நாளுக்கு நாள் வேலை கூடறதே தவிர மனசுக்குத் திருப்தியே இல்லே.''

''எப்படித் திருப்தி வரும்? செய்வன திருந்தச் செய் என்ற பழமொழியை ஏட்டுச் சுரைக்காயாக நெனச்சுட்டா?''

''உனக்கென்ன, எல்லாம் கேலிப் பேச்சுத்தான். நான் படும் கஷ்டத்தை நீயும் பட்டால் இப்படிப் பேச மாட்டே. ஒன்று சுத்தமாக இருந்தால் இன்னொன்று இருப்பதில்லே. ஒன்று மாற்றி ஒன்று அழுது வடிகிறது. எதையும் சுத்தம் செய்ய ஒரே சாதனம் ஏதானு இருந்தா சொல்லு!''

''இருக்கு! அதைத்தான் சொல்ல வந்தேன்.''

''நெசமாவா?''

''ஆமாம், ஆமாம். அந்தச் சாதனம் பாக்கறதுக்கு நீர் சோப்பு மாதிரி இருக்கும். ஆனால் குணத்திலே ரொம்ப ரொம்ப உசத்தி. அதைக் கொண்டுத் தரையைத் துடைத்து விடலாம்; மொஸைக் தரையையும் சுத்தம் செய்து விடலாம். பீங்கான் தட்டுகள், எவர்சில்வர் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், வாஷ் பேசின், குளியல் அறை எல்லாவற்றையும் துலக்கலாம். டிராயிங் ரூம் மரச்சாமான்களையும் துடைத்து விடலாம். அப்படியே சோபா உறைகளையும் திரைச் சீலைகளையும் கூட நனைத்துப் பிழிந்து காயப்போட்டால் அழுக்குப் போய்ப் பளபளப்பாகிவிடும். நல்ல தண்ணீர், உப்புத் தண்ணீர் எதுவாயிருந்தாலும் பரவாயில்லே. அதில் நன்றாகக் கலந்து நிறைய நுரை கொடுக்கும்.''

''என்ன பொருள் அது. சொல்லேன்?''

''அதோட வாசனையும் எப்படிங்கறே? சாப்பிட்ட கையையும் அதில் அலம்பிக்கலாம்!''

''அப்படியா? என்ன அது? எங்கே கிடைக்கும்? முதலில் அதைச் சொல்லு.''

இப்படி யெல்லாம் தோழியால் புகழப்பட்டு, ஆசையைக் கிளறிவிடும் அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் 13ம் பக்கம் பார்க்கவும்.

கல்கி

நினைவுத்திரையில்.....

ஒருவர் அளவுக்கு மிஞ்சி லாபம் தட்டினால் அது சட்டத்துக்கு உட்பட்டதாயிருப்பினும் அதைக் கொள்ளை லாபம் என்றுதான் சொல்லுகிறோம். சட்ட திட்டங்களையெல்லாம் காற்றுவாக்கில் விட்டுவிட்டு 'பிளாக் மார்க்கெட்' வியாபாரம் செய்வோரைக் கொள்ளைக்காரர்கள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் குறிப்பிடுகிறோம். இதுபோன்ற ஒரு கைங்கரியத்தைச் சட்டத்தின் பெயரால் சர்க்காரே செய்வதாயின் அதை என்னவென்று வர்ணிப்பது? "அதிகாரக் கொள்ளை" என்றுதான் அதைச் சொல்ல வேண்டியிருக்கும்.

"என்ன சேதி"


கல்கி, அக்டோபர் 24, 1948

○

பொருளடக்கம்

பிலவங்க, ஆனி, 18 ❊ ஜூலை 2

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ❋ இதழ் 4

தமிழக பட்ஜெட்

தமிழக அரசாங்கம் வெளியிட்டுள்ள வரவு செலவு பட்ஜெட் பரவலாக எல்லாருடைய திருப்தியையும் சம்பாதித்துள்ளது. முதல் அமைச்சர் திரு அண்ணாதுரையையும், தி. மு. க. ஆட்சியையும் எப்படியாவது தாக்க வேண்டும் என்று கருத்துக் கொண்டவர்கள்கூட அதற்குப் போதிய விஷயம் கிடைக்காது திக்குமுக்காடுகின்றனர். இது திரு அண்ணாதுரை அவர்களின் சாமர்த்தியத்துக்கும் திறமைக்கும் எடுத்துக் காட்டாகும். திரு அண்ணாதுரை அவர்களின் முதல் பட்ஜெட் அவருக்குப் புதிதானதொரு புகழைத் தேடித் தந்திருக்கிறது.

நாட்டின் பொதுப் பொருளாதார நிலையையும், சமீபத்தில் மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள வரித் திட்டங்களையும் கூர்ந்து பார்ப்பவர்கள், அவை திரு அண்ணாதுரை அவர்கள் வகுத்துள்ள திட்டங்களை எப்படிப் பாதிக்கக் கூடும் என்று எச்சரிக்கை செய்யாமல் இருக்க முடியாது. பொருளாதார நியதிகள் அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கும் உத்தரவுகளுக்கும் அடங்காமல் தம் இயற்கைப்படியே நடப்பவை என்பதையும் கூறி எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் சென்னை, கோவை போன்ற நகர்ப்புறவாசிகளுக்குப் பெரும் ஆறுதல் அளிக்கும் திட்டம். இத்திட்டத்தை அமுல்படுத்த பட்ஜெட்டில் ஐந்து கோடி ரூபாய் அளவில் 'நிதிப் பொறுப்பு' இருக்குமெனக் கூறுகிறார் முதல் மந்திரி. வருவாய்க்கு அதிக வழியில்லாத நிலையில் இவ்வளவு பெரிய தொகையைக் கடும் வரி விதிப்பின்றியே ஈடுகட்ட முயன்றிருப்பதைப் பாராட்ட வேண்டும். ஆயினும், மத்திய சர்க்கார் ரயில் கட்டணங்களை உயர்த்தியிருப்பதனாலும் வேறு சில வரிகளினாலும் மத்தியதர வகுப்பினரின் வாழ்க்கைச் செலவு உயரத்தான் செய்யும். விவசாய மக்களின் செலவினங்களும் அதிகமாகவே செய்யும். ஆனால் ராஜ்ய சர்க்காரின் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம் காரணமாக, நெல் கொள்முதல் விலையை ஏற்ற முடியாத நிலை ஏற்படும். கொள்முதல் விலையைக் குறைவாக வைத்து உணவு தானியத்தைப் பலாத்காரமாக வாங்க வேண்டிய நிலையில் சர்க்கார் உள்ளது. விவசாயி தான் உற்பத்தி செய்த பண்டத்தைக் கட்டுப்படியாகாத விலைக்கு அரசாங்கத்துக்குக் கட்டாயமாக அளிக்க வேண்டிய நிலையில் தொடர்ந்திருந்தால் அவன் எப்படி ஊக்கமாக வேலை செய்ய முடியும்? விவசாயி ஊக்கம் இழந்தால் உற்பத்தி எப்படிப் பெருகும்? சர்க்கார் நீர்ப்பாசன வசதி, உர வசதி ஆகியவை செய்து தந்துதான் என்ன பயன்?

நகர்ப்புறவாசிகளுக்கு ரூபாய்க்குப் படி அரிசி கொடுப்பதைவிட விவசாயப் பெருமக்களுக்கு உணவு உற்பத்தி செய்வதில் மேலும் மேலும் ஊக்கம் வளரும்படி செய்வதே அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டும்.

அடுத்தாற்போல் பஸ் போக்குவரத்தை அரசாங்கம் படிப்படியாக ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதாவது எழுபத்தைந்து மைல்களுக்கு மேல் ஓடும் தனியார் பஸ்களின் லைசென்ஸ் காலம் முடிந்தவுடன், அந்த லைசென்ஸைப் புதுப்பிக்காமல், அந்த பஸ்ஸையும் சர்க்கார் வாங்காமல், அதாவது எந்தவித நஷ்டஈடும் தராமல் அந்தச் சாலைகளில் சர்க்கார் பஸ்களை ஓட்டுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். தனி பஸ் முதலாளிகளுக்கு நஷ்டஈட்டுத் தொகை தருவதைப் பற்றியோ தராததைப் பற்றியோ நாம் கவலைப்படவில்லை. ஆனால் சர்க்கார் மட்டும் அச்சாலைகளில் ஏகபோகமாக, எவ்விதப் போட்டியுமின்றிப் பஸ் ஓட்ட முயல்வது நாளடைவில் பொதுமக்களுக்குப் பெரும் நஷ்டமாகவும் கஷ்டமாகவும் முடியும். இது சர்க்கார் ஏகபோகமாக எடுத்து

நடத்தும் எந்தத் தொழிலிலும் விளையக்கூடிய நிலைதான். காங்கிரஸ் ஆட்சியில்தான் இப்படி நடந்தது, தி. மு. க. ஆட்சியில் நடக்காது என்று நினைத்துக் கொண்டால் அது வெறும் பிரமை. சர்க்கார் நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் தனியார் நடத்தும் ஸ்தாபனங்களுக்குமிடையே போட்டி இருந்தால்தான் இரண்டும் சீராக, பொதுமக்களுக்கு லாபகரமாக இருக்கும். இதுதான் இயற்கை விதி. இவ்விதிக்கு மாறுபட்டு நடந்தால் இவ்விஷயத்தில் காங்கிரஸ் அடைந்த அவப்பெயர் இந்த ஆட்சியையும் தொடரும்.

சமீபத்தில் சர்க்கார் பஸ்களில் செங்கல்பட்டுக்கும் மதுராந்தகத்துக்கும் குறைந்த கட்டணம் என்று அறிவித்தவுடன், தனியார் நடத்தி வந்த பஸ்களிலும் கணிசமாகக் கட்டணங்கள் குறைக்கப்பட்டு விட்டன! இதை உணர்ந்து தமிழக அரசாங்கம் பஸ் போக்குவரத்தை ஏகபோக சர்க்கார் உடைமையாக்காமல் இருக்க வேண்டும்.

கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் பற்றி ஒரு வார்த்தை. உண்மையாக மனமொப்பி இருவர் திருமணம் செய்து கொண்டார்களானால், அவர்கள் இதயத்தில் அந்நிலையில் அடையும் மகிழ்ச்சிக்கு வானகத்தையும் வையகத்தையும் பரிசாக அளித்தாலும் பொருட்படுத்த மாட்டார்கள்! அந்நிலையில் அரசாங்கப் பதக்கத்தையா பெரிதாக மதிக்கப் போகிறார்கள்? அரசாங்கப் பரிசுக்காகக் கலப்புத் திருமணம் நடைபெறாது.

மொத்தத்தில் கடும் வரி விதிப்பின்றி, நடுத்தர வர்க்கத்தினரின் கஷ்ட கசங்களை மனத்தில் கொண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து யாவருடைய பாராட்டுதலையும் பெற்றுவிட்டார் திரு அண்ணாதுரை. —டீ.

கௌரவம் பிழைத்தது!

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் நிகழ்ந்த லீட்ஸ் டெஸ்டின் மூன்றும் நாள் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு விநோத அநுபவத்தைத் தந்தது. காலையிலேயே ஆட்டம் முடிந்துவிடும் என்று அவர்கள் ஹோட்டல் அறைகளைக் காலி செய்து கொண்டு 'மாட்ச்' காண வந்தார்கள். ஆனால் மூன்று மணிக்கு இந்திய ஆட்டக்காரர்கள் போடு போடென்று எண்ணிக்கைகளைக் குவித்து ஏமாய்க்கவே மறுபடியும் டெலிபோன்களுக்குச் சென்று ஹோட்டல் அறைகளுக்கு 'புக்' செய்யும் படியாயிற்று. முதலில் இந்திய கோஷ்டி படு தோல்வி யடைந்து விடும் என்று இருந்த நிலையை மாற்றிக் காப்டன் பட்டோடியும் அவரது கோஷ்டியினரும் திறமையாக ஆடிக் கௌரவமான தோல்விக்கு வழி ஏற்படுத்தி இந்தியாவின் பெருமையை நிலைநாட்டினார்கள். வாடேகர், இன்ஜினீயர், பட்டோடி, ஹனுமந்த் சிங் ஆகியோர் இந்த முதல் டெஸ்டில் இந்தியா படுதோல்வியடையாமல் காப்பாற்றினார்கள். அத்துடன் விருவிருப்பாகவும் ஆடி ரன்களையும் குவித்தார்கள். இந்திய கோஷ்டி முதல் ஆட்டத்தில் 164 ரன்களே எடுத்ததனால் மறுபடியும் ஆட வேண்டிய நிலை ஏற்பட்டது. தங்கள் இரண்டாம் இன்னிங்ஸில் இந்திய கோஷ்டியினர் ஆடிய ஆட்டம் மறக்க முடியாதது. மொத்த எண்ணிக்கையான 510ம் பட்டோடியின் 148ம் கிரிக்கெட் சரித்திரத்தில் நிரந்தர இடம் பெறப் போகிறவை. மறுபடியும் இங்கிலாந்து ஆட வேண்டிய நிலையை இந்திய ஆட்டக்காரர்கள் ஏற்படுத்தியது ஓர் அசுர சாதனை. இந்திய கோஷ்டியைப் பற்றிக் குறைவாக எடை போட்டவர்களுக்கு லீட்ஸ் டெஸ்ட் ஒரு திருப்பத்தைக் கொடுத்தது.

இரண்டாவது டெஸ்ட் பற்றிய முதல் இரண்டு நாள் செய்திகள் ஏமாற்றமே அளிக்கின்றன என்றாலும் பட்டோடியின் தலைமையில் நமது ஆட்டக்காரர்கள் இறுதிவரை சளைக்காமல் போராடி இந்தியாவின் பெருமையை நிலைநாட்டுவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

காமகோடியின் கருணைமொழி

நாம் பண்ணுகிற தப்பு எவ்வளவு என்று நமக்குத்தான் தெரியும். நம்மைக் கெட்ட குணமுள்ளவராகக் கருதி பலர் வைதிருப்பார்கள். அவர்களுக்கும்கூட உள்ளுக்குள் நாம் பண்ணும் அக்கிரமம் தெரியாது. தெரிந்தால் இன்னும் அதிகமாக வையவேண்டியிருக்கும். நாம் பண்ணாத தப்புக்குத்தான் அவர்கள் பொதுவாக வைது கொண்டிருப்பார்கள். பண்ணுகிற தப்பு நமக்குத்தான் தெரியும். ஆகவே, நாமே தான் நம்மை வைது கொள்ள வேண்டும்.



நம் குணத்திலுள்ள நல்லதைப் பிறருக்குக் காட்டுகிறோம். நம்மிடமுள்ள துர்க்குணத்தை நம்மிடமே மூடி வைத்துக் கொள்கிறோம். ஆனால் இது எப்படியும் நமக்குத் தெரியும். இதற்காக அழுவதில் பிரயோஜனமில்லை. ''இனிமேல் இம்மாதிரித் தப்புகளைச் செய்யாதிருக்கும் உறுதியை, சித்தசுத்தியை எனக்குக் கொடுக்க மாட்டாயா?'' என்று ஸ்வாமியைப் பிரார்த்தித்துக் கொள்வதுதான் நமது கடமை. ஊருக்கு இதைச் சொல்ல வேண்டாம். சறுக்கிச் சறுக்கி விழுவோம். இது சுபாவம். ''இனியேனும் இப்படிச் சறுக்காதிருக்க அநுக்கிரகம் பண்ணு அம்மா'' என்று ஒவ்வொரு நாளும் அம்பாளிடம் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

சீனத்துடன் நமக்குள்ள விவகாரங்களைச் சர்க்கார் கையாள்கிற முறை பற்றி என்னென்பது? இன்னமும் சஞ்சலித்துக் கொண்டேயிராமல் சீன சர்க்காருடன் நமது ராஜரீகத் தொடர்புகளை முறித்துக் கொள்வதற்கான சகலமும் நடந்து விட்டது. எதிராளியைக் காயப்படுத்துவதற்குப் பயந்து கொண்டே அடிக்கிறது நம் சர்க்கார். இதை நீடிப்பது வெட்கக்கேடாகும். மக்களின் உணர்ச்சிப் பெருக்கும் எல்லை மீறிவிடும். அநாகரிகத்துக்கு அடிபணிந்து தேசிய கௌரவத்தைப் பலி கொடுக்கிறது நமது சர்க்கார்.

எதிராளி எடுக்கிற அநாகரிக நடவடிக்கைகளையே நாமும் திருப்பிச் செய்வது, இதே போன்ற பல சம்பவங்களுக்குத் தூண்டுகோல் போடுமேயன்றி, விவகாரத்தைத் தீர்க்க உதவாது. இம்மாதிரி அநாகரிக நடவடிக்கைகள் நாள்தோறும் அதிகரித்து, கடைசியில் இவற்றைத் தொடங்கியது யார் என்பதே புரியாத அளவுக்கு வாதப் பிரதிவாதங்கள் மிகுந்துவிடும். நாகரிகமுள்ள நம் சமுதாயம் அநாகரிகத்துக்குப் பிரதியாக அநாகரிகம் இழைப்பது தற்கொலைக்குச் சமானம். சீனர்களின் அநாகரிகத்தை முடிக்க ஒரே வழி அரசியல் உறவைத் துண்டிப்பதே.

அரசியல் தொடர்பை முறித்தால் ஜன்னலை மூடினாற் போலாகும் என்கிறார் ஸ்ரீ சாக்ளா. ஜன்னலைத் திறந்திருப்பதைச் சீனம் சிறிதும் விரும்பாத போது இப்படிச் சொல்கிறார். ஜன்னல் திறந்திருப்பதால்தான் அவர்கள் அதன் வழியே மானபங்கத்தை அனுப்பி வைக்க முடிகிறது. இந்நிலை தொடர்ந்தால், அயல்நாடுகளில் பணி புரியும் நம் அதிகாரிகளின் நம்பிக்கை சிதறிப்போகும். மொத்தத்தில் நாட்டின் கண்ணியமே குன்றும்.

ஃஃஃ

சீனம் ஹைட்ரஜன் குண்டு வெடித்து விட்டது. ஆக்கிரமிப்பு நோக்கத்துக்காக ஹைட்ரஜன் குண்டைப் பயன்படுத்தப் போவதில்லை என்று 'வாக்குறுதி'யும் தந்திருக்கிறது. ஹைட்ரஜன் குண்டு இல்லாமலே ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய நாடு அது என்பதை நாம் கண்டாயிற்று.

சீனம் தனது பலத்தை வெளி உலகுக்குக் காட்டிக் கொள்ள ஹைட்ரஜன் குண்டு உதவியதாகத் தோன்றலாம். ஆயினும், இதனால் அங்கு நடக்கும் உள்நாட்டுப் பூசலை மறைத்துவிட முடியாது. ஹைட்ரஜன் குண்டைவிட இந்த உள்நாட்டுப் பிளவே நமக்குத் தொடர்புள்ளது. குண்டு வெடிப்பால் நாம் பயந்து விடலாகாது.

ஃஃஃ

நமது சர்க்காரின் பொருளாதாரக் கொள்கை, அந்நியக் கொள்கை இவற்றிடையே எது அதிக முட்டாள்தனமானது என்று கண்டுபிடித்துப் பரிசு தருவது கடினம். உலக வர்த்தகத்தையும், கப்பல் போக்குவரத்தையும் தடுக்கிற சக்தியை எகிப்துக்குத் தருவதற்காக ஸ்ரீ சாக்ளாவின் தலைமையில் ஒரு கூட்டம் ஐ. நா.வுக்குச் சென்றிருப்பதில் ஏதேனும் பொருள் உள்ளதா? பதினோராண்டு அமைதியைக் குலைத்து இஸ்ரேலைத் தாக்க முனைந்துள்ளவர்களின் சார்பில் நாம் பேசுவதில் அர்த்தம் இருக்கிறதா? நாஸரின் திட்டத்தைப் போர்க்களத்தில் இஸ்ரேல் தோல்வியுறச் செய்த பின்னும், அந்த முடிவை மாற்ற விரும்புகிறது நம் சர்க்கார். ஐ. நா.வில் பனிப் போர் நிலை உண்டாவதற்கு உதவி புரிகிறது நம் சர்க்கார்.

அரசியல் நீதியளிக்கும் உலக மன்றமாக இருக்க வேண்டிய ஐ. நா. ஸ்தாபனம், பெரும்பான்மை — சிறுபான்மை கோஷ்டிகளால் அலைக்கழிக்கப்படும் பனிப்போரின் நிலைக்களனாகி விட்டால், அமைதியிலும் நியாயத்திலும் உலகம் வைத்துள்ள நம்பிக்கை சிதிலமாக வேண்டியதுதான்.

ஃஃஃ

சர்க்காரின் ஆட்சி மொழிக் கொள்கை தெளிவு பெறாத வரையில் திருப்திகரமான மசோதா தயாரிப்பது அசாத்தியம். இரண்டு திசையிலும் முகம் இருப்பதுபோல் இரு சாராருக்கும் பிடித்தமான வகையில் அறிக்கைகள் வேண்டுமாயின் வெளியிடலாம். ஆனால் மசோதா வகுக்கும் போது வாசகத்தில் தெளிவு அத்தியாவசியம். கொள்கை தெளியாதவரை தெளிவான வாசகத்தில் சட்டம் செய்ய முடியாது.

ஃஃஃ

நாகரிக வாழ்வுக்கு ஆடை அணிவது அவசியம். ஏன் என்று கேட்டால் இதை நிரூபிக்க முடியாது. இதே போலத்தான் தருமத்துக்கு இணைந்த அன்பும், அவரவர் உள்ளத்தில் உதிக்கும் காதலும் தனி மனிதப் பண்புகளை வளர்க்கவும் காக்கவும் அத்தியாவசியமாயுள்ளன. பாரதத்தின் காதற் பண்புகள் புராணங்களிலிருந்து கிடைப்பவையே. இவையெல்லாம் பகுத்தறிவுக்குப் பொருந்தாமலிருக்கின்றனவே என்று விட்டு விட்டால், ஆடை உடுப்பதை விட்டுப் 'பகுத்தறிவு'டன் உலவுபவனின் நிலைமையையே அடைவோம். அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் இருப்பவர்களைப் போல் நாமும் அன்புக்குப் பதில் அப்பட்டமான காமப் பசியையும், பசு தருமத்தையும் பின்பற்ற வேண்டியதில்லை. ''நமது இலக்கியத்தை மாசுபடுத்தும் காரியம் வாயு மண்டலத்தை மாசுபடுத்துவது போலவே உள்ளது — அதாவது அது நமது தேச எல்லையையும் தாண்டிப் பரவுகிறது'' என்று நியூயார்க்கிலிருந்து வரும் 'ஸாடர்டே ரிவ்யூ'வில் ஒரு எழுத்தாளர் கூறுகிறார். நமது புராணங்களை விட வேறெங்கு

காதலை நல்ல முறையில் வருணித்துக் காணப் போகிறோம்? அவை சாதாரணமாக உள்ளத்தில் தோன்றும் காதல் வேகத்தைச் சொல்லும் இலக்கியங்கள் மட்டும் அல்ல. நமது இனத்தோடு, இரத்தத்தோடு ஸ்தூலமாகக் கலந்து நம் மனத்தில் சக்தியுடன் பதிந்து விட்டவை.

ஃஃஃ

சமீபத்திய இஸ்ரேல் — அரபுப் போரின் விளைவாக, புராதனமும் புனிதமும் பொருந்திய ஜெருஸலத்தை உலக ஸ்தாபனமே நிர்வாகம் செய்ய முன் வந்து, அங்குள்ள பல சமயத்தினரிடையே சச்சரவு மூளாமல் காக்குமாயின் அது ஒரு வரவேற்கத்தக்க விஷயமாயிருக்கும். மேற்காசியாவில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு வேறெந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும், அமைதி நகரமாகிய ஜெருஸலத்தை எல்லா மதங்களுக்கும் பொதுவாகப் பரிபாலிக்கும் யோசனையை இஸ்ரேல் வரவேற்க வேண்டும். இஸ்ரேலின் வெற்றி அமைதியின் வெற்றியாக, ஒற்றுமையின் வெற்றியாக இருக்க வேண்டும்; இஸ்ரேலுடைய படைபல வெற்றியாக மட்டும் இருக்கலாகாது. யுத்தத்தில் வெற்றி என்பது ஈசுவர சங்கற்பத்தால், ஆண்டவன் அருளால் ஏற்படுவது. அந்த ஆண்டவன் எல்லாருக்கும் கடவுள். ஈசுவரன் என்றும், அல்லா என்றும், யெஹோவா என்றும் வெவ்வேறு பெயரிட்டு வணங்கும் அனைவருக்கும் அவனே கடவுள்.

ஃஃஃ

இந்தியாவின் விவசாய நிலையை மீண்டும் பரிசீலித்துப் பார்ப்பதற்கு உதவியாக மிகவும் முக்கியமான கருத்துக்களை ஸ்ரீ க்ராக்கர் அவர்கள் நேருஜியைப் பற்றிய நூலில் கூறியுள்ளார் :

> நிலச் சொந்தக்காரர் என்ற வகுப்பு அழிக்கப்பட்டு விட்டது. நிலச்சுவான்தார்களை இல்லாமற் செய்ததால் அரசியல் சாஸனம் வாக்குறுதி தந்த சொத்துரிமைகள் மீறப்பட்டதுமட்டுமல்ல; இதோடு நில வரம்புச் சட்டங்களும் சேர்ந்ததால், இந்திய கிராமங்களில் நல்ல வாழ்க்கைத் தரத்திலிருந்த ஒரே வகுப்பும் எடுபட்டு விட்டது. நல்ல வாழ்க்கைத் தரத்திலிருப்பவர்களால் மட்டுமே கிராம மக்களுக்கு உதவி புரிய முடியும். அதோடு அவர்களால்தான் விவசாயப் பண்ணைகளில் புதுமுறைகளைப் பரிசோதனை செய்யவும், தொழில் நுணுக்கங்களை முன்னேற்றவும் முடியும். இப்படிப்பட்டவர்களை இந்திய கிராமப்புறம் இழந்து விட்டது.

ஃஃஃ

பிரதேச மொழியிடமுள்ள பற்று வேறு, இந்தியாவின் தொடர்பு மொழி ஆங்கிலமா ஹிந்தியா என்ற பிரச்னை வேறு. ஒன்றாகக் குழப்பப்பட்டு வந்த விஷயம் இப்போது தெளிவு பெற்று வருவது திருப்திக்குரிய விஷயம். தமிழகத்தின் அரசாங்கம், மக்கள், மாணவர் அனைவரும், இந்தியாவின் மற்ற பகுதிகளோடும் மத்திய சர்க்காருடனும் தமிழ்நாடு கொள்ளும் தொடர்புகள் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும் என்பதற்கு அதிகாரபூர்வமான அங்கீகாரம் பெறுவதில் ஏகோபித்து நிற்க வேண்டும்.

பத்திரிகை உலகைப் பொறுத்த மட்டில் இந்தியாவில் ஆங்கிலம்தான் தொடர்பு மொழியாயுள்ளது. மற்றத் துறைகளிலும் அவ்வாறே இருக்கச் செய்வதற்குப் பத்திரிகைகள் துணை புரியவேண்டும்.

ஃஃஃ

'எந்தச் சூழ்நிலையிலும் தன் அனுபவங்களைச் சிக்கல் மயமாக்கி, தன்னை இன்றியமையாதவராகச் செய்துகொள்வதுடன், நாள்தோறும் தன் உதவியாளர் பட்டாளத்தைப் பெருக்கத் தேவை உண்டாக்குபவரே சரியான அதிகார வர்க்கப் பிரதிநிதி' — இப்படி ஒருவர் இலக்கணம் கூறியுள்ளார்.





பஞ்சாமிர்தம்

"கொக்கி"

சென்னை சட்ட மன்றத்தில் முதல்வர் திரு அண்ணாதுரை படித்தளித்த 'பட்ஜெட்' அறிக்கையின் ஒரு தனிச் சிறப்பு அம்சமாக அதன் தமிழ் நடை அமைப்பைக் குறிப்பிடலாம்.

"....சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளான சென்னையிலும், கோவையிலும் பட்டினம் படி அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கத் தொடங்கியுள்ளோம். முப்பத்தோரு லட்சம் மக்கள் இப்போது இத்திட்டத்தினால் பலன் துய்க்கின்றனர். இத்திட்டம் உணவுதானிய வழங்கல் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ள பிற பகுதிகளுக்கும், உணவுதானிய இருப்பினைப் பொறுத்தும், வெளிச் சந்தையில் விலைவாசிகளின் போக்கினை ஒட்டியும் படிப்படியாக நீடிக்கப்படும்....."

இவ்வாறு தென்னு தமிழில் சில உணவுக் கருத்துக்கள் 'அன்ன நடை' போட்டுச் செல்கின்றன!




ஃ ஃ ஃ

மைசூர் மேல் சட்டசபை நடைபாதையில், பத்மஸ்ரீ பதக்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதன் சொந்தக்காரரைப் போலீஸார் தேடிக் கொண்டிருக்கிறார்கள். —செய்தி

சொந்தக்காரரைக் கண்டு பிடித்தபின், ஒரு பொருளைத் தொலைத்தவருக்குப் போலீஸார் பத்மஸ்ரீ பதக்கம் அளிப்பது இதுதான் முதல் தடவையாகவும் இருக்கும்!

ஃ ஃ ஃ

பீஹாரில் பஞ்சத்தில் தவிக்கும் மக்களுக்கு அளிக்கும்படி கூறி அமெரிக்கா இலவசமாக அனுப்பி வரும் கோதுமைப் பொருள்களில் இடையே யாரோ இல்லியில் கற்களைக் கலப்பது தெரிய வந்திருக்கிறது. இந்த விவரங்களைப் பீஹார் உதவி முதன்மந்திரி திருபார்களிடம் கூறி, ஒரு பை நிறையப் பொடிக் கற்களையும் காட்டினாராம். கற்கள் எந்தக் கட்டத்தில் யாரால் சேர்க்கப்படுகின்றன என்பதைக் கண்டுபிடிக்குமாறு யூனியன் சர்க்காரை அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். "பீஹாரில் உணவுக்குத்தான் பஞ்சமே தவிர கற்களுக்கு அல்ல. அவற்றை அனுப்ப வேண்டாம்!" என்று யூனியன் சர்க்கார் பொதுவாக ஓர் எச்சரிக்கை விடுத்தால் நலமாயிருக்கும்!



ஃ ஃ ஃ

சென்னை உயர்நீதி மன்றத்தின் புகழ்பெற்ற நீதிபதியாக விளங்கிய ஸர் டி. முத்துசாமி அய்யர் தாம் எங்கு பிரயாணம் செய்தாலும் ஒரு புத்தகத்தைக் கையோடு தவறாமல் எடுத்துச் செல்வது வழக்கம். அதுதான் திருக்குறள். அந்தப் பேறு இப்போது சென்னை மாநில மக்கள் அனைவருக்கும் பஸ் பிரயாணங்களில் கிடைக்க வழிவகுத்துத் தந்திருக்கிறது சென்னை அமைச்சரவை. அரசாங்க பஸ்களில் வள்ளுவர் பாடல் ஒன்றுடன் கூடிய வள்ளுவர் படம் ஒன்று வைப்பதென்று முடிவு எடுத்திருப்பதையே குறிப்பிடுகிறோம். பிரயாணம் செய்யும்போது கூடவே, நம்முடன் வள்ளுவரும் வந்து கொண்டிருப்பாரல்லவா?

பிரயாணிகளுக்கு மட்டுமல்ல, பஸ்களுக்கும் அவர் துணை நிற்பார். வழியில் பஸ்கள் நின்று விட்டால் எல்லாரும் இறங்கிப் போய் விடுவார்கள். பஸ்ஸுக்கும், கண்டக்டர், டிரைவருக்கும் அவர் இருப்பது ஒரு துணையாயிருக்குமல்லவா?



ஃ ஃ ஃ

"டேய், அம்பி! இந்தா; உனக்குப் பெப்பர்மின்டு. காலேஜிலே எனக்கு இடம் கிடைச்சுதுடா. சாப்பிடு!"

"பூ! இது என்ன பிரமாதம்! ஒண்ணாவது கிளாஸிலே நீ இடம் பிடிச்சிருந்தால் எங்க அப்பா உனக்குப் பாதாம் அல்வாவே வாங்கித் தந்திருப்பாரே!"

மின்னல் தாக்குதலும் மகத்தான வெற்றியும்

பதின்மூன்று அராபிய நாடுகளைத் தன் எதிரிகளாகக் கொண்டிருந்த போதிலும் நாலாபுறமும் அராபிய நாடுகளால் சூழப் பட்டிருந்த போதிலும் இஸ்ரேல் ஜெயக் கொடி நாட்டியுள்ளது. இஸ்ரேலியர் அடைந்த மகத்தான வெற்றி குறித்து உலகமே வியப்பில் ஆழ்ந்திருக்கிறது. அராபியரின் தோல்விக்கான காரணங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது 'டைம்' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை. அதன் சில பகுதிகள் :

ஃ ஃ ஃ

அயல்நாடுகளிலிருந்து ராணுவ உதவி எவ்வளவுதான் பெற்ற போதிலும் பயனி ராது. வெற்றிபெற வேண்டும் என்ற உறுதி யும் திறமையான தலைமையும் இல்லாது போனால். எகிப்துக்குக் கிடைத்திருக்கும்



எஷ்கால்

ருஷ்ய ராணுவ உதவி இருநூறு கோடி டாலர்கள் பெருமானமுள்ளது. ருஷ்யர்களின் மேல்பார்வையில் பத்தாண்டு காலம் பயிற்சியும் நடந்திருக்கிறது. ஆயினும் பயன்?

ஃ ஃ ஃ

விடிவதற்குச் சற்று முன்னதாகவே இஸ்ரேலிய மிராஜ் — 3 யுத்த விமானங்கள் ஸினாய் தீபகற்பத்தில் ஒரே சமயத்தில் நான்கு எகிப்திய விமானத் தளங்களைத் தாக்கின. ருஷ்யாவில் தயாரான இருநூறு மிக் — 21 யுத்த விமானங்கள் தரையிலிருக்கும்போதே அழிக்கப்பட்டன. இதே சமயத்தில் ஜோர்டான், ஸிரியா, ஈராக் ஆகிய நாடுகளிலும் விமானத் தளங்கள் இஸ்ரேலிய யுத்த விமானங்களால் தாக்கப்பட்டன.

தாக்குதலின்போது விமானிகள் மிகச் சாமர்த்தியமாகச் செயல் பட்டார்கள். ஸினாய் தீபகற்பத்தில் இருந்த விமானத் தளங்களை அவர்கள் நேராகக் கிழக்கி லிருந்து வந்து தாக்கவில்லை. இதற்கு மாறாக மத்தியதரைக் கடல் மீதாகப் பறந்தார்கள்; பின்னர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து வந்து தாக்கினார்கள். வேறு சில விமானங்கள் இன்னும் தொலைவாகச் சென்று திரும்பி, மேற்கிலிருந்து வந்து தாக்கின. விமானத் தாக்குதல் நடந்தாலும் கிழக்கிலிருந்துதான் வரும் என்று எண்ணி யிருந்த எகிப்தியர் இதனால் திணறிப் போனார்கள். இதைவிட ஆச்சரியமான விஷயம் இஸ்ரேலிய விமானிகள் இம்மியள வும் குறி பிசகாமல் தங்கள் ஏவுகணைகளை அனுப்பித் தரையிலிருந்த அராபிய விமானங் களை அழித்ததுதான். ஓர் ஏவுகணையோ (ராக்கெட்) அல்லது ஒரு குண்டோகூட




தயான்

வீணாகவில்லை; அவற்றில் ஒன்றுகூடத் தளத்தில் விமானம் ஓடும் சாலையைத் (ரன்—அவே) தாக்கவில்லை; சுற்றிலுமிருந்த மணல்பாங்கான பூமியில் குழி பறிக்கவில்லை.

விமானங்கள் திரும்பி வந்தன; எரிபொருள் நிரப்பிக் கொண்டன; மீண்டும் கிளம்பின. அராபிய உலகில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட விமானத் தளங்களில் இருந்த நானூறு விமானங்கள் சில மணி நேரங்களில் பொசுங்கிப் போயின. இதில் எகிப்து மட்டுமே முந்நூறு விமானங்களை இழந்தது. இஸ்ரேயில் தன்னிடம் மொத்தமிருந்த நானூறு விமானங்களில் பத்தொன்பதை மட்டுமே பறி கொடுத்தது.

ஃ ஃ ஃ

இஸ்ரேலிய வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம் 1953 முதல் 56 வரை பாதுகாப்பு மந்திரியாக இருந்த தயான், படை திரட்டும் காரியம் ஒரு துரிதமான இயந்திர இயக்கம் போல் நடைபெறுமாறு செய்து வைத்திருந்ததுதான். இதனால் 48 மணி நேரத்துக்குள்ளாக இஸ்ரேயில் இரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம் சிப்பாய்களை யுத்தத்துக்கு அனுப்ப முடிந்தது! இப்போது மீண்டும் பாதுகாப்பு மந்திரியாகப் பதவி ஏற்றுக் கொண்டிருக்கும் தயான் யுத்தம் தொடங்கி அரை மணி நேரத்தில் வானொலி மூலம் மக்களுக்கு அழைப்பு விடுக்கச் செய்தார். ராணுவப் பயிற்சி பெற்ற அனைவரும் அவசரம் அவசரமாக முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட இடத்துக்கு ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தார்கள். அங்கு முன்னேற்பாடு காரணமாக வாகனங்கள் தயாராகக் காத்திருந்தன, அவர்களை ஏற்றிச் செல்ல. பஸ்கள், லாரிகள், வான்கள், டாக்சிகள், தனி நபர்களின் மோட்டார்கள் அனைத்தும் பயனாயின. இவர்களை டாங்குகள் அணி வகுத்து நின்ற இடத்துக்கு அழைத்துச்செல்ல. டாங்கியினுள்ளேயே இவர்கள் க்ஷவரம் செய்து கொள்ள 'ரேஸரு'ம் பல் தேய்க்க 'பிரஷ்'ஷும், இரும்புத் தலைப்பாகையும் உள்பட சகலமும் சித்தமாக இருந்தன. அராபியர்களுடைய விமானத் தளங்களின் அமைப்பு




இஸ்ரேயிலிருந்து கிளம்பும் இரு அம்புக் குறிகள் விமானத் தாக்குதல் நடைபெற்ற திசைகளைக் குறிப்பிடுகின்றன.

முதல் பாலைவனத்தில் எந்த எந்த மண் மேடுகளின் பின்னால் எதிரிகள் பதுங்கியிருக்கிறார்கள் என்பது வரை சகல விவரங்களையும் இஸ்ரேலிய ஒற்றர் இலாகா அறிந்து வைத்திருந்தது. பிறகு படை முன்னேறக் காத்திருப்பானேன்?

ஃ ஃ ஃ

விமானப் படையினரைப் போலவே தரைப் படையினரும் எதிர்பாராத சமயத்தில் மின்னல் வேகத் தாக்குதல் நடத்தினர். 1956 சினாய் போரிலும் தயான் இதே யுத்த



எட்டு வருடங்களாக சம்பள உயர்வே பெறாத டாலரீஸ்வரர்!

உலகில் மிகப் பெரிய கம்பெனியான 'ஜெனரல் மோட்டார்ஸி'ன் வருடாந்தர அறிக்கை சமீபத்தில் பங்குதாரர்களுக்கு வாசிக்கப்பட்டது.

'சேர்மன்' சம்பளத்தைப் பற்றி விவாதம் எழுந்தது. சேர்மன் சோனர் பேச ஆரம்பித்தார்: "நான் போன வருடம் மட்டும் 790,000 டாலர் வாங்கினேன். அதில் போனஸும் சேர்ந்திருக்கிறது! போனஸ் அடிக்கடி மாறுகிறது, கம்பெனியின் லாப நஷ்டத்தைப் பொறுத்து. எனக்கு 200,000 டாலர் வருட சம்பளம். இந்தக் கம்பெனியில் எனக்கு மட்டும்தான் கடந்த எட்டு வருடங்களாகச் சம்பள உயர்வே இல்லை."

பங்குதாரர்களிடையே சிரிப்பொலி எழுந்தது. அதற்கிடையே சேர்மன், "நான் குறைப்பட்டுக் கொள்வதாக எண்ண வேண்டாம்" என்றார்.

ஆதாரம்: "டைம்"

தகவல்: என். கே. வேங்கடராமன்


தந்திரத்தைத்தான் கையாண்டார். இவற்றை விரிவாக, ''ஸினாய் யுத்த டயரி'' என்ற தமது புத்தகத்தில் எழுதியும் உள்ளார். அது மட்டுமல்ல, அந்த 56ஆம் ஆண்டு யுத்தத்தில் எகிப்தியரும் இஸ்ரேலியரும் போர் முறைகளில் செய்த தவறுகளையும் சுட்டிக்காட்டியிருந்தார் அந்நூலில். ஆனால் நாஸர் இந்தப் புத்தகத்தைப் படிக்கவில்லையோ அல்லது படித்தும் அவ்விஷயங்களை மறந்துவிட்டாரோ தெரியவில்லை.

இஸ்ரேலியத் துருப்புக்கள் எகிப்தியரைப் பின்னுக்குத் துரத்திக் கொண்டிருக்கையில் இஸ்ரேலிய விமானங்கள் அவர்களுக்குத் துணை நின்று, எதிர்ப்புச் சிறிதும் இன்றி எகிப்தியரின் பின்னணிகளைத் தாக்கிக்கொண்டிருந்தன. இந்த விமானங்களை இப்போது தாக்கித் துரத்தியடிக்க எகிப்திய விமானங்கள் ஏதும் மிஞ்சியிருந்தால்தானே? இரண்டே நாட்களில் நாஸருடைய இருநூறு டாங்குகள் அழிந்தன; அல்லது இஸ்ரேலியருடைய வசமாயின.

ஃ ஃ ஃ

இஸ்ரேலியத் துருப்புக்கள் ஸூயஸ் கால்வாயின் எல்லையிலிருந்த போது அது தயானுக்கும் அவரது தளபதிக்குமே சற்று ஆச்சரியமாக இருந்தது. தளபதி ராபின், ''இந்த அளவுக்கு முன்னேற இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் என்று நினைத்தேன்'' என்றார்.

இஸ்ரேலியர் இந்தப் போரை நிகழ்த்திய விதம் சரித்திரத்தில் இடம் பெறுவது மட்டுமல்ல; உலகெங்கிலும் உள்ள ராணுவப் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றுமே இந்தப் போரில் இஸ்ரேலியர் ராணுவக் கலையை அற்புதமாகக் கையாண்ட விதத்தை விரிவாக ஆராய்ந்து படிப்பினை பெற வாய்ப்பிருக்கிறது.




ரா. ராமானுஜம்



சென்னை நகர பஸ்களில் குறள் எழுதப் போகிறார்களாம். இதோ! கீழே சொல்லப்பட்ட குறள்களை எழுதினால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பது என் எண்ணம்!

- இடமிருக்க இல்லையெனக் கூறல்
  சில்லறையிருக்க நோட்டைக் கொடுத்தற்று.
- ஸ்டாண்ட் வருமுன் தாவிறங்கல் சாவா
  மருந்து வாங்கச் சென்றிறும் வேண்டற்
  பாற்றன்று.
- எல்லா பஸ்ஸூம் பஸ்ஸல்ல பாசஞ்சருக்கு
  நில்லா பஸ்ஸே பஸ்.
- எண்ணிக் கொடுக்கச் சில்லறை கொடுத்தபின்
  எண்ணுவம் என்பது இழுக்கு.
- தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
  நாவினாற் தடவிய டிக்கட்.
- எக் கியூவில் நின்றார்க்கும் இடமுண்டாம்
  இடமில்லை
  பஸ் க்யூவில் நில்லா மக்கட்கு.
- யாகாவாராயினும் பர்ஸ் காக்க
  காவாக்கால்
  சோகாப்பர் பிக்பாக்கெட்
  அடிக்கப்பட்டு.





2-ம் பக்கத்தில் கூறப்பட்ட
சுத்தத்துக்கு ஒரு சாதனம்



இதுதான் சுத்தத்துக்குப் பெயர் போன, ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி அளிக்கும் புது சாதனம். பெயர் ''க்ளீன் எய்ட்'' என்ன பொருத்தமான பெயர்! இதில் இரண்டு விதம் இருக்கிறது. பைன் மர வாசனை வேண்டுமானால் பச்சைத் திரவமுள்ள புட்டியை வாங்குங்கள். சந்தனத்தின் நறுமணம் வீச வேண்டுமானால் சந்தனக் கலர் திரவமுள்ள புட்டியை வாங்குங்கள்.

இலவச மாதிரி வேண்டுமானால் ஸ்பென்ஸர் கம்பெனியில் கேளுங்கள். குறிப்பிட்ட சில கால்டெக்ஸ் பெட்ரோல் பங்குகளிலும் கூடக் கிடைக்கும்.

என் அமைதியின்மைக்குக் காரணம்

ராம் மனோஹர் லோஹியா





''சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்த டாக்டர் லோஹியா அவர்கள் அன்போடு என்னைப் பார்க்க வந்திருந்த போது...... அவரது அமைதியின்மை வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனபடியால் அவர் வன்முறைகளை ஆதரித்தும் போவிடினும் கூட நான் வன்முறை பற்றியும், சட்ட விரோதமான நடவடிக்கைகள் பற்றியும் அவருடன் விவாதித்தேன்'' என்று 28-5-67 கல்கி இதழில் ராஜாஜி எழுதியிருந்தார்கள். இந்தச் சந்திப்பு குறித்தும், ராஜாஜியின் கருத்து குறித்தும் டாக்டர் லோஹியா அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் ராஜாஜியைப் பார்க்கப் போவது என்ற பழக்கத்தை நான் ஏற்படுத்திக் கொள்ளாதது எவ்வளவு மதியீனம்! இம்முறை தான் அவரைப் பார்த்தேன். சந்திப்பு அரை மணிதான். ஏனெனில், ராஜாஜி களைப்புற்றிருந்தார். அந்தக் குறைந்த நேரத்திலும் நான் அவ்வப்போது என்னையே சபித்துக் கொண்டிருந்தேன். எனினும் ராஜாஜி காட்டிய வாஞ்சையும், அவர் கிளறிவிட்ட பழைய நினைவுகளும் என்னை உணர்ச்சிப் பரவசமாக்கி விட்டன.

முதன் முதலில் நான் ராஜாஜியைச் சந்தித்தது 1934ம் ஆண்டு வாக்கில். அப்போது காங்கிரஸ் காரியக் கமிட்டி தனது தீர்மானம் ஒன்றால் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைக் கண்டித்திருந்தது. காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அக்கினி அஸ்திரம் வீசுவது போல் வாதப் பிரதிவாதங்கள் வீசப்பட்டன. இந்தத் தீர்மானத்தைக் காட்டி ராஜாஜி என்னைப் பயமுறுத்தினார் என்றே சொல்லலாம். பயமுறுத்தும் போதும் அவரது புன்னகையும் மென்மைப் பண்பும் மாறவில்லை. இவற்றில் அவர் ஈடில்லாத மன்னரல்லவா? 'காரியக் கமிட்டித் தீர்மானத்தை நான் கால் காசுகூட மதிக்கவில்லை' என்று சொன்னேன். 'கால் காசு' என்பதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் சொல்லும் போது டூப்பென்ஸ் (இரண்டு பென்னிகள்) என்று கூறுவது வழக்கம். நானும் அப்படியே சொன்னேன். நான் அவ்வளவு உக்கிரமாகக் கூறியதற்குச் சமாதானமாக அப்போது எனக்கு வயது இருபத்து நாலுதான் என்பதையும் சொல்லி விடுகிறேன். ராஜாஜி மென்மைப் பண்பு மாறாமல், ''நீங்கள் ருஷிய நாணயத்தில்தான் சூள் உரைப்பீர்கள் என்று நினைத்தேன். பிரிட்டிஷ் நாணயமான பென்னியில் ஆணையிட்டது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது'' என்றார்.

அவரது சாதுரியத்துக்கு எதிராக நான் சாதுரியம் பேச முன்பாகவே அவர் பள்ளி மாணவன் போல், ருஷிய நாணயங்களான ரூபிள், கோபெக் ஆகியவை பற்றி என்னைக் கேட்கத் தொடங்கி விட்டார். எதிராளிகளுக்கு வாய்ப்புத் தராமல் வித்தை செய்வதில் அவர் மன்னர் என்று புரிந்து கொண்டேன். அன்றிருந்த திட்சண்யமான, விழிப்புள்ள அறிவை முப்பத்து மூன்றாண்டுகளுக்குப் பின்னர், தொண்ணூறாவது பிராயத்தை நெருக்கும் இன்றும் அவரிடம் காண முடிந்தது.

ஒருவர் வெளிப் பார்வைக்கு முள்ளம் பன்றி போல் இருப்பதால் அவரைப் பற்றித் தாம் தவறான கருத்து கொள்வதில்லை என்று கூறினார். தம்மையே அனவரதமும் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதில் களிப்பு கொள்பவர்களைப் பற்றியும் பேசினார்.

நான் அமைதியிழந்திருக்கிறேன் என்று ராஜாஜி எழுதினார். இப்படி ஓர் எண்ணத்தை நான் அவரிடம் எப்படிப் பதிவு செய்தேன் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இப்போதெல்லாம் நான் விரைப்பின்றி விச்ராந்தியாகவே இருக்கிறேன்.

குறிப்பாக அவரைச் சந்தித்த அன்றைய தினம் நான் மன இறுக்கம் இன்றியே இருந்தேன். அப்படியும் என் உள்ளுக்கு உள்ளே ஏதோ ஓர் அமைதியின்மை இருந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். எனவே, நான் அமைதியிழந்திருப்பதாக ராஜாஜி சொன்னது தவறல்ல. நமது மக்களின் மனப்பான்மை பற்றி, அவர்களது சோம்பேறித்தனம் பற்றி, அவர்களின் அசிரத்தை பற்றி நான் உள்ளூற அமைதியிழந்துதான் இருக்கிறேன். நான் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்திருக்கிறேன் என்று ராஜாஜி சொன்னால் அது வாஸ்தவம்தான். ஆயினும் அடியோடு நம்பிக்கை இழந்து விட்டேன் என ராஜாஜி நினைத்தால் அது தவறு. இன்று ஏற்பட்டுள்ள நிலைமையில் நம்பிக்கை இழப்பதே ஒரு கடமை என்ற படிப்பினையைப் பெற்று விட்டேன். நான் விரும்புகிற அரசாங்கம் அமையாமல், நாளைக்கோ அல்லது பத்தாண்டுகளுக்குப் பின்போ நான் மாண்டு போனாலும், இது விதி விட்ட வழி என்று விலகியிருக்கக் கற்று விட்டேன்.

உச்ச ஸ்தானத்திலிருந்து தொடங்கி நமது அரசியல் நிலை என்னைச் சங்கடப்படுத்துகிறது. தேர்தல் என்று ஒன்று வருகிற போது வோட்டுச் செய்வது தவிர, மக்கள் தங்களது உணவு, சுதந்திரம், சுபிட்சம் யாவும் ஏதோ சுவர்க்கத்திலிருந்து வருவது போல் ஒரு தலைவரிடமிருந்தோ, அரசியல் கட்சியிடமிருந்தோ, சில அரசியல் கட்சிகளின் இணைப்பிலிருந்தோ வர வேண்டும் என விரும்புகிறார்கள். இவர்களில் சிலர் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளில் இறங்கி விடுகிறார்கள். இதை அவர்கள் தொடர்ச்சியாகவும் செய்வதில்லை, ஓர் அமைப்பாக எடுத்துக் கொண்டும் செய்வதில்லை. இப்படி ஒழுங்கீனமாகச் செயல்படுபவர்கள் இருப்பினும் நான் அஹிம்சையில் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்க வில்லை.

கடந்த சில ஆண்டுகளாக அஹிம்சை முறையைப் பின்பற்றுவதில் எனக்குச் சில சிரமமான பிரச்னைகள் தோன்றியுள்ளன. ஏராளமான மக்கட் கூட்டத்தை அஹிம்சை மாறாமலே செயலில் தூண்டி விடுவது எப்படி என்பது தெரியவில்லை. ஏதோ சில பிரிவினரை நல்ல முறையில் செயலில் ஈடுபடுத்த முடிகிறதெனினும், பொதுமக்கள் அனைவரையும் இது போல் மாற்ற முடியவில்லை. அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களின் சுறுசுறுப்பின்மை இதற்கு ஒரு காரணம். இந்த மந்தத்தனத்தை மாற்ற மருந்து இருப்பதாகத் தெரியவில்லை. சில கட்சிகளின் ஸ்தாபன அமைப்பு கட்டுக்கோப்பாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதனைப் பரிசீலித்துப் பார்த்தால், காரியாலய குமாஸ்தாக்கள் போல் சம்பளம் பெற்று முழு நேரமும் கட்சிக்காக வேலை செய்யும் சிலர்தான் இந்த ஸ்தாபனக் கட்டுக்கோப்பை உண்டாக்குபவர்கள் என்று தெரிய வரும். சோஷலிஸ்ட்களாகிய எங்களுக்கு இதற்கான பணம் கிடையாது. உள்ளூர் பணமாயினும் சரி, வெளியூர் பணமாயினும் சரி — பணத்தைக் கையாளும் திறமையை நாங்கள் எப்படியோ இழந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

நிலைமை இப்படியெல்லாம் இருந்தும் நான் வன்முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. கொள்கை ரீதியில் சொல்லப்போனால் நான் அஹிம்சா மார்க்கத்தில் வைத்துள்ள நம்பிக்கை வளர்ந்தே வருகிறது. இந்த அம்சத்தில் ராஜாஜி விசாரப்பட வேண்டிய அவசியமில்லை.

'நம் மக்களிடம் கட்டுப்பாடு இல்லாதது காரணமாகவே வன்முறையில் அவர்களை ஈடுபடுத்துவது அதிக அபாயகரமானது; கட்டுப்பாடில்லாதவர்களை அஹிம்சை முறையில் ஈடுபடுத்தி அவர்கள் தோல்வியுற்றாலும் அதனால் பாதகமான விளைவு ஏதும் இல்லை' என்று ராஜாஜி கூறினார்.

எவ்வளவு அற்புதமான கருத்து! ஆயினும் அதனால் என் பிரச்னை தீரவில்லை. என் பிரச்னை என்ன? அரசியலைச் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து உருவாக்க வேண்டும் என்பதே. என்னுடைய கட்சியைச் சேர்ந்த 20,000 அல்லது 30,000 பேரை எப்படித் தீவிரச் செயல் வீரராக்கி இயக்கி வைப்பது; அல்லது எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த— அல்லது ஒரு கட்சியையும் சேராத — லட்சம் பேர்களை எப்படித் திரட்டித் தீவிரச் செயல் வீரராக்கி, அவர்களால் நாட்டின் அரசியலை மாற்றுவது என்பதே என் பிரச்னை. இவர்கள் இதுவே தமது தொழில் அல்லது தொழிலின் ஓர் அங்கம் என்று கருதிச் சற்றும் தளராமல், தினந்தோறும் செயலாற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

சர்க்கார் சர்வாதிபத்தியம் — சோஷலிஸம் என்கிற மாறுபாட்டை நான் தெளிவாக்க வேண்டும். ராஜாஜி அடிக்கடி சொல்வது போலவே நானும் சில சமயங்களில் 'சோஷலிஸம் என்பது அடிமை வாழ் முறை' என்று சொல்வதுண்டு. ஆனால் இச்சமயங்களில் நான் 'சோஷலிஸம்' என்று குறிப்பிடுவது காங்கிரஸ் கட்சியின் சர்வாதிபத்திய சோஷலிஸத்தைத்தான். இது, சர்க்கார் சிப்பந்திகள் தம் விருப்பப்படி ஓர் அரசியல் கட்சியுடன் தொடர்பு கொள்ளும் உரிமையை மறுக்கிறது. ஒரு சிறிய குழுவே இருபதாண்டுகளில் தமது சொத்தைப் பத்து மடங்கும், இருபது மடங்கும் பெருக்கிக் கொள்ள அனுமதிக்கிறது. மக்களில் தொண்ணூறு சதவிகிதத்தினரை உடல் நிலை, மன நிலை இரண்டிலும் புதைச் சேற்றில் அழுத்தியுள்ளது. அவர்களைப் பஞ்சத்திலும், அறிவீனத்திலும் ஆழ்த்தியுள்ளது. என் பிரத்தியேக மனப்பான்மைப்படியே எனக்கு அதிகார வர்க்கத்தைப் பிடிப்பதில்லை. சௌகரியங்களைப் பெருக்கிக் கொள்ளும் சமுதாய வாழ்வையும், இரண்டு விதமான விலைப் பட்டியல் வைப்பதையும், செலவுக்கெல்லாம் கணக்கு வைப்பதையும் நான் விரும்பவில்லை. இதே சமயத்தில் முதலாளிகளாயினும் சரி, சுதந்திரமாகப் பணி புரியும் மற்றோராயினும் சரி, யாருமே ஒரு வரம்புக்கு மேல் செலவு செய்வதை நான் விரும்பவில்லை என்றும் தெளிவுபடுத்துகிறேன். ஊக்கம் தந்தால்

புதைச் சேற்றிலிருந்து இந்தியா முழுவதையும் விடுவித்துவிடலாம் என்பது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. ஊக்கம் தருவதாலோ, ஊக்கத்தைக் குறைப்பதாலோ மக்களில் ஐந்து சதவிகிதத்தினர் மீதுதான் எதிர்விளைவுகள் ஏற்படுத்த முடியும். மக்களில் தொண்ணூற்றைந்து சதவிகிதத்தினர்—அல்லது நிச்சயமாகத் தொண்ணூறு சதவிகிதத்தினர் — உறக்க நிலையில்தான் வாழ்ந்து வருகிறார்கள். ''சுபிட்சத்தின் மூலம் சமத்துவம்'' அல்லது ''சமத்துவத்தின் மூலம் சுபிட்சம்'' என்கிற திட்டங்களைக் காட்டித்தான் அவர்களை விழிப்புடன் இருக்கச் செய்ய முடியும்.

அஹிம்சை மார்க்கத்தில் என் நிலை குறித்து ராஜாஜி விசாரப்படத் தேவையில்லை. இவ்வளவு வயதானபின் நான் அஹிம்சையில் நம்பிக்கை இழப்பதோ வன்முறையை வலுப்படுத்துவதோ சாத்தியமல்ல. ஆயினும் வேறோர் அம்சத்தில் என்னைக் குறித்தும், என்னைப் போன்ற கோடிக்கணக்கானவர் குறித்தும் ராஜாஜி விசாரப்பட வேண்டும். சாப்பாட்டுக்காரனும் சரி, புரட்சிக்காரனும் சரி, மக்களை எப்படிச் செயலூக்கம் கொள்ளச் செய்வது என்பது நமக்குப் புரியவில்லை. இந்தக் கணத்தில் அவர்களைப் புரட்சிக்காகவே செயலில் ஊக்க வேண்டும் என்று விரும்புகிறேன். 'புரட்சி' என்பதற்குப் பதில் 'இன்றைய நிலையை மாற்றுதல்' என்று வேண்டுமாயின் சொல்லலாம். மக்களைச் செயலில் ஈடுபடுத்துகிற உபாயம் கைக்கு அகப்படாமல் நழுவிக் கொண்டேயிருக்கிறது. இவ்வாறு பொது ஜனத்தை இயக்குவது எப்படி என்பது பற்றி ராஜாஜி புதிதாகச் சிந்தனை புரிய வேண்டும். அவருக்கு நான் வணக்கத்துடன் ஏதேனும் யோசனை கூறலாமாயின் இதுவே என் யோசனை. தளர்ந்து வரும் ஓர் உடலில் உறையும் திட்சண்யமான அறிவானது வாடுகிற தோலுக்குள் உள்ள ஆரஞ்சுப் பழத்துக்குச் சமம் என்றார் ராஜாஜி. சாதாரண ஆரஞ்சு புதுத் தோல் பெற முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயினும், எனக்கு ஒன்று தெரியும்: அறிவு எனும் ஆரஞ்சு எதிர்ப்புக்களைக் கடந்து தொலைதூரம் செல்ல முடியும் என்று தெரியும். ராஜாஜியின் விஷயத்தில் இது இவ்வாறே செல்லும் என்றும் இதயபூர்வமாக நம்புகிறேன்.

இக் கட்டுரை பற்றி ராஜாஜி:

நமக்குத் தேவை ஒரு புரட்சி என்று டாக்டர் ராம் மனோஹர் லோஹியா சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். மக்கள் செயலூக்கத்துடன் எழுச்சி பெற வேண்டும். எழுச்சி கொள்ளும் மக்கள் ஒவ்வொருவரும் தனக்காகத் தொழில் புரியும் போதே, தான் தேசத்துக்காகவும் உழைக்கும் ஒரு பணியாள் என்று உணர வேண்டும். தனது உழைப்பால் தேசம் முன்னேவிடச் செல்வத்தில் செழிப்பு பெற வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

''அன்பா, நீ என்ன தொழில் செய்கிறாய்?'' என்று ஒருவனைக் கேட்கும் போது, அவன், ''நான் கல்லை உடைத்துச் சீராக்குகிறேன்'' என்று மட்டும் சொன்னால் போதாது. ''ஒரு கோயில் கட்டுவதற்காகக் கல் உடைக்கிறேன்'' என்று தேச நலனுக்கிய காரியத்தையும் சேர்த்து அவன் சொல்ல வேண்டும். தனக்கு ஊதியம் தருகிற வேலையும், தேசத்தின் (பௌதிகமான அல்லது ஆன்மிகமான) செல்வத்தைப் பெருக்கும் வேலையும் ஒன்றே தான் என்ற மனப்பான்மை இந்தியக் குடிமகனுக்கு ஏற்பட வேண்டும். இன்று மக்கள் பெரும்பாலும் சோம்பேறிகளாக இருக்கிறார்கள் அல்லது பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்புகிறார்கள் என்பது உண்மை. போதிய அளவு உழைக்காமலே நிறையச் சம்பாதிப்பதற்கு மட்டும் விரும்பித் திட்டமும் போடுகிறார்கள். இதெல்லாம் மாற வேண்டும். மக்களின் தொழிலூக்கம் பெருகி, சோம்பேறித்தனத்தையும் நேர்மைக் குறைவையும் விரட்ட வேண்டும்.

சமத்துவம் என்பது நடைமுறையில் சாத்தியமானதல்ல. இல்லாத ஒரு பழத்தைக் காட்டிக் காட்டி மக்களை முன்னே இழுத்துச் செல்வது நடக்காத காரியம். நேர்மையுடன் பிரச்னையை அணுக வேண்டும். நாடு முழுவதையும் தழுவும் அளவுக்கு அனைவருக்கும் பயனுள்ள வேலை தருவதும், உண்மையான உழைப்புக்கு உரிய வெகுமதி கிடைக்கச் செய்வதும், எல்லா மக்களின் நலனிலும் ஒரே போன்ற ஈடுபாடு காட்டுவதும் — இவையே தேச சுபிட்சத்துக்கு இன்றியமையாதவை; கனரக ஆலைகள் அல்ல: ஊக்கம் தருவதால் அதிகபட்சமாகப் பத்துசதவிகித மக்களைத்தான் எழுப்பிவிட முடியும் என்கிறார் டாக்டர் லோஹியா. அவர் சொல்கிற இந்தப் பத்து சதவிகிதத்தினரை ஊக்கி எழுப்பினாலே போதும், அவர்கள் முதலீட்டிலும் நேர்மையான நிர்வாகத்திலும் ஈடுபட்டு, அதன் மூலம் தேச முழுவதுமுள்ளவர்களுக்குப் பயனுள்ள வேலை கிடைக்கும். சமத்துவம் என்கிற கனி ஒரு மாயம் என்று நான் நம்புவது போலவே, பத்துச் சதவிகிதத்தினரை ஊக்குவதால் நாடு முழுவதையும் நற்பணியில் ஈடுபடுத்தலாம் என்றும் நம்புகிறேன்.


அஹிம்சை மார்க்கத்திலேயே ஒருவர் விரைவாக மக்களைப் புரட்சியில் தூண்டிவிட வேண்டுமாயின் அவர் தெய்வதூதனுக்கு நிகராக இருக்க வேண்டும். அந்த மகிமை இல்லாவிடில், ஒருவர் கடும் உழைப்பின் மீதே மக்களுக்கு அறிவுணர்த்திப் புரட்சியில் ஊக்க முடியும். இதில் விரைவாகப் பலன் காண அவசரப்படக்கூடாது. தெய்வ தூதராக வந்ததால் மஹாத்மா காந்தி 'ஓராண்டுக்குள் சுயராஜ்யம்' என்று கூற முடிந்தது. மற்ற எவருக்கும், அருமையான செயல் திட்டத்தை வைத்திருப்பவர்களுக்கும்கூட மகாத்மாவின் மகத்துவம் இல்லை. இத்தன்மை இல்லாத ஒருவர் பொறுமையுடன் பணியாற்றி அதிலேயே திருப்தி கண்டு, ஆண்டவனின் ஆசிக்குக் காத்திருக்கத்தான் வேண்டும்.





செய்திப் படங்கள்

1. மிகப் பெரிய அளவில் கப்பலில் வந்து இறங்கிய அமெரிக்க உணவுப் பொருள்களைத் தமிழக அமைச்சர்கள் பார்வையிடுகிறார்கள். 2. ஸர்வமங்களா ஸ்ரீ ராஜேச்வரி ஆலயத் திருப்பணி கைங்கர்யத்துக்காகச் சொல்லின் செல்வி ஸ்ரீமதி சிவானந்த விஜய லக்ஷ்மி அவர்களின் பஞ்சவேணி இராமாயணம் ஜூன் 11ந் தேதி முதல் ஜூலை 16ந் தேதி வரை தியாகராய நகர் ஸ்ரீ சிவவிஷ்ணு ஆலயம் ஸ்ரீ வேதாரண்ய மகாமண்டபத்தில் நடைபெறுகிறது. 3. காஞ்சீபுரம் சங்கர பக்தஜன சபையினர் கொண்டாடிய காமகோடி பீடாதிபதிகளின் ஜன்மதின உற்சவத்தில் ஸ்ரீ பெரியவர்களின் திருவுருவப் படம் புஷ்பப் பல்லக்கில் வீதி உலா வந்தது. 4. சமீபத்தில் மேல மாம்பலம் பக்த ஸமாஜத்தினர் ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் பீடாரோஹண மணி விழாவை யொட்டித் தயாரித்த வைரவிழா மலரைச் சிம்ஸன் அதிபர் வேங்கடராமன் வெளியிட்டார்.





நவீன வாழ்க்கைக்கு ஏற்றது நேஸ்கா:பே



நெஸ்காஃபே மட்டும்தான் அலாதி
சுவையின்பத்தை அளிக்கவல்லது





தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய ப்ளான்டேஷன் பீபெரி காபிக்கொட்டையைப் பதமாக வறுத்து அதன் இயல்பான மணம் கெடாமல் தயாரிக்கப்பட்டதுதான் நெஸ்கா:பே — உடனே கரையக்கூடிய நூற்றுக்கு நூறு அசல் காபி! ஒரே சமயத்தில் தனித்தனியாக 'ஸ்ட்ராங்'காகவோ 'லைட்'டாகவோ காபியைத் தயாரிக்கமுடிவதால் நெஸ்கா:பே மிகவும் சிக்கனமானதும்கூட!

NESTLÉ
ஒரு நெஸ்லே
தயாரிப்பு

5 விநாடிகளில் தயார்!
ஒரு முழு டீஸ்பூன் நெஸ்காஃபேயை கோப்பையில் போட்டு வெந்நீரை ஊற்றி ருசிக்கேற்றபடி சர்க்கரையும் பாலும் சேர்க்க வேண்டியதுதான். காபி தயார்!

NESCAFÉ*

IS: 2791
ISI

நெஸ்கா:பே — தனிச்சிறப்புள்ள தரமான காபி

*நெஸ்கா:பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

JWT-NCE-5144 A

நீரிலே மிதந்த குழந்தை

ஜெ. எஸ். ஸக்டண்கர்


★ இஸ்ரேலியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் இடை
★ யில் விரோத மனப்பான்மை கிறிஸ்து பிறப்பதற்கு
★ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே உருவாகி
★ விட்டது என்பதை பைபிளைப் படிக்கும் யாரும்
★ உணரலாம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. எகிப்தில் ஹிப்ரு மொழி (இஸ்ரேலிய யூதர்களின் மொழி) பேசுவோர் பலர் இருந்தனர்.

இந்த ஹிப்ருக்களின் ஜனத்தொகை எகிப்தியரின் ஜனத்தொகையை விட வெகு வேகமாக அதிகரிப்பதை அறிந்தான் எகிப்திய மன்னன். இதனால் அவன் கவலை கொண்டான். இறுதியில் எகிப்தியர் ஹிப்ருக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட நேரலாம் என்ற பயம் உண்டாகி விட்டது அவனுக்கு. ஹிப்ருக்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை யெல்லாம் கொன்றுவிட வேண்டும் என்று உத்தரவு போட்டான் மன்னன். ஹிப்ருக்களில் ஒரு தாய் தனக்குப் பிறந்த குழந்தையை மூன்று மாதங்களுக்கு ஒளித்து வைத்திருந்து காப்பாற்றினாள். இனியும் அவனை ஒளித்து வைத்திருப்பது சாத்தியமில்லை என்ற நிலை வந்த போது ஆண்டவனை நினைத்துக் கொண்டு குழந்தையை ஒரு கூடையில் வைத்து மூடினாள். நைல் நதியில் கூடையை மிதக்க விட்டாள்.

பாலகனின் அக்காள் அங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சற்று நேரத்தில் எகிப்திய அரசகுமாரி நைல்நதியில் குளிப்பதற்கு வருவதைப் பார்த்தாள் அவள். அரசகுமாரியின் கண்களில் மிதந்து வரும் கூடை தென்பட்டது. நாணல்களுக்கு இடையில் சிக்கிக் கிடந்த கூடையைத்தோழிகளை அனுப்பி எடுத்து வரச் செய்தாள். கூடையைத் திறந்ததும் குழந்தை அழலாயிற்று. அரசகுமாரியின் இதயம் இளகிற்று. அதனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். இது ஒரு ஹிப்ரு குழந்தை





முத்தாரம்

ஜப்பானிய கல்சர் முத்துத் தயாரிப்பாளர்கள் 1965 — 66ல் புதிய 'ரிகார்ட்' ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாண்டில் மட்டும் 300,000,000 முத்துக்கள் 'அறுவடை'யாகி உள்ளன! இத்தனைக்கும் முதல் கல்சர் முத்து தயாரிக்கப்பட்டு அறுபத்திரண்டு ஆண்டுகளே ஆகியுள்ளன.

கோகிசி மைகிமாடோ என்பவர்தான் முதல் கல்சர் முத்தைத் தயாரித்தவர். ஜப்பானியர். முத்துச் சிப்பியின் உள்ளே யதேச்சையாக ஒரு சின்னஞ்சிறு உருண்டையான துகள் புகுந்து விடும்போது அதைச் சுற்றிலும் சிப்பி, முத்தை உருவாக்குகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இது நல் முத்து.

ஒரு கிளிஞ்சல் துகளைச் செயற்கையாகச் சிப்பியினுள் செலுத்திய பின்னர் தயாராகும் முத்து, கல்சர் முத்து எனப்படுகிறது. அதன் காயம் ஆற மூன்று வாரங்களும் முத்து தயாராகப் பல வருஷங்களும் ஆகும். ஜப்பானில் 3,500 கல்சர் முத்துப் பண்ணைகள் உள்ளன. ஆரோக்கியமான முத்துச் சிப்பிகளைக் கூண்டில் வைத்து உப்பு நீரில் தொங்க விடுகிறார்கள். அவற்றுக்கு மூன்று வயதானதும் அவற்றின் மேல் ஓடுகளை மெல்லத் திறந்து ஒரு மிகச் சிறிய துகளை அதன் மென்மையான சதைக்குள் நுழைக்கின்றனர்.

ஜப்பானிய கல்சர் முத்துக்கள் அதிகமாக ஏற்றுமதியாவது அமெரிக்காவுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும்தான். — **''ஸ்காலா''**

யாகத்தான் இருக்க வேண்டும் என்று அரசகுமாரிக்குத் தெரியத்தான் செய்தது. ஆயினும் இரக்கம் அவள் இதயத்தை நிரப்பியிருந்தது. இதனை உணர்ந்த அந்தப் பாலகனின் அக்காள் தைரியமடைந்து அரசகுமாரியை அணுகினாள். குழந்தையைப் பாலூட்டி வளர்க்க ஒரு ஹிப்ரு பெண்மணியை அழைத்து வரவா என்று கேட்டாள். அரசகுமாரியும் சம்மதம் அளிக்கவே பாலகனின் தாயே சற்று நேரத்தில் அவள் முன் நின்றாள்.

மன்னன் மகள் குழந்தையை அவளிடம் தந்து ''இதை எனக்காக நீ காப்பாற்றி வா; அதற்குரிய சம்பளத்தை உனக்குக் கொடுக்கிறேன்'' என்றாள்.

அரச கட்டளையை ஏற்றுக் குழந்தையைத் தாதியின் நிலையிலிருந்து வளர்த்து வந்தாள் தாய். அவன் வளர்ந்து பெரியவனானதும் அரச குமாரியிடம் அழைத்து வரப்பட்டான். அவள் அவனைத் தன் மகனாகவே சுவீகரித்துக் கொண்டாள். மோஸஸ் என்று பெயரும் சூட்டினாள். மோஸஸ் எனில் 'நீரிலிருந்து காப்பாற்றப்பட்டவன்' என்பது அர்த்தம்.

அந்தக் காலத்தில் எகிப்தில் வசித்த ஹிப்ருக்கள் பாலஸ்தினத்தில் (இஸ்ரேலுக்கு முன்னாளில் இருந்த பெயர்) உள்ள சன்னம் என்ற இடத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள். ஜோர்டான் நதிக்கரையை விட்டு நைல் நதிக் கரைக்கு வந்து சேர்ந்தவர்கள்.

அரண்மனையில் வாழ்ந்த மோஸஸ் எகிப்திய அறிஞர்கள் தேடித் தந்த கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்தான். இருப்பினும், அவன் மனம் கொடுமைகள் பலவற்றுக்கு ஆளான ஹிப்ருக்களுக்கு இரங்கியது. அவர்களுக்கு உதவ எண்ணினான். அவர்களுடன் சேர்ந்து தானும் துன்பப்படலாமே ஒழிய அரண்மனையில் வாழ்வது தவறு என்ற முடிவுக்கு வந்தான். கொடிய மன்னனின் எல்லா சுகபோகங்களையும் உடைய அரண்மனையைத் துறந்து இஸ்ரேலியர்களின் நண்பன் என்று தன்னை வெளிப்படையாகவே அறிவித்துக் கொண்டான். எகிப்திய அரசன், மோஸஸைக் கொன்றுவிடத் திட்டமிட்ட போது மோஸஸ் தப்பி ஓடிவிட்டான். வெகுதூரம் — எகிப்திய எல்லைப்புறத்துக்குச் சென்று விட்டான்.

கடவுளிடம் அசைக்க முடியாத நம்பிக்கையும் பேரன்பும் கொண்டிருந்தவர் மோஸஸ். இதற்குப் பிரதிபலன் கிடைக்காது போகவில்லை. ஆண்டவன் அவருக்குப் பிரத்யட்சமானார். 'எகிப்திய மன்னனிடம் மோஸஸ் சென்று பேச வேண்டும். அவ்வரசனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் இஸ்ரேலிய மக்களை விடுவிக்குமாறு சொல்ல வேண்டும்.'— இப்படி ஆண்டவன் மோஸஸுக்கு அருள் புரிந்தார்.

ஆனால் எகிப்திய மன்னன் இந்த வேண்டுகோளுக்கு இணங்கவில்லை; இஸ்ரேலியர்களை அடிமைகளாக மேலும் கடுமையாக உழைக்கச் செய்து கொடுமைப்படுத்தினான்.

மோஸஸ் ஆண்டவனுடைய அருள் பெற்றுச் சில அற்புதங்களை நிகழ்த்தினார். இதனைக் கண்டு கலக்கமும் பயமும் அடைந்த மன்னன் கடைசியில் ஹிப்ருக்களை விடுவித்து விட்டான். மோஸஸைத் தொடர்ந்து எகிப்தை விட்டு வெளியேறிச் சென்றுவிட அவர்களை அனுமதித்தான். அறுநூறு ஆயிரம் ஹிப்ருக்களை எகிப்திலிருந்து இஸ்ரேலுக்கு — அவர்களது முன்னோர்களின் நாட்டுக்கு — தலைமை தாங்கி அழைத்துச் சென்றார் மோஸஸ்.

கால்நடையாக மூன்று மாதப் பயணத்துக்குப் பிறகு அவர்கள் ஸினாய் மலையை அடைந்தனர். அங்கே கூடாரம் அடித்து இளைப்பாறினர். இந்த ஸினாய் மலை மீது

மோஸஸ் ஏறிய போதுதான் ஆண்டவன் அவருக்குத் தோன்றிப் பத்து கட்டளைகளையும் பிற சட்டங்களையும் அருளினார். இந்நியதிகளின்படி வாழ்க்கை நடத்தினால் அம்மக்கள் தமக்கு விருப்பமானவர்களாக விளங்குவார்கள் என்பதை எடுத்துக்கூறப் பணித்தார். மோஸஸ் அவ்வாறே ஆண்டவன் அமைத்துத் தந்த கட்டளைகளையும் சட்டங்களையும் எழுதிக் கொண்டு இஸ்ரேலிய மக்களுக்கு விளக்கிச் சொன்னார். இஸ்ரேலியருக்கு ஒரு மதத்தை அளித்த மோஸஸின் கதை இதுவே.



'டா' போட்டுப் பேசினால்.....

''‘டா' போட்டுப் பேசினால் இங்கே நாம் கோபப்படுவோம். ஆனால் ருஷ்யாவிலே ரொம்பவும் மகிழ்ச்சி அடைவார்கள். 'டா' என்ற ஒலியை, 'ஆமாம்', 'சரி' என்ற அர்த்தங்களில் பயன்படுத்தலாம் ருஷ்ய மொழியில். அதே ஒலியைக் கேள்வி தொனிக்கவும் உபயோகிக்கலாம். ஆகவே, ருஷ்யாவுக்குப் போய்த் "தாராளமாக 'டா' போட்டுப் பேசுங்கள்'' என்று சபாநாயகர் திரு ஆதித்தன் கூறினார். சென்னை நகர மேயரையும் அவருடன் செல்லும் அறுவரையும் வழியனுப்பி வைத்துப் பேசினார் திரு ஆதித்தன். ஏற்கனவே ருஷ்யா சென்று திரும்பியிருக்கும் அவர், ''அங்கு அவர்கள் அழைத்துச் சென்று காட்டும் இடங்களுக்கெல்லாம் செல்ல வேண்டும்; அப்புறம் வழிகாட்டிகள் விடைபெற்றுச் சென்ற பிறகு நாமாகவே அவர்கள் அழைத்துப் போகாத இடங்களுக்கும் போய்ப் பார்க்க வேண்டும்'' என்று யோசனை கூறினார். அப்படி அவர் பார்த்தபோது, கூட்டுப் பண்ணைகளை யொட்டி ஒவ்வோர் அங்கத்தினரும் தனிப்பட்ட முறையில் பயிர் செய்யவும் ஓரளவுக்குச் சொந்த நிலம் இருப்பதைக் கண்டாராம். கூட்டுப் பண்ணையைவிட இந்தச் சொந்த நிலத்தில் பயிர் செழித்து வளர்ந்திருந்ததாம்.

மனித இயல்பை யாரால் மாற்ற முடியும்?

காமராஜரின் படத்தைத் திறந்த அண்ணாதுரை!

''சில தினங்களுக்குமுன் ஓர் ஊரில் காமராஜரின் படத்தைத் திறந்து வைக்கும்படி என்னை அழைத்தார்கள். நானும் மகிழ்ச்சியுடன் ஏற்று விழாவில் பங்குபற்றினேன். இதை ஜனநாயக நாடுகளைத் தவிர வேறெங்கு காண முடியும்? ஏகாதிபத்திய நாடுகளில் ஆளும் பீடத்தில் உள்ளவர் தம்மை எதிர்க்கத் துணிந்தவரின் கல்லறையை வேணுமானால் திறந்து வைக்க ஒருவேளை இசையலாம்!''


இப்படி அறிஞர் அண்ணா கூறினார், சென்னை நகர மேயர் ருஷ்யா செல்வதை யொட்டி நடந்த ஒரு வழியனுப்பு உபசார வைபவத்தின் போது. அவர் மேலும் தொடர்ந்தார்: ''மேயருடன் செல்லும் குழுவினர் ருஷ்யாவிலிருந்து கற்று வரக் கூடியதும் இருக்கிறது; அவர்களுக்கு இவர்கள் சொல்லித் தரக்கூடியதும் உள்ளது. நகரசபை ஆளும் கட்சியினருடன் காங்கிரஸ் உறுப்பினர்களும் செல்கிறார்கள், ருஷ்யாவுக்கு. 'நாங்கள் நகர மன்றத்தில் ஒருவரை ஒருவர் சொற்களால் தாக்கிக் கொண்டாலும் நகர சபைக்கு வெளியே உற்ற நண்பர்களாய் உள்ளோம். ஜனநாயகப் பண்பு என்பது இதுதான். இங்கே ஒரே குழுவினராய் இணைந்து நல்லவற்றைக் கண்டு பயன்பெற வந்துள்ளோம்' என்று இவர்கள் மாஸ்கோவில் சொல்லலாம்.''






சூரன் பீட்டர்
12
வால்ட் டிஸ்னி
கொள்ளைக்காரர்கள் திகைத்தார்கள், பிரமித்தார்கள், பயந்தார்கள். பலகை மீது நடந்து கடலில் விழுந்த வெண்டி என்ன ஆனாள்? நீரில் விழுந்த ஓசை கூடக் கேட்கவில்லையே! அப்படியே மாயமாக மறைந்து போனாளா? ஆனால் நடந்தது என்ன தெரியுமா? டிங்கர் பெல்லிடமிருந்து வெண்டியும் மற்ற குழந்தைகளும் கப்பலில் சிறைப்பட்டிருப்பதை
அறிந்து கொண்டான் பீட்டர். கப்பலுக்குப் பறந்து வந்தான். வெண்டி கடலில் குதித்த அதே நேரத்துக்கு வந்த பீட்டர் அவளைக் கப்பலின் உச்சியில் சேர்த்தான்.
அதோ பீட்டர்

எல்லாருடைய மகிழ்ச்சி ஆரவாரத்துக் கிடையே காப்டன் ஹூக் தான் பயந்தாங்குளி என்பதைத் தன் வாயாலேயே சொல்லி ஒப்புக்கொண்டதும் மற்ற கொள்ளைக்காரர்களும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுத் தோல்வியை ஒப்புக் கொண்டார்கள். கொள்ளைக் கப்பல் பீட்டரின் வசமாயிற்று. கொள்ளைக்காரர் களை ஒரு படகில் ஏற்றினான் பீட்டர். பாவம் காப்டன் ஹூக் அந்தச் சின்னப் படகில் தம் சகாக்களுடன் நிச்சயமற்ற தன் யாத்திரையைத் தொடங்கினான்.

அந்தப் படகு போகும் போது கப்பலிலிருந்த குழந்தைகள் கை கொட்டிச் சிரித்தனர். அவனது படகைத் தொடர்ந்து பின்னால் சென்ற ஒரு ஜந்துவைக் கண்டுதான் அப்படிச் சிரித்தார்கள். கடிகாரத்தை விழுங்கி, காப்டனின் கையை ருசி பார்த்து, அவன் உடலையே சுவைக்கக் காத்திருக்கும் முதலைதான் படகைத் துரத்திக்கொண்டு சென்றது! முதலையைக் கண்டதும் படகு வேகமாக ஓடியது.







யானைக்கும் ஒரு வைத்தியர்!

"வா, அம்மா! இப்படி உட்காரு. என்ன அங்கேயே நிற்கிறாய்? மீனு, பயப்படாதே. உனக்கு ஒன்றும் தீங்கு செய்ய மாட்டேன். உடம்பு இப்பொழுது எப்படி இருக்கிறது? சொல்லம்மா! சொன்னால்தானே புரியும்? தகுந்த மருந்து கொடுத்துக் குணப்படுத்தலாம். என்ன, வாயைத் திறக்கவே மாட்டேன் என்கிறாயே!"

இப்படி எவ்வளவோ நயமாகக் கேட்டும் நோயாளி தன் உடல் நிலையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. பாவம், அதுதான் வாயில்லாப் பிராணியாயிற்றே! எப்படிப் பதில் சொல்லும்?

முக்காலி ஒன்றில் பூனை உட்கார்ந்திருந்தது. அருகில் அமர்ந்திருந்த பெண்மணிதான் சொல்லி வைக்கிறேன். மிருகமாக இருந்தாலும் மனிதனாக இருந்தாலும் வியாதிகளுக்கு வைத்திய முறை பெரும்பாலும் ஒன்றுதான்...!"

"அப்படியா? இந்தப் பூனைக்கு என்ன?"


"இரண்டு நாட்களாகக் கணக்கமாக இருக்கிறது. எதையும் சாப்பிட மாட்டேன் என்கிறது."

"அஜீரணமாயிருக்குமோ?"

"அதுவேதான்!"

"எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

"மனிதர்களாயிருந்தால் என்ன சாப்பிட்டீர்கள், எது சாப்பிட்டீர்கள் என்று கேட்டு அறியலாம். அதோடு அறிகுறியைக் கொண்டும் கண்டு கொள்ளலாம். பேசாத இந்தப்



அதோடு அப்படி அன்பாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆம், அவர் ஒரு டாக்டர். ஆட்டுக்கும் மாட்டுக்கும் யானைக்கும் பூனைக்கும் வைத்தியம் செய்பவர். அதாவது மிருகநல வைத்தியர்.

என்னைத் திரும்பிப் பார்த்த அவர், "உங்களுக்கு என்ன....?" என்று கேட்டார்.

"எனக்கு ஒன்றும் இல்லை. அப்படியே இருந்தாலும் உங்களிடம் சொல்லிப் பயன்?"

"மெய்தான். நானும் கேட்டுப் பயன்....? என்னால் உங்களுக்கு வைத்தியம் செய்ய முடியும் என்றாலும் உங்களுக்கு நம்பிக்கை வராது. இருந்தாலும் ஒன்று மட்டும் பிராணிகளின் நோயைக் கண்டு கொள்ள எங்களுக்கு முக்கியமாக உதவுவது இந்த அறிகுறிதான்!"

"அஜீரணத்துக்கு மருந்து....?"

"மனிதர்களுக்குக் கொடுக்கும் மருந்தேதான்!"

"என்ன ஒரே மருந்தா? மிருகங்களுக்கு மருந்து வேறுபடாதா?"

"ஊஹூம். அளவுதான் வேறுபடும். நாய்க்கு ஒரு மருந்தை ஒரு சிட்டிகை கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதே மருந்தைப் பசுவுக்கோ காளைக்கோ தருவதென்றால் பன்னிரண்டு மடங்காகி

பூனைக்கும் ஒரு டாக்டர்! 

விடுவோம். குதிரைக்கென்றும் பதினாறு மடங்கு தருவோம்.''


ஸ்ரீமதி லீலாவதி தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை ஸ்ரீ ராமச்சந்திரன் மசூலிப்பட்டணத்தில் கல்லூரி முதல்வர். நான்கு சகோதரர்களையும் இரண்டு சகோதரிகளையும் கொண்ட இவரது சகோதரிகளில் ஒருவர் எஞ்ஜினீயர். இல்லறப் பாதையிலே இவர் கரம் பற்றி நடக்கும் ஸ்ரீ குணசேகரன் பாதுகாவல் துறையில் ஓர் அதிகாரி.

ஸ்ரீமதி லீலாவதி மிருக வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து பி.வி. எஸ்ஸி. பட்டம் பெற்று 1963-ஆம் ஆண்டு முதல் மிருக வைத்தியராகப் பணியாற்றுகிறார். இவரது பணி கடலூர், காட்டு மன்னார்குடி, குறிஞ்சிப்பாடி முதலிய மிருக நல விடுதிகளுக்குக் கிடைத்திருக்கிறது. தற்பொழுது சென்னையில் உள்ள கோழி இன வளர்ச்சி நிலையத்தில் பணியாற்றுகிறார்.

''ஐந்தாண்டுகள். சாதாரணமாக வைத்தியத் துறைக்கு என்ன என்ன பயிற்சிகள் உண்டோ, அந்தப் பயிற்சிகள் எல்லாம் இதற்கும் உண்டு. வைத்தியத் துறையைக் காட்டிலும் இத்துறைக்குச் சில பாடங்கள் அதிகம். நாங்கள் பல்வகை மிருகங்களின் உடற்கூறு பற்றிப் பயில வேண்டும். 'அக்ரானமி' என்னும் தாவர இயல், மிருகங்களோடு பழகும் முறை, அவற்றின் இன விருத்தி, இரை ஆராய்ச்சி போன்றவற்றையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.''

''உங்கள் சிகிச்சை முறை எந்த எந்தப் பிராணிகளுக்குப் பயன்படுகின்றன?''

''உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்துக்குமே பயன்படக் கூடியதுதான். ஆனால் பெரும்பாலும் வளர்ப்பு மிருகங்கள்தானே எங்கள் சிகிச்சைக்கு வருகின்றன. ஆடு, மாடு, குதிரை, பூனை, நாய், குரங்கு, யானை ஆகியவற்றைக் குறிப்பாகக் கூறலாம். பறவைகளில் கோழியைச் சொல்லலாம்.''





''இதோ வருகிறார், பாருங்கள்! இவர் ஸ்ரீ வஸந்தகுமார்; அதோ வருகிறாரே, அவர் ஸ்ரீ ராமச்சந்திரன். என்னோடு பணியாற்றுகிறவர்கள்'' என்று அறைக்குள் நுழைகிறவர்களை அறிமுகப்படுத்தும் டாக்டர் லீலாவதி, ''எங்களுக்கும் மேலே ஒரு சூபரின்டெண்டு இருக்கிறார்'' என்று கூறுகிறார்.

''இத்துறையை நீங்கள் தேர்ந்தெடுக்கக் காரணம்.....?''

''இரக்கம்; பெண்ணாய்ப் பிறந்தவர்களின் பிறப்பியல்பு. மக்கள் துயர் துடைக்க எத்தனையோ பேர், 'நான், நீ' என்று போட்டியிடும் பொழுது, மக்களுக்குத் துணை நிற்கும் மாக்களைக் கவனிக்கும் பொறுப்பை நாம் ஏற்போமே என்று எண்ணினேன். இதே தொழிலில் எனக்கு வழிகாட்டியாக எங்கள் குடும்பத்தில் என்னுடைய தமையன் ஒருவன் இருக்கவே, மிருக வைத்தியப் படிப்பை மேற்கொண்டேன்.''

''பட்டம் பெற எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும்?''

''மாடுகளுக்குப் பொதுவாக என்ன என்ன நோய்கள் வருவதுண்டு?''

''வெக்கை நோய் என்று ஒன்று. மிகக் கொடிய நோய் அது. நல்ல ஜுரமும் பேதியும் ஏற்படும். மாடுகள் மந்தை மந்தையாக இறந்து விடுவதுண்டு. இந்த நோய் பரவாமல் இருக்கத் தடுப்பு ஊசிகள் போடுவோம். அடுத்தபடியாகக் கோமாரி. மாடுகளின் குளம்புகளிலும் வாயிலும் புண் உண்டாகும். அடி எடுத்து வைத்து நடக்க முடியாது. இளைத்துத் துரும்பாகி ஜீவனற்றுவிடும். இன்னொன்றுக்குச் சப்பை நோய் என்று பெயர். இதை ஆங்கிலத்தில் 'பிளாக் குவார்ட்டர்ஸ்' என்று கூறுவார்கள். கடும் ஜுரமும் சப்பை வீக்கமும் ஏற்பட்டு மாடுகள் அல்லலுறும். உயிர் பிழைப்பது சிரமமான காரியம். அப்புறம் தொண்டை அடைப்பான் என்று ஒரு நோய். மாட்டின் தொங்கு சதை வீங்கி விடும். தீனி தின்ன முடியாமல் சிரமப்படும். இந்த நோய் தஞ்சை மாவட்டத்தில் அதிகம். இன்னொரு நோய்க்கு அடைப்பான் என்று

உலகிலேயே அதிகமான நோபல் பரிசு வாங்கியவர்கள் அமெரிக்கர்கள் தான். இது ரஷ்யாவைப் போல் பன்னிரண்டு மடங்காகும்.

ஆதாரம்: ஸாட்டர்டே ரெவ்யூ
தகவல்: பாலி

பெயர். கிருமிகள் இரத்தத்தில் பரவி உயிருக்கே உலை வைப்பவை. இது வடஆர்க்காடு போன்ற இடங்களில் அதிகம். மனித முயற்சியில் வைத்திய சாதனையைக் கொண்டு இவற்றுக்கெல்லாம் தீர்வு காணவும் ஆநிரைச் செல்வத்தைக் காக்கவும் முயல்கிறோம். ஆடுகளுக்கும் இதே நோய்கள் வருவதுண்டு.''

''குதிரைகளுக்கு.....?''

''அடைப்பான் நோய் வரும். இழுப்பு நோய் என்றும் ஒன்று வரும். கீழே விழுந்து உதைத்துக் கொண்டு செத்து விடும்.''

''அப்பா ! என்ன பயங்கரம் !''

''குதிரைகள் மனிதனுக்குச் சவாரியாக மட்டும் பயன்படவில்லை. இவற்றின் உடலில் ஒரு வகைக் கிருமிகளை உலவவிட்டு மனிதனுக்குப் பயன்படும் ஊசி மருந்து ஒன்று தயாரிக்கிறார்கள்.''

''அதன் பெயர் என்னவோ ?''

'' 'ஏ. டி. எஸ்.' என்பது அதன் சுருக்கமான பெயர். 'ஆண்டி டெடனஸ் சீரம்' என்று சொல்வார்கள்! தாவரங்களுக்குப் போடக்கூடிய எருவில் ஒரு வகைக் கிருமி உள்ளது. தோட்டத்தில் யாரேனும் விழுந்து அடிபட்டுக் கொண்டால் இந்தக் கிருமி காயத் துவாரத்தின் வழியாக உடலுக்குள் புகுந்து விடுகிறது. சிறிது நேரத்தில் 'டெடனஸ்' என்னும் கொடிய வியாதி உருவாகி விடுகிறது. தசைநார்கள் சுருங்கி இழுக்கப் பிராணபத்தான நிலை ஏற்படும். இதைத் தவிர்க்கத்தான் கீழே விழுந்து காயம் பட்டவர்களுக்கு உடனுக்குடன் ஏ. டி. எஸ். தடுப்பு ஊசி போடுகிறார்கள்.''

''நாய்களுக்கு வெறி பிடித்தால் குணப்படுத்த முடியுமோ? கடித்தால் ஆபத்து என்கிறார்களே!''

''மனிதனுக்கு வெறி பிடித்தாலே குணப்படுத்த முடியவில்லையே! விலங்குகளுக்கு வெறி பிடித்தால் குணப்படுத்துவது சிரமம் தான். ஆனால் சொறி பிடித்தால் குணப்படுத்திவிடலாம். சொறி நாயெல்லாம் வெறி நாயல்ல. அதே போல வெறி நாயெல்லாம் சொறி நாயல்ல. நாய்க்கு 'டிஸ்டெம்பர்' என்று ஒரு நோய் வரும். உடல் உதறும். வயிற்றில் பூச்சி உண்டாகும். இதையெல்லாம் குணப்படுத்த மருந்து இருக்கிறது.''

''இங்கு கோழிப் பண்ணையில் இத்தனை கோழிகள் வளர்க்கிறீர்களே, எதற்காக ?''

''உணவாகப் பலருக்குப் பயனாவது தவிர கோழிகளினால் நமக்கு வேறு எத்தனையோ உபயோகங்களும் உண்டு. உதாரணமாக, முட்டைக் கருவுக்குள் அம்மை அணுக்களைப் பன்னிரண்டு நாட்கள் உலவ விட்டு, அம்மைத் தடுப்புக்கு ஊசி மருந்து தயாரிக்கிறார்கள். கிண்டி கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு இந்தக் காரியத்துக்காக நாங்கள் முட்டைகள் அனுப்புகிறோம்.''

''ஆமாம், ஆடுமாடுகளுக்கு அம்மை போட்டுவதுண்டா ?''

''நன்றாகக் கேட்டீர்கள்! ஊர் முழுவதும் அம்மை நோய் விளையாடிய பொழுது, ஓர் இடைப் பையன் மட்டும் அதற்கு ஆளாகாமல் தப்பினானே, அது எப்படி என்கிறீர்கள்? அம்மை போட்டியிருந்த மாட்டின் காம்பிலிருந்து பாலைக் கறந்து சாப்பிட்டதனால் தப்பினான்! இதைப் பார்த்த பிறகுதானே அம்மைத் தடுப்புக்கான மருந்தைத் தயாரிக்கும் வழி விஞ்ஞானிக்குத் தோன்றியது?''

''கோழிகள் நல்ல ஆரோக்கியத்தோடு இருந்தால்தானே இது போன்ற மருந்துகள் தயாரிக்கலாம்?''

''ஆமாம். ஒரு சிறிது சத்துணவு குறைந்தாலும் கோழிகளின் உடல் காட்டிக் கொடுத்து விடும். எனவே, வைடமின் குறைவு இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம். கோழிகளுக்குப் பல நோய்கள் வருவதுண்டு. 'ராணி கெட்' என்று ஒரு நோய். இதைத் தமிழில் கோழி கழித்தல் என்கிறார்கள். வெள்ளையும் பச்சையுமாக எச்சமிடும். பிறந்த ஆறாவது வாரத்தில் இதற்குத் தடுப்பு ஊசி போடுவோம். பிறந்த முதல் நாளேகூட — அதாவது முட்டையிலிருந்து வெளி வந்த மறுநாளே — ஒரு சொட்டு மூக்கில் விடுவதுண்டு. கோழி அம்மை என்று ஒரு நோய். பிறந்த எட்டாவது வாரத்தில் இதற்குத் தடுப்பு ஊசி போடுவோம். 14வது நாளில் இறக்கைகளை நீக்கி மருந்தைத் தடவுவதும் உண்டு.''

''மிருகங்களுக்கான ஊசி மருந்துகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா ?''

''நம் தமிழ் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. ராணிப் பேட்டையில் மருந்து தயாரிப்பு நிலையம் இருக்கிறது.''

''மிருகங்களுக்குச் சுலபமாக மருத்துவம் செய்ய முடியுமா? ஊசி போடவோ, அறுவை சிகிச்சைக்கோ என்ன செய்கிறீர்கள் ?''

''முரண்டு பிடிக்கும் குழந்தைகளைக் கட்டிக் கிட்டிப் போட்டு மருந்து கொடுக்கிறோம் அல்லவா ? அப்படித்தான் மாடுகளுக்கு மருத்துவம் செய்தாக வேண்டும். யானை, குரங்கு, குதிரை, நாய் போன்ற மிருகங்கள் நம்மால் தீங்கு நேராது என்று தெரிந்து விட்டால், தாமாகவே சிகிச்சைக்கு முன் வந்து நிற்கும். ஒரு சமயம் சீர்காழியில் வசந்த குமார் யானையின் பாதத்தில் கொப்புளம் ஒன்றைக் கீறியிருக்கிறார். மருந்து போட்டுக் கட்டி ஆற்றியிருக்கிறார். அது தன் காயம் ஆறும் வரை கொண்டு வந்து காட்டிச் சென்றிருக்கிறது. யானைப் பாகன் வேறு திக்கில் அழைத்துச் சென்றால்கூடப் போகாது. தினந்தோறும் முதல் காரியமாக டாக்டரிடம் வந்துவிடும் அது !''

''உங்களுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு விட்டேன். வாயில்லா ஜீவன்களுக்கு உங்களைப் போன்றோர் புரியும் பணிக்கு நன்றி சொல்ல நான் யார் ? நான் வரட்டுமா?''

— ரா. வீ.


மகிழ்ச்சியூட்டும்
பஜாஜ் பிரெஷர் குக்கர்
உபரியாகவே சமைக்க வசதியுடையதும் ஒரே துண்டாகவுள்ளதுமான குக்கர், மூன்று நிலையிலுள்ள காற்றழுத்த ஒழுங்கு விசை மற்றும் நய உலோகத்தில் செய்த ஸேப்டி பிளக்.
ஐந்து ஆண்டுகளுக்கு உத்தரவாதமுடையது.
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர் நரிமன் ரோடு, பம்பாய்-1.
இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு
heros' BE-4 TAM

மூன்றாவது பரிசு நாவல்



மணக் கோலம்

பி.வி.ஆர்

அத்தியாயம் 13

அலமாரியின் அருகே சென்ற ரகுபதி, அதன் கதவைத் திறந்து தம்ளர்களையும் பாட்டிலையும் எடுப்பான் என்று ஏங்கிய சேஷன், அடுத்த கணமே அவன் திரும்பி வந்து பழையபடி உட்கார்ந்ததும், ஏமாந்து போனான். அவனுக்கு ஆத்திரம் கூட வந்தது.

"முதல் லீன் முடிஞ்சுடுத்துன்னு அல்லவா நெனைச்சேன்!" என்று அவன் முணுமுணுத்தான்.

அவனுடைய உணர்ச்சிகளையும், முணுமுணுப்பையும் பொருட்படுத்தாத ரகுபதி, "இந்தச் சந்தானம் முட்டுக்கட்டை போடுகிறானே, ஏன் தெரியுமா?" என்று கேட்டான்.

"முட்டுக்கட்டை போடற சங்கதியே எனக்குத் தெரியாது!" என்று சேஷன் அலுத்துக் கொண்டான். இனிமேல் கொஞ்ச நேரத்துக்கு அலமாரியின் பக்கம் கண்ணைச் செலுத், பதில்கூடப் பிரயோசனம் இல்லை என்று தோன்றியது அவனுக்கு.

"என்னைப் பற்றிச் சில ரகசியங்களை அவன் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான்!"

"ஓ.... அப்படியா?"

"எல்லாம் ஒரு பையில் அடங்கியிருக்கு...."

"அதுகூட எனக்குத் தெரியாது. வீட்டிலா வைச்சண்டிருக்கிறான்?"

"ஆபீஸில்.... அவனுடைய அறையில் இருக்கிற பீரோக்களில் ஒரு பீரோவில் இருக்கும்...."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"அந்த பையை எடுத்து என் கையில் காதும் காதும் வைக்கிற மாதிரி கொடுத்துவிட வேண்டும்!"

"இதுக்குத்தான் என்னை இழுத்துக் கொண்டு வந்தீர்களா?"

"பின் எதற்கு? ஒரு சபா ஆரம்பிக்கவா? என் கல்யாணமே இந்தப் பையில்தான் ஊசலாடுகிறது!"

"என் வேலை? அதுவும் இந்தப் பையில் தான் ஊசலாடும்!"

"நீதான் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய் என்று யாருக்குத் தெரியப் போகிறது?"

"பீரோ சாவி என்னிடம் இல்லை. சந்தானத்திடம்தான் இருக்கு!"

"இரண்டு சாவிகள் உண்டு!"

"இன்னொன்றை முதலாளியே வைச்சண்டிருப்பார்."

ரகுபதி ஒரு நிமிஷ நேரம் யோசனை செய்தான், கண்களை மூடிக் கொண்டு. அவன் யோசனையின் முடிவை வெளியிடும் முன், சேஷன் —

"ஸார்.... நான் கேட்கிறேனேன்னு கோபிச்சுக்காதீர்கள்! அந்தப் பையில் ரகசியங்கள் இருக்குன்னு சொன்னீர்களே? என்ன என்ன ரகசியமெல்லாம் இருக்கு?"

"எடுத்துக் கொடுக்கிறதுக்கு முன்னாலே நீ பார்த்துப் படித்துக் கொள். எனக்கு ஆட்சேபணையில்லை."

"ரொம்பப் பயப்படும்படியா இருக்கான்னு தெரிஞ்சுக்கலாம்னுதான் கேட்டேன். ஏன்னு கேட்டா, நீங்க கம்பெனியிலிருந்து டிஸ்மிஸ், மன்னிக்கணும் வெளியேறிக் கிட்டத்தட்ட ஒன்பது வருஷங்களாகிறது. இனிமேல் யார் இந்தக் குப்பையைக் கிளறி, உங்களைத் தூண்டில் போட்டு இழுப்பார்கள்?"

"சந்தானம்!"

"அவர் காலிலே விழுந்தால் அவர் ஏன் இந்தத் தொல்லைக்குப் போகப் போகிறார்?"

''அவன் காலிலே நான் விழறதா? நான்ஸென்ஸ்!''

''அப்போ நைஸாகப் பேசி, ஏதாவது ஆசை காட்டி இணங்க வையுங்கள்.''

''அதுக்கெல்லாம் அவன் மசிய மாட்டான்.''

''அப்போ சும்மா இருங்கள். நடக்கிறபடி நடக்கட்டும்.''

''முட்டாள் மாதிரிப் பேசாதே!''

''சரி.....!''

''நான் சொல்கிறபடி கேளு!''

''அதுதான் சொன்னேனே!''

''அது போலச் செய்!''

''என் வேலை போயிட்டா?''

''போகாது!''

''உங்களுக்குத் தெரியுமா?''

ரகுபதி பொறுமை இழந்தான். ஆனாலும் தனது ஆத்திரத்தைக் காட்டிக் கொண்டால் யாருக்கு நஷ்டம்?

''ஆயிரம் ஃபைல்களிலே இந்த ஃபைல் இருக்கிறதா, இருக்கிறதான்னு தினம் தினம் யாராவது பார்க்கப் போகிறார்களா? அது காணாமல் போய் விட்டது என்று நாளைக்கு எப்படித் தெரியும்? ஃபைல் இருக்கிற சமாசாரமே ஒரு வேளை சந்தானத்துக்குத் தெரியாமல் இருக்கலாம். அப்படியே தெரிந்திருந்தாலும் எப்போதோ பார்த்ததாக இருக்கும்.''

''ஆனால் இப்போ திடீர்னு அது முக்கியமான டாக்குமெண்டாகப் போயிடுத்தே!''

''யாருக்கு?''

''எல்லாருக்கும் தான்..... நீங்க.... இப்போ அந்தப் பைலைப் பத்தி நினைக்கிறதுக்கு என்ன காரணம்? தேவி கம்பெனி உதவி மானேஜர் சொந்த விஷயமாக உங்களைச் சந்திச்சதுதானே? உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பயம்தானே? அது போல் அவருக்கும் தோன்றியிருக்கலாம், இல்லியா?''

ரகுபதியால் மறுக்க முடியவில்லை. 'ஆமாம்' என்று தலையசைத்த அவன், தான் நினைத்தது போல் ரேஷன் அப்படியொன்றும் முட்டாள் இல்லை என்று நினைத்தான்.




''அதனுலே நான் என்ன சொல்றேன்னு, ஒண்ணு நீங்கள் இந்த ஃபைல் விவகாரத்தை மறந்து, எல்லாம் ஈசுவரன் இஷ்டப்படி நடக்கட்டும்னு விட்டு விடுங்கள். இல்லாட்டா, அவனுடன் இழைஞ்சு பேசி, குழைஞ்சு பேசி உங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுங்கள்......''

'' உன் யோசனையைக் கேட்டால் இந்தக் கலியாணமே நடக்காது !''

''இந்த ஒரு பைல் காரணமாகத்தான் நடக்காது என்கிறீர்களா?'' என்று சிரித்த சேஷன், அர்த்தபுஷ்டியுடன் ரகுபதியைப் பார்த்தான்.

'' நீ வேறு பழசை யெல்லாம் கிளறுதே! நானே மறந்து கிடக்கேன்'' என்றான் ரகுபதி.

தன்னை இழுத்துக் கொண்டு வந்து, தன் காரியத்திலேயே கண்ணுக இருந்து, அதற்கு அவனையும் ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ள நினைத்திருக்கும் ரகுபதியைக் கண்ட போது சேஷனுக்கு எரிச்சல் உண்டாயிற்று. மேலும், இன்னும் இரண்டாவது காட்சியை வேறு ஆரம்பிக்கவில்லை. போகிற



போக்கைப் பார்த்தால் நாடகம் முதல் காட்சியுடன் முடிந்துவிடும் போலிருக்கிறது.

''நீங்க மறந்து கிடந்தாலும், உலகம் அத்தனை சீக்கிரத்திலே மறந்துவிடாது. பாருங்கள்...... மேலும், என்னுடைய சொந்த ஊர் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது. அது வேணும்னா உங்களுக்கு இதுவரையில் தெரியாத ரகசியமாக இருக்கலாம்.''

ரகுபதி அதிர்ந்து போனான். 'இந்த சேஷன் முட்டாள் அல்ல என்பது மட்டுமல்ல; அவன் சாதுரியமும் சாமர்த்தியமும் நிறைந்தவன்! பார்ப்பதற்கு என்னவோ பரம சாதுவைப் போல், ஓர் ஏமாளியைப் போல இருக்கிறானே தவிர, உண்மையில் ஆபத்தை விளைவிக்கக் கூடியவன். இவனைச் சமாளிக்க வேறு உபாயங்கள்தான் தேட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

ரகுபதி நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு, ''சேஷன், இது வரையில் நடந்ததை யெல்லாம் மறந்துவிடு. நீ இங்கே சொல்கிறதிலே அர்த்தம் இருக்கு. கலியாணம் வேண்டாம்னு தற்போதைக்குச் சொல்லி விடுகிறேன். இந்தச் சீதா இல்லாவிட்டால் எத்தனையோ பெண்கள்! என் பதவிக்கும் பணத்துக்கும் பெண்ணா கிடைக்க மாட்டாள்!'' என்றான். பிறகு, ''இந்தச் சந்தானத்தின் குறுக்கீடு இல்லாத இடமாகப் பார்த்துக்கொண்டால் போச்சு!'' என்று முடித்தான்.

''அதுதான் கரெக்ட்!'' என்ற சேஷன், நாற்காலியில் நெளிந்தான். ரகுபதி மனத்தில் வேறு என்னவெல்லாமோ நினைத்துக் கொண்ட பிறகுதான் இப்படிப் பேசுகிறான் என்பது தெளிவாகத் தெரிந்தும், சேஷன் தனக்கு அது தெரிந்து விட்டதைக் காட்டிக் கொள்ள வில்லை.

அதன் பிறகு இரண்டாவது காட்சி ஆரம்பமாகி, இரவு பன்னிரண்டு மணி வரை தொடர்ந்தது. மறு நாள் சேஷனால் ஆபீசுக்குக்கூடச் செல்ல முடியவில்லை.

ஃ ஃ ஃ

திங்கட்கிழமை.

முதலாளி ஏதோ அவசர வேலையாக, சந்தானத்தைத் தம் வீட்டுக்கு வரச் சொல்லவே அவன் ஒரு மணிக்கே கம்பெனியை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டான். டெஸ்பாட்ச் அட்டெண்டர் தபாலாபீசுக்குப் போயிருந்தான். சரியாக ஒன்றரை மணிக்கு, மிஸ் அமிர்தம், ''மிஸ்டர் சேஷன் சார், நான் லஞ்சுக்குப் போய் விட்டு வரட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

''உம்.... சரி.....''

''இரண்டு இரண்டேகாலுக்குத்தான் வருவேன்.......''

''நீ வராமலேயே இருந்தாக்கூட எனக்குக் கவலை இல்லை!''


''ரொம்ப நன்றி ஸார்....!''

அவள் தலை மறைந்ததும் அவன், சந்தானத்தின் அறைக்குள் நுழைந்தான். மூன்று கோத்ரஜ் பீரோக்களும் பூட்டப்பட்டிருந்தன. மேஜை டிராயர்களை இழுத்துப் பார்த்தான். ஒன்று கூடத் திறந்திருக்க வில்லை. மேஜை மீது இருந்த காகிதங்களுக்குக் கீழே சாவிக் கொத்து இருக்கிறதா என்று தேடினான். இருக்காது என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். எது எப்படிப் போனாலும், கம்பெனிச் சாவிக் கொத்து, கர்ணனுடைய கவசத்தைப் போல், சந்தானத்தின் பாக்கெட்டிலேயேதான் இருக்கும்! அவனா மறந்து போய் வைத்து விடுவான்?

இருந்தாலும் அவனுடைய ஆத்திரம், லவலேச நம்பிக்கையில் தேடத் தூண்டியது. சாவிக்கொத்து கிடைக்க வில்லை. பத்து நிமிஷங்களில் உடம்பு வியர்த்து, ஷர்ட்டெல்லாம் கசிந்து போகவே, அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் ஆசனத்துக்கு வந்தான். ரகுபதியின் ரகசியங்களோ, திருவிளையாடல்களோ அவன் அறியாததல்ல. இருந்தாலும், கம்பெனி பைலில் ரகுபதியே பயப்படும்படியாக என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள அவன் துடித்தான். அவ்வளவு தூரத்துக்கு முக்கியமான பைலாக இருந்தால் அதை ரகுபதியிடம் காதும் காதும் வைத்தாற் போலக் கொடுப்பான்! ஆனால் சும்மாவா கொடுப்பான்? தேனி கம்பெனியில் ஒரு வருஷத்தில் கிடைக்கிற சம்பளத்தை ஒரு நொடியில் கறந்து விட மாட்டானா?

ஆனால் ஃபைல் கிடைக்கவில்லை.

தலைக்கு மேலே மின்சார விசிறி பேயாகச் சுழலச் சேஷன் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொள்ளலானான். அட்டெண்டர் வர இன்னும் குறைந்தது அரை மணி நேரமாவது ஆகும். தபாலாபீஸ் என்று போனால், போற வழியில் ஒரு ஸிங்கிள் டீ, ஒரு பீடி. அப்புறம் வர வழியில் தெரிந்தவர் தெரியாதவர்களுடனெல்லாம் அரட்டை அடிப்பான். அமிர்தம் முதலிலேயே நோட்டீஸ் கொடுத்து விட்டாள்,



''திரும்பத் திரும்ப 'கேராவ்' என்ற வார்த்தையை ஏன் சொல்கிறீர்கள்? ஸினிமாவுக்குச் சாயங்காலம் அழைத்துப் போகிறேன் என்றுதான் சொல்லி விட்டேனே!''

'தாமதமாகத்தான் வருவேன்' என்று. சந்தானம் எப்போது வருவாரோ?

சேஷனுக்கு வேலை ஓடவில்லை. மணியைப் பார்த்தான். ஒன்றே முக்கால். உட்கார்ந்தே தூங்கிப் பழகிய சேஷனின் கண்கள் மெதுவாகச் சொருகின.

திடீர் என்று 'ஸார், ஸார்!' என்று குரல் கேட்டது. தான் வெகு நேரம் தூங்கிப் போய் விட்டோமோ என்ற பிரமையுடன் கண் திறந்தான். பத்து நிமிஷங்கள்கூட ஆகியிருக்கவில்லை. அவனுக்கு எதிரே நின்று கொண்டிருந்தாள் ஒரு பெண்.

''ஐ ஆம் ஸாரி..... ராத்திரி சரியாகத் தூங்கவில்லை!'' என்ற அவன், அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே யோசனை செய்தான். வந்தவளை எங்கேயோ பார்த்திருக்கிறான்! எங்கே?

''பரவாயில்லை. மிஸ்டர் சந்தானம் இருக்கிறாரா?''

''முதலிலே உட்காருங்கள்'' என்ற சேஷனுக்கு, உடனேயே நினைவுக்கு வந்து விட்டது, யார் பெண் என்று.

''போன வருஷம் ஒரு நாள் சாயங்காலம் வந்திருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள்தானே சீதா?''

''ஆமாம்.... நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே! சந்தானம் இல்லியா?''

''இல்லை. முதலாளி வீட்டுக்குப் போயிருக்கிறார். ஏதாவது சொல்லணுமா?''

''உங்க முதலாளி வீட்டிலிருக்கிறார் என்றால் போனில் பேசலாமில்லியா?''

''ஓ, யெஸ்!''

''அவர் ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாரே?''

''யாரு சந்தானமா? ஊஹூம், மாட்டார். அதுவும் உங்க விஷயத்திலே!''

''நான் சந்தானத்தைப் பற்றிக் கேட்கவில்லை. முதலாளியைப் பற்றிக் கேட்கிறேன்.''

''அவரா.... அவருக்கு ஃபோன் மணி அடிச்சாலே பரம சந்தோஷமாச்சே.... அதோ, அந்த அறையில் தான் இருக்கு.'' சேஷன் சொல்லிவிட்டு, ஃபோன் நெம்பரையும் கொடுத்தான்.

சீதா ஃபோன் செய்யலாம் என்று நினைத்தாளே தவிர, உடனேயே பேச முற்படவில்லை. நாற்காலியிலேயே உட்கார்ந்து யோசனை செய்தாள்.

''ரொம்ப முக்கியமான விஷயமோ!'' என்று கேட்டான் சேஷன். சீதாவைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. ரகுபதி அதே கணத்தில் மனக் கண் முன் தோன்றவே, அந்தப் பாவிக்கா இவளைப் பலியிடப் போகிறார்கள் என்ற பச்சாத்தாபமும் எழுந்தது.

''ஆமாம்.....''

''சொந்த விஷயம் இல்லியோ?''

''ஆமாம்....'' சீதாவுக்கு ஏனோ, சேஷன் துருவித் துருவிக் கேட்டதில் கோபம் உண்டாகவில்லை.


''நான் மேலே மேலே கேட்கிறேனென்னு நினைச்சுக்காதீர்கள். கலியாண விஷயம்தானே?''

இப்போது சீதா வாயடைத்துப் போய் நின்றாள்! ஒரு வேளை சந்தானம் குடும்பச் சமாசாரங்கள் எல்லாவற்றையும் சேஷனிடம் சொல்லியிருக்கிறாரோ?

''நிச்சயமாயிடுத்தா?''

''நிச்சயமான மாதிரித்தான்!''

''ரகுபதிதான் பிள்ளை என்றால்....!'' சேஷன் மேலே தொடராமல் 'சட்'டென்று நிறுத்தினான். (தொடரும்)



உண்மைக் கதை

பள்ளணப்

வே. ரா. சுந்தரராமன்

1963ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ந் தேதி வெள்ளிக்கிழமை எங்கள் குடும்ப வாழ்க்கையில் பொன்னுல் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நன்னுள் என்று நாங்கள் பெருமையுடன் எண்ணினேம். ஏனெனில், அன்றுதான் எங்கள் அருமந்தப் பெண்ணுகிய பத்மாவை போயிங் 707 என்னும் அசுரவேக விமானத்தில் ஏற்றிக் குபேரபட்டினம் என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவுக்கு வழி அனுப்பினேம். அன்று இரவு முழுவதும் எனக்கும் என் மனைவிக்கும் தூக்கமே இல்லை. விமானம் சரிவரப் போக வேண்டுமே. அதுவும் வழியில் ஐரோப்பா கண்டத்தின் உயர்ந்த மலைத் தொடர் ஆல்ப்ஸின் சிகரமான மாண்ட் ப்ளாங்கு என்பதைத் தாண்டுகையில் மூடு பனியினுல் விபத்து ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே, என்றெல்லாம் எங்களுக்கு ஒரே கவலையாக இருந்தது.

அவளுக்கும் எங்களை விட்டுப் பிரிந்து உலகத்தின் மறு பாகத்துக்குப் போகிறேமே என்ற ஏக்கம் போலும். இல்லையேல், முழுப் பயணமும் முற்றுப் பெருதிருப்பினும், வழியில் பாரிஸ் விமான நிலையத்திலிருந்தே எங்கள் இருவருக்கும் தனித் தனிக் கடிதங்கள் எழுதுவாளா?

போன இடத்தில்தான் என்ன பெரும் புகழும்! எத்தனை புகழ் மாலைக் குவியல்கள்! எங்கெங்கெல்லாம் அவள் அமெரிக்கர்களைக் கண்டு அவர்களுடன் அளவளாவ நேர்ந்ததோ அங்கெல்லாம் இவளுக்குப் பாராட்டுக்கள் வந்த வண்ணம் இருந்தன. முக்கியமாக இவளுடைய ஆங்கில மொழித் தேர்ச்சியைக் கண்டுதான் அவர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து வியந்தார்கள். இவள் டாக்டர் படிப்புக்காகச் சேர்ந்த கல்லூரியிலுள்ள பேராசிரியை, "நாங்கள் அமெரிக்கர்கள்; எங்கள் தாய்மொழியே ஆங்கிலம்தான். இருந்தாலும் எங்களைவிட மிகச் சிறந்த முறையில் நீ ஆங்கிலம் பேசுகிருய்!" என்ருள்.

ஏன்? ஆங்கிலம் மட்டும்தான? ஃபிரெஞ்சு மொழியிலும் இவளுக்குப் பயிற்சி உண்டு. அமெரிக்காவுக்குப் போனதும் போகாததுமாக இவள் சேர்ந்திருந்த கல்லூரியில் ஃபிரெஞ்சு மொழியில் அவர்கள் வைத்த ஒரு பரீட்சையில் முதலாவதாகத் தேறிருள். இவளுடைய வகுப்பிலுள்ள எல்லோரும் இவளைச் சூழ்ந்து கொண்டு "இக் கடுமையான பரீட்சையில் முதல் முறையிலேயே தேறியதுமட்டுமல்லாமல் தேறியவர்களுள் முதல் இடமும் பெற்ற இந்திய மாணவி நீதான?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"சமீபத்தில் ஒரு பரீட்சை நடந்தது. அதில் நான் 100க்கு 100 மார்க்குகள் வாங்கினேன். இதனுல் நான் காலத்திலும் ஆறு மாதங்களையும் பணத்தில் 500 டாலர்களையும் (நம் நாட்டு நாணய மதிப்பில் * ரூ. 2,375) மிச்சப்படுத்திவிட்டேன்" என்று தன் கடிதம் ஒன்றில் எழுதி எங்களை உள்ளம் பூரிக்க வைத்தாள். இதையெல்லாம் அறிந்து நாங்களும் ஒரு சுற்றுப் பருத்தோம்.

அவள் ஃபிரெஞ்சு மொழி கற்றதே ஒரு விசித்திரமான சம்பவம்.

பரீட்சைகளில் நல்ல மார்க்குகள் வாங்கித் தேறுவதற்கு சம்ஸ்கிருதம் உதவுவதுபோல்

* இப்பொழுது இது ரூ. 3750 ஆக உயர்ந்து விட்டது.

அமெரிக்காவில் நான் வாங்கிய காரை, 'கிளிதான் போ' என்று வர்ணித்தாள் பத்மா. காரில் ஏறிப் பறந்தாள், திரும்பி வராத ஊருக்கு......



பறந்த பத்மா



அப்துல் கனி என்பவன் என் கல்லூரி நண்பன். நாங்கள் இருவரும் நெருங்கிப் பழகியிருந்தோம். பின்னர் வாழ்க்கையில் இவன் ஒரு வைத்தியனானான். நாங்கள் சென்னையில் இருக்கும்போதெல்லாம் இவனிடம்தான் எங்களை அவ்வப்போது பாதிக்கும் நோய்களுக்கு வைத்தியம் செய்து கொள்வோம். பத்மாவிடம் அவனுக்கு மிகுந்த வாத்சல்யமும் மதிப்பும் உண்டு. ஒரு முறை இவள் அவனிடம் தன் இருதயத்தில் ஒருவித வேதனை இருப்பதாகச் சொல்லி அதற்குத் தக்க சிகிச்சை கோரினாள். டாக்டர் அப்துல் கனி குறும்புச் சிரிப்புடன் ''ஹிருதய

தமிழ் பயன்படுவதில்லை என்ற எண்ணம் மாணவ மாணவிகள் பலருக்கு உண்டு. பத்மாவும் இந்த அபிப்பிராயம் கொண்டிருந்தாள். ஆயினும் இவள் தமிழையே தான் படித்து வந்தாள் பள்ளிக் கூடத்தில். எஸ். எஸ். எல். ஸி.யில் தேறி இண்டர்மீடியட் வகுப்பில் இவள் சேரவிருந்த சமயம் நான் ''தமிழுக்குப் பதிலாக ஃபிரெஞ்சு மொழியைப் பாடமாக எடுத்துக்கொள், ஸம்ஸ்கிருதத்தைப் போலவே அதிலும் நிறைய மார்க்குகள் வாங்க வாய்ப்பு உண்டு'' என்று யோசனை கூறினேன். சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் இவள் வேண்டுகோளுக்கு அவர்கள் இலேசில் இணங்கவில்லை. ரொம்பவும் வற்புறுத்திய பிறகு அவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆனால் ஒரு முக்கியமான நிபந்தனையின் பேரில்தான். முதன் முதலாக அம்மொழியில் அவர்கள் வைக்கும் பரீக்ஷையில் தேறுவிடில் ஃபிரெஞ்சை விட்டுவிட்டு மீண்டும் தமிழைப் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. ஆனால் இவள் அப்பரீக்ஷையில் 100க்கு 100 மார்க்குகள் வாங்கி அவர்களையே பிரமிக்க வைத்தாள்!

சென்னையில் இண்டர்மீடியட்டை முடித்துக் கொண்டு கல்கத்தா சர்வகலாசாலையில் பி.ஏ. பட்டப் படிப்புக்குச் சேருகையில் திரும்பவும் தமிழ் இவளுக்குப் பாடமாக அமைந்தது. இரண்டு ஆண்டுகள் தொடர்பற்ற பின் மீண்டும் அதைப் படிப்பது எளிதாய் இல்லைதான். ஆனாலும், எப்படியோ சமாளித்து இறுதியில் அதிலும் 'டிஸ்டிங்க்ஷன்' பெற்றுத் தேறினாள்.

இவளுடைய தாய்மொழி அபிமானம் இவளை அமெரிக்காவிலும் தொடர்ந்தது. வாஷிங்டனிலிருந்து ஒலிபரப்பப்படும் ''வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா'' நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் கால் மணி நேரம் ''கேள்வியும் பதிலும்'' என்னும் தலைப்பில் ஒலிபரப்பப்பட்ட விசேஷ தமிழ் நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டாள். என் மனைவியும் நானும் வியாழன்தோறும் அதைக் கேட்க ரேடியோவின் எதிரே அமர்ந்துவிடுவோம். இரவு மணி ஏழே முக்கால் நெருங்கும்போது 'கன்றின் குரலைக் கேட்டுக் கனிந்து வரும் பசுப்போல்' என்னும் பாடலைப் பாடியபடி என் மனைவியின் முகத்தை மகிழ்ச்சியுடன் பார்ப்பேன். அவள் முகத்திலும் குதூகலம் தாண்டவமாடும். பத்மாவின் பேச்சு எப்போதுமே எங்களைச் சந்தோஷத்தில் ஆழ்த்திச் சிரிக்க வைத்த பேச்சுத்தான்.

நோயா? நிவாரணம் அளிக்க யார் வர வேண்டும்?'' என்று கேட்டான். இவளும் சளைக்கவில்லை. விஷமப் புன்னகையுடன், ''மிஸ்டர் எம். தான் வேண்டும்'' என்றாள்.

'''எம்' என்றால் மூர்த்தியா, மகாதேவனா, மகாலிங்கமா, மாதவனா, மார்க்கபந்துவா, மீனாட்சி சுந்தரமா?'' என்று 'எம்' என்ற எழுத்தில் தொடங்கும் ஆடவர் பெயர்களை அடுக்கிக் கொண்டே போனான் அவன். இவள் ஒவ்வொன்றுக்கும் தலையை அசைத்து 'இல்லை' என்றாள். கடைசியில் அவன், ''மிஸ்டர் 'எம்' என்றால் யாரைத்தான் குறிக்கிறாய்?'' என்று கேட்கவே, ''மிஸ்டர் மெடிஸினைத்தான்'' என்றாள் இவள். அவன் இந்தச் சாதுரியமான விடையைக் கேட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்.

தான் அமெரிக்காவுக்குப் போகவிருந்ததைக்கூட வேடிக்கையாக, ''நான் இவ்வுலகத்தைவிட்டே போய்விடப் போகிறேன்'' என்று குறிப்பிட்டாள். இது அவளுடைய தாயாருக்கு அமங்கலமாகவும் அச்சான்யமாகவும் இருந்தது. ''என்னடி உளறுகிறாய் அசடே! அப்படியெல்லாம் அசுபமாய் ஒன்றும் சொல்லாதே'' என்று கடிந்தாள். இவள் ஒரு புன்முறுவலுடன் ''என்னம்மா நான் உண்மையைத்தானே சொல்கிறேன். இந்த உலகத்தில் நாம் வசிக்கும் பாதியைப் 'பழைய உலகம்' என்றும், இரு அமெரிக்காக்களும் அடங்கிய பாகத்தைப் 'புது உலகம்' என்றும் பூகோள சாஸ்திரப் பரிபாஷையில் குறிப்பிடுவதுண்டு. நான் இந்தப் பாதியை விட்டு அந்தப் பாதிக்குப் போகிறேன் என்றுதானே சொன்னேன்! இதில் என்ன தப்பு?'' என்று சாதுர்யமாக விடை யளித்துத் தன் தாயாரைச் சிரிக்க வைத்தாள்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் கார் ஓட்டக் கற்றுக் கொண்டு ஒரு வண்டியையும் வாங்கினாள். அது புத்தம் புதியது. 1964 மாடல் 'ஷெவர்லே'. அந்த வாகனத்தைப் பற்றித் தனது தாயாருக்குப் பெருமையாய்ப் புகழ்ந்து எழுதி, ''என் கார் என்னவென்கிறாய்? அம்பு போல் பறக்கும்! அத்துடன் கொள்ளை அழகாகவும் இருக்கிறது. 'இனி' தான் போ!'' என்று தன் வர்ணனையை முடித்தாள்.

1965 ஜூன் மாதம் 5–ந் தேதி காலையில் (நம்மூரில் மாலை 7 மணி) தன் மோட்டார் வண்டியை ஓட்டிக் கொண்டு கிளம்பினாள் பத்மா. வில்லியம்ஸ்பர்க் என்னும் நகரத்துக்குப் போய்க் கொண்டிருந்தாள். புறப்பட்ட இடத்திலிருந்து சில மைல்கள் போவதற்குள்ளாகவே அவளுடைய ஆயுள் முடிந்து விட்டதென்று பாழும் சித்திரகுப்தனின் கணக்குச் சொல்லிவிட்டது. இவளுடைய வண்டி போய்க் கொண்டிருந்த நெடுஞ்சாலையில் ஒரு திருப்பம் வந்தது. அச்சமயம் எதிரில் வந்து கொண்டிருந்த இரு மோட்டார்களுடன் இவளுடைய வண்டி மோதிக் கொண்டது. வண்டியிலிருந்து வெளியே நூற்றி ஐம்பது அடி தூரம் தூக்கி எறியப்பட்டாள் பத்மா. இடுப்புக்குக் கீழே உள்ள எலும்புகள் பல முறிந்து உயிர் நீத்தாள். 'புது உலக'த்துக்குக் குதித்துக் கொண்டு போன இவள் இவ்வுலகத்தை விட்டே ஓட நேர்ந்தது. புள்ளெனப் பறந்து சென்றாள், எங்களைக் கண்ணீரும் கம்பலையுமாய்த் தவிக்கவிட்டு.

ஆம், நாங்கள் மட்டும் உயிருடன் இன்னும் இருக்கிறோம். அழுகிறோம்; ஆறாத் துயர் உற்றோமே என அரற்றுகிறோம்; ''உடம்பனைத்தும் வாயாக அழுதாலும் உறு துயரம் ஒழிந்திடாதால் இடம் படைத்த உலகாளும் இறையே நீ எங்கொளித்தாய் இந்நாள் ஐய'' என்று படைப்புக் கடவுளையே ஏசுகிறோம்.

ஃ ஃ ஃ

சில நாட்களாகவே நாங்கள் பத்மாவுக்கு மணம் புரிவிக்கத் தக்க வரனைத் தேடிக்கொண்டிருந்தோம். நாங்கள் பார்த்த மூன்று வரன்களுள் ஒருவன் அமெரிக்காவிலேயே நியூயார்க் நகரத்தில் ஒரு கலாசாலைப் பேராசிரியராகப் பணியாற்றுபவன். அவனும் இவளும் ஒருவரை யொருவர் சந்திக்க ஏற்பாடு செய்தோம். ஆனால் அவள்தான் கடவுளின் காதலியாகப் போகவிருந்தாளே. அச்சந்திப்பு நேர்ந்த பதினைந்தாம் நாள் இவள் வாழ்க்கை முற்றுப் பெற்றது.

தன் தாயாரிடம் இவள் வைத்திருந்த வாஞ்சை இவ்வளவு அவ்வளவு அல்ல. அம்மாவின் கடைசிக் கடிதத்துக்குப் பதில் எழுதி விட்ட பின்புதான் இவள் தன் இறுதிக் கார் பயணத்தைத் தொடங்கியிருக்கிறாள். ஜூன் மாதம் 4ந் தேதி இரவு அதை எழுதி முடித்து 5ந் தேதி காலையில் அதைத் தபாலில் சேர்த்திருக்கிறாள். அது இவள் மறைந்த செய்தி அறிந்து நான்கு நாட்களுக்குப் பின்னர் அதாவது ஜூன் 9ந் தேதி காலை — எங்களிடம் வந்தது. அதைப் பிரிக்கவே முடியாமல் எங்கள் விரல்கள் நடுங்கின.

யமன் இவளுடைய உயிரைத்தான் கவர்ந்து சென்றான். ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்த இவளுடைய குரல் மட்டும் எஞ்சி நின்றது. எனவே, இவள் இறந்த பின், அடுத்து வந்த வியாழக்கிழமை வழக்கம் போல் 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா'வின் தமிழ் நிகழ்ச்சியில் இவளுடைய குரல் பங்கெடுத்துக் கொண்டது. ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் ''காலஞ்சென்ற நேரு'' என்று இவள் சொன்னதைக் கேட்ட எங்கள் மனம் வெந்து துடித்தது. ''ஐயோ! நீயே காலஞ்சென்றவளாகி விட்டாயே'' என்று சொல்லி நாங்கள் எல்லோரும் பொருமினோம். இறுதியில் வழக்கம்போல் அவளுடைய குரல், ''வணக்கம், வருகிற வியாழக்கிழமை மீண்டும் சந்திப்போம்'' என்று நிகழ்ச்சியை முடிக்கையில் எங்கள் மனம் பட்ட பாட்டை வர்ணிப்பது எப்படிச் சாத்தியமாகும்?



அத்தியாயம் 25

மிஸ்டர் மில்லர்

“உங்கள் லட்சியமும் பெருமையும் போலீஸிடம் அகப்பட்டுக் கொண்டால் உதவிக்கு வருமா?” என்று 'வெடுக்' கென்று கேட்டாள் கமலவாசகி.

“யாருடைய உதவியையும் நான் எதிர்பார்க்கவில்லை. நான் என்னையே நம்புகிறேன். என்னை நான் கைவிட மாட்டேன். நான் அகப்பட்டுத் தூக்கு மேடை ஏறினாலும் அதுபற்றி அக்கறை யில்லை.”

“நீங்கள் ஒரு சுயநலக்காரர்” என்றாள் எரிச்சலுடன்.

“நானா....? — அதிர்ச்சி யடைந்தவனாய்க் கேட்டான் ரங்கமணி.

“பின்னே என்ன? உங்களுடைய லட்சியம், புரட்சி இவைகளைத்தானே பெரிதாக எண்ணுகிறீர்கள்! அதற்காகச் சாகவும் தயாரா யிருக்கிறீர்கள். ஆனால் என்னைப் பற்றிச் சிந்தித்து எனக்காக வாழ ஒரு நிமிஷமாவது நினைக்கிறீர்களா?” என்றாள் கமலவாசகி. துக்கம் தொண்டையை அடைத்தது. அவளுடைய கண்களில் நீர் முட்டி நின்றது.

அவளையே சிறிது நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கமணி. தன்னைச் சுற்றியே வாழ்வைப் பின்னிக் கொண்டு, அதற்குள்ளேயே முடங்கி, சுகம் காணத் துடிக்கும் பெண் இனத்தின் மீதே அவனுக்கு இரக்கம் தோன்றியது. அவனும் அந்தக் குறுகிய வாழ்க்கை வலைக்குள் முடங்கியிருக்க முடியாது. ஆனால் கமலவாசகி, அவனை அதற்குள் இழுக்கிறாளே....

இரக்கத்தோடு அவளைப் பார்த்தான் ரங்கமணி. கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு தலைநிமிர்ந்த கமலவாசகி, ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவளைப் போல் காணப்பட்டாள்.

“நம்முடைய காதல் உண்மையானது தானே?” என்று கேட்டாள்.

“இதில் உனக்கு ஏன் சந்தேகம் வந்தது?”

“எனக்காக நீங்கள் வாழ வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டீர்களா?”

“ஓ...”

“உங்களுடைய காதலி, உங்களுடைய அடிமை இல்லை; அவளுக்கும் சுதந்திரம் உண்டு; அவளுடைய சொல்லுக்கும் மதிப்பு உண்டு என்று நினைக்கிறீர்களா?”

“உம்...”

“அப்படியானால் நான் சொல்வதையும் நீங்கள் கொஞ்சம் கேட்டுத்தான் ஆக வேண்டும்.”

“என்னவென்று? உன்னுடைய பக்கத்தில் சோம்பேறியாக, உல்லாச புருஷனாக, உன்னுடைய வாழ்க்கைக்கு இன்பம் ஊட்டும் கருவியாக...”

“நிறுத்துங்கள்...” என்று குறுக்கிட்டு எரிந்து விழுந்தாள், கமலவாசகி. அவள் கோபத்தைக் கண்டு திகைத்து வாய் அடைத்துப் போய் உட்கார்ந்திருந்தான் ரங்கமணி.

“நான் மட்டும் நீங்கள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் உங்களுடைய கைப்பொம்மையாக இருக்க வேண்டுமா? உங்களுக்கு ஒரு லட்சியம் இருந்தால் எனக்கும் ஒரு லட்சியம் உண்டு. உங்களுக்கு உங்களுடைய லட்சியம் பெரிதென்றால், என்னுடைய லட்சியம், எனக்குப் பெரிது...” என்று படபடப்புடன் பொழிந்து தள்ளினாள் கமலவாசகி.

“ஏன் இவ்வளவு கோபமாகப் பேசுகிறாய்? என்னுடைய லட்சியத்தில் உனக்கு நம்பிக்கை

இல்லையென்றால், நீ அதை நம்பித்தான் ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லையே? நம்முடைய லட்சியங்கள் வேறாக இருக்கலாம். நம்மைப் பிணைத்தது நம்முடைய லட்சியங்கள் அல்ல. இருவரின் இதயங்கள். அதை மறந்து விடாதே, ராணி.''

''இந்தக் காதலை நெஞ்சில் சுமந்துகொண்டு எந்த நேரத்தில் எது நடந்துவிடுமோ என்ற பயத்திலேயே நான் ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்க வேண்டும் என்கிறீர்கள்; அப்படித் தானே?''

''அதற்காக என்னுடைய லட்சியத்திலிருந்து நான் விலக முடியுமா?''

''நீங்களும் உங்கள் லட்சியமும்..'' என்று எரிந்து விழுந்தாள் கமலவாசினி. ரங்கமணியின் கண்கள் கோபத்தால் விரிந்தன. புருவங்கள் நெரிந்தன.

''என்னுடைய லட்சியத்துக்காக உன்னிடம் பிச்சை கேட்க வரவில்லை'' என்று சூடாகப் பதில் சொன்னான்.

''ஏன்? இப்போது அடைக்கலப் பிச்சை அளித்திருக்கிறேனே'' என்றாள் கமலவாசினி, ஏளனமாக. இதைக் கேட்டு ரங்கமணி அதிர்ந்து போனான். அவன் முகம் கருத்து விட்டது. ஒரு கணம் தலை குனிந்தான். என்ன நினைத்தானோ, திடீரென்று எழுந்தான். ''நீ எனக்குப் பிச்சையிட வேண்டாம்...'' என்று கூறிவிட்டு வாசலை நோக்கி நடந்தான்.

''எங்கே போகிறீர்கள்?'' — கமலவாசினி கேட்டாள். ரங்கமணி சற்று நின்றான்.

''என்னுடைய லட்சியத்தை நோக்கி'' என்றான்.

''அதாவது, சிறைச்சாலையை நோக்கி'' என்றாள் வெடுக்கென்று.

''உம்...அற்ப ஆசைகளைக் கொண்டிருக்கும் பெண்களிடம் சிக்குவதைவிடச் சிறையிலிருப்பது எவ்வளவோ மேல்.''

''அப்படியானால் நீங்கள் காதலித்திருக்கவே வேண்டாமே!''

''இந்தக் காதல் நம்முடைய சக்திக்குள் அடங்கக் கூடியதா? அப்படி என்னுடைய ஆணைக்குள் அடங்குவதாயிருந்தால், காதலை என்றோ உதறி எறிந்திருப்பேன். அதுதான் நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டதாகி விட்டதே'' என்று கூறிக் கொண்டே வாசலை நோக்கி நடந்தான்.

கமலவாசினி ஓடிச் சென்று வாசற் கதவின் மேல் சாய்ந்து கொண்டு அவனை வழி



மறித்து நின்றாள். ஒரு கணம் இருவர் கண்களும் சந்தித்தன.

இருவர் பார்வையையும் கண்ணீர் மறைத்தது.

''கடைசியில் உங்கள் முடிவு இதுதானா?''— கமலவாசினி கேட்டாள். அவள் குரல் கம்மியது.

''ஆமாம்...'' என்று தலையசைத்தான் ரங்கமணி.


''உங்கள் ராணியை மறந்துவிடத் தீர்மானித்து விட்டீர்களா?''

''மறக்க முடியுமா? அதுதான் சொல்லி விட்டேனே, காதல் என்னுடைய சக்திக்கு மீறியது என்று. நான் நினைத்தாலும் உன்னை என் இதயத்திலிருந்து தள்ள முடியாதே''

''இது வெறும் வறட்டுத் தத்துவம்.''

'' தத்துவங்கள் வேதனையிலிருந்தும் புறப்படும்'' என்றான் ரங்கமணி கலங்கிய கண்களுடன். கமலவாசகி, கதவை விட்டு விலகி நின்றாள்.

''உங்கள் இஷ்டம்'' என்றாள் விரக்தியுடன். ரங்கமணி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். கமலவாசகி, கட்டிலில் விழுந்து விம்முவது அவன் காதில் கேட்டது. சற்று



நின்று திரும்பிப் பார்த்தான். கட்டிலில் விழுந்து அவள் குலுங்கக் குலுங்க அழுவது தெரிந்தது. பிறகு இருளில் சென்று மறைந்து விட்டான் அவன்.

இருட்டிலேயே பதுங்கிப் பதுங்கிச் சென்று தன் அறையை அடைந்தான் ரங்கமணி. அவன் மனம் தவித்தது. அமைதி இன்றி இரவு முழுவதும் அவன் படுக்கையில் புரண்டான்.

நெஞ்சில் நிறைந்திருந்த காதலுக்கும் கொண்ட லட்சியத்துக்கும் பெருத்த போராட்டம். கடைசியில், ஆண்மை, பெண்மைக்கு அடி பணிய மறுத்து விட்டது. இருந்தாலும் கமலவாசகியின் நினைவு நெஞ்சில் உறுத்திக் கொண்டே இருந்தது.

அவளுக்கு அவன் வேண்டும். அவன் காதல் வேண்டும். ஆனால் அவனுடைய லட்சியம் மட்டும் வேண்டாம்.

இதெப்படி முடியும், ராணி...? உடல் வேண்டும்; உயிர் வேண்டாம் என்று மறுக்க முடியுமா?...

மறுநாள் காலையில் கமலவாசகி தங்கியிருந்த விடுதிக்குச் சென்றான். அவள் அறை பூட்டியிருந்தது. பக்கத்து அறையிலிருந்த மாணவியிடம் விசாரித்தான். காலையில் திடீரென்று ஊருக்குப் போய் விட்டாள் என்ற தகவல் கிடைத்தது. ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன் தன் அறைக்குத் திரும்பியபோது, அவனுக்காகத் தபாலில் ஒரு கடிதம் வந்தது.

அவசரம் அவசரமாக உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்தான். கமலவாசகிதான் எழுதியிருந்தாள்.

'உங்கள் லட்சியம் உங்களுக்குத் துணை இருக்கும்வரை நான் உங்களுக்குத் தேவை இல்லை. என்னைவிட உங்களுக்கு உங்கள் லட்சியம்தான் பெரிதாகத் தோன்றிவிட்டது. நான் போகிறேன். படிப்பை நிறுத்திவிட்டுப் போகிறேன். என்னைத் தேட வேண்டாம் — கமலவாசகி'

கடிதத்தைப் படித்துவிட்டு அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டான். இழக்க முடியாததை, இழக்கக் கூடாததை இழந்து விட்ட உணர்ச்சி இதயத்தைச் சூழ்ந்து கொண்டது.

பத்துப் பதினைந்து நாட்கள் பித்துப் பிடித்தவனைப் போல், வழக்கமாக அவனும் கமலவாசகியும் அமரும் மெரீனா கடற்கரையிலும், அவளுடைய விடுதிப் பக்கத்திலும் சுற்றிக் கொண்டிருந்தான். அவளைத் தேடிக் கொண்டு அவளுடைய ஊருக்குப் போகலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் உள் உணர்வு தடுத்துவிட்டது. அவனால் சென்னையிலும் இருக்க முடியவில்லை. திடீரென்று அநாதையாகிவிட்டதைப் போன்ற பிரமை தட்டியது. படிப்பை விட்டு விட்டு ஊருக்குப் போய் விட்டான்.

அவனுடைய நினைவிலிருந்து மெரீனாக் கடற்கரையும், பழைய சம்பவங்களும் மறையவே இல்லை.

ஃ ஃ ஃ

அந்த நினைவுகளால் மனத் தவிப்போடு ஹைகோர்ட் கடற்கரையில் படுத்துக் கிடந்த ரங்கமணியை தீட்சிதர் கூர்ந்து பார்த்தார்.

"என்ன ரங்கமணி, அழுகிறாயா...? கண்ணில் தூசி விழுந்துவிட்டது என்று பொய் சொல்ல வேண்டாம்" என்றார் தீட்சிதர்.

"எதையோ நினைத்துக் கொண்டேன்" என்று கூறிக்கொண்டே வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அவனை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டே தீட்சிதர் சொன்னார்:

"எத்தனைதான் லட்சியம், புரட்சி என்று ஊருக்காகச் சுற்றிக் கொண்டிருந்தாலும், நமக்கு ஒரு தனி உலகம் வேண்டுமப்பா. அங்குதான் மனத்துக்கு அமைதியும் தெம்பும் கிடைக்கும். லட்சியத்துக்காக அலைந்து ஓய்ந்தவனுக்கு இளைப்பாற நிழல் கிடைக்கும் இடம் அதுதான். நீ சீக்கிரம் ஒரு கலியாணத்தைச் செய்துகொள்..."

ரங்கமணி நீண்ட பெருமூச்சு விட்டான். அதில் கமலவாசகியின் நினைவால் ஏற்பட்ட ஏக்கம் கலந்திருந்தது.

'அவள் எங்கிருக்கிறாளோ, என்ன செய்கிறாளோ...? என்னை நினைப்பாளா? என்ன நினைப்பாள்? முரட்டு நாடோடிப் பயல் என்று நினைப்பாள்...

'இப்படி ஊர் சுற்றித் திரியும் நாடோடிப் பயலைக் காதலித்துத் தொலைத்தோமே' என்ற ஏமாற்றத்தால்தானே அவள் போய் விட்டாள்....

'ராணி, நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லையே...! ஏன், நான் உன்னைப் புரிந்து கொண்டேனா...?'

ரங்கமணி, தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அந்தச் சிரிப்பில் வேதனை கொப்பளித்தது. அவனுடைய இதயராணியின் பிரிவு அவனைத் தீயாகத் தகித்தது.

ஃ ஃ ஃ

சென்ட்ரல் ஸ்டேஷனில் கூட்டம், தேனீ மாதிரி மொய்த்துக் கொண்டிருந்தது. ரங்கமணியை வழியனுப்பத் தீட்சிதரும், மேகராஜனும் வந்திருந்தார்கள். வண்டி புறப்படுவதற்குக் கொஞ்ச நேரத்துக்குமுன் ரங்கமணி, தற்செயலாக அவனுடைய பெட்டிக்கு அடுத்திருந்த முதல் வகுப்புப் பெட்டிக்குள் பார்த்தான். உள்ளே சர். டி. முத்தையாபிள்ளையும், இன்னொரு கனவானும் பேசிக் கொண்டிருந்தார்கள். ரங்கமணி முதல் வகுப்புப் பெட்டியின் பக்கத்தில் சென்று சன்னல் வழியாக எட்டி உள்ளே பார்த்தான். ஜமீந்தார் முத்தையாபிள்ளை இவனைப் பார்த்ததும் பரபரப்புடன் வண்டியைவிட்டுக் கீழே இறங்கி வந்தார்.

"என்ன ரங்கமணி, சௌக்கியமா?" என்று அபிமானத்துடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டார். ரங்கமணி தலையை அசைத்தான்.

"புரட்சி வீரர் எந்த ஊருக்கோ?"—ஜமீந்தார் கேட்டார்.

"டில்லிக்குப் போகிறேன்."

"என்ன விஷயம்? அங்கும் ஏதாவது புரட்சி ஆரம்பிக்கவா?" என்று கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தார்.

"சுயேச்சைப் பத்திரிகையில் நிருபராக இருக்கிறேன். அந்த முறையில் நான் டில்லி போகிறேன்."

"ஓ.... உருப்படியாக ஒரு வேலையில் ஒட்டிக் கொண்டாயா? இதைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?" என்றார் மிகுந்த உற்சாகத்துடன்.

"கமலவாசகி சௌக்கியமா?" என்று கேட்டான் ரங்கமணி. இதைக் கேட்கும் போது ஏனோ அவன் குரல் நடுங்கியது. இந்தக் கேள்வியை ஜமீந்தார் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவனிடம் வலிய அவளைப் பற்றிக் கூற அவருக்குத் தைரியமில்லை. இப்போது அவனே கேட்டு விட்டான். என்ன சொல்வது....?

'அவளுடைய கலியாணம், இவனுக்குத் தெரிந்திருக்குமோ? தெரிந்திருக்க முடியாது. கலியாணத்துக்கு இவனுக்கு அழைப்பு அனுப்பக் கூடாது என்று அவள் பிடிவாதம் பிடித்து விட்டாளே. கலியாணம் ஆகியிருக்கும் என்றாவது யூகித்திருப்பானா....?'



ASP/SRM-1C/67 TM

உடனடி நிவாரணம்!

அஜீரணத்திலிருந்து நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் விடுதலை பெற








இனிமையான சுவையுள்ள பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னிஷியா சில நிமிடங்களில் "உடனடி" நிவாரணமளிக்கிறது. ஏனெனில் அவை பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னிஷியா வினுடைய பூரண சாரத்தையும் கொண்டது. ஒவ்வொரு மாத்திரையும் தன்னுடைய எடைக்கு 189 மடங்கு எடையுள்ள வயிற்றுப் புளிப்பை அகற்றுகிறது.

இப்பொழுது மெல்லிய தகடுகளில் 10 மாத்திரைகளாகவும் 4 மாத்திரைகளாகவும் கிடைக்கிறது. குடும்பத் தேவைகளுக்கு சிக்கனமான முறையில் 75 மற்றும் 150 மாத்திரைகள் கொண்ட பாட்டில்களில் தயாராகக் கிடைக்கும்.

இன்றே வாங்குங்கள், எப்பொழுதும் பிலிப்ஸ் மாத்திரைகள் கைவசம் வைத்திருங்கள். வயிற்றில் கோளாறு ஏற்படும் போது சில மாத்திரைகளை சுவைத்து "உடனடி" நிவாரணம் பெறுங்கள்.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா டாபிலெட்



மானுபாக்சரர் : ரிஜிஸ்டர்ட் யூசர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மானுபாக்சரிங்)
பிரைவேட் லிமிடெட்,
62, புண்டல் ரோட், கல்கத்தா-19

PXOW-T/TM-3/67

"கமலவாசினி சௌக்கியந்தானே?" என்று மீண்டும் கேட்டான் ரங்கமணி.

"ஆமாம்" என்று சுருக்கமாகப் பதில் சொல்லி விட்டுப் பேச்சை வேறு திசைக்கு மாற்றினார் ஜமீந்தார் முத்தையா பிள்ளை.

"என்னுடைய நண்பர் நாக்பூர் போகிறார். வழியனுப்ப வந்தேன்" என்றார்.

அதற்கு மேல் இருவரும் பேசாமல் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பேச என்ன இருக்கிறது? பேச வேண்டிய விஷயத்தைத்தான் சுருக்கமாகக் கூறி முற்றுப்புள்ளி வைத்து விட்டாரே ஜமீந்தார். அவருடைய வழக்கமான பேச்சுத் தோரணை அப்போது இல்லை. ரங்கமணியைக் கண்டு விட்டால், கமலவாசினியைப் பற்றி எவ்வளவு பெருமையுடனும் கேலியுடனும் பேசிக் கொண்டிருப்பார்! இன்று 'ஆமாம்' என்று மட்டும் கூறிவிட்டு அமைதியாகிவிட்டாரே!

ரங்கமணியும் பேச முடியாமல் தவித்தான். இருவருக்கும் ஒருவரையொருவர் சந்திப்பதில் எவ்வளவோ ஆனந்தம்தான். ஆனால் கமலவாசினியைப் பற்றிப் பேச இனி என்ன இருக்கிறது? அந்தக் கதைதான் முடிந்து பழங் கதையாகி விட்டதே!

நல்ல வேளை, வண்டி புறப்படுவதற்கான மணி அடித்தது. அவர்களுடைய இக்கட்டான நிலையை அந்த மணிச் சத்தம்தான் தவிர்த்தது.

"சரி, சௌக்கியமாகப் போய்விட்டு வா" என்று கூறிவிட்டுத் தம்முடைய நண்பரிடம் பேச விரைந்து சென்று விட்டார் முத்தையா பிள்ளை. ரங்கமணி தன்னுடைய பெட்டியில் ஏறிக் கொண்டான். வண்டி நகர்ந்த போது, முத்தையா பிள்ளை கையை அசைத்து ரங்கமணிக்கு விடைகொடுத்தார். அவருடைய முகத்தில் களை இல்லை. அவரைப் பார்த்ததிலிருந்து ரங்கமணியின் முகத்திலும் களை இல்லை. இருவருமே ஏதோ ஒரு குற்றத்தைப் புரிந்தவர்களைப் போல் ஒருவருக்கொருவர் கூச்சம் அடைந்திருந்தார்கள்.

வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு வெள்ளைக்காரர், பரபரப்புடன் பிளாட்பாரத்தில் ஓடி வந்து, ரங்கமணி இருந்த பெட்டியில் தொத்தி ஏற முயன்றார்., ஒரு கையால் ஓடும் வண்டியின் கதவைப் பிடித்துக் கொண்டு, மறு கையால், தோளில் தொங்கிய தோல் பையையும் பிடித்துக் கொண்டு வண்டியுடன் ஓடி வந்தது பரிதாபமாக இருந்தது. வெள்ளைக்காரரைக் கண்டதும் முதலில் ரங்கமணி முகத்தைச் சுளித்தான். கதவைப் பிடித்துத் தொத்த முயலும்


வெற்றிச் சிரிப்பு!

● யூதர்களின் நகைச்சுவை உலகப் பிரசித்தி பெற்றது. வாழ்விலும் தாழ்விலும் அவர்களை விட்டுப் பிரியாத குணம் அது. இன்பத்தைப் பெருக்கவும் துன்பத்தைத் தாங்கவும் நகைச்சுவை அவர்களுக்குக் காலம் காலமாக உதவி வந்திருக்கிறது. ஜூன் மாத மத்தியில் அவர்கள் மகிழ்ச்சியைப் பெருக்கிய ஏராளமான துணுக்குகள் அவர்களது நகைச்சுவைத் திறனுக்கும் சான்று கூறுகின்றன.




● யுத்தத்தின் போது ஓர் அராபிய சைன்யம் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவன் தனித்திருப்பதைக் கண்டது. உடனே எகிப்திய தளபதி மூன்று பேர்களை அனுப்பி வைத்தார் அந்த இஸ்ரேலியனைப் பிடித்து வர. மூவரும் திரும்பவேயில்லை. தளபதி ஒரு டஜன் சிப்பாய்களை அனுப்பினார். அவர்களும் திரும்பவில்லை. கடைசியில் ஒரு பட்டாளத்தையே அனுப்பினார். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அந்தப் பட்டாளத்தைச் சேர்ந்த ஒரே ஒருவன் மட்டும் பலத்த காயங்களுடன் தள்ளாடியபடி திரும்பி வந்தான். "அவர்கள் மறைந்திருந்து தாக்குகிறார்கள். ஒரே ஒரு இஸ்ரேலியன் மட்டும்தான் இருப்பதாக எண்ணி நாம் ஏமாந்து போனோம். உண்மையில் அங்கு இரண்டு இஸ்ரேலிய சிப்பாய்கள் இருக்கிறார்கள்!" என்றான்.

● நாஸர் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். அதனை இஸ்ரேலியப் பிரதமர் எஷ்கால் ஏற்க மறுத்தார்!



● போரில் இஸ்ரேலியப் பாதுகாப்பு மந்திரி தயான் அடைந்த வெற்றி கண்டு பொறாமைப்பட்ட தெற்கு வியட்நாம் பிரதமர் கை, அவரைக் கேட்டார்: "எப்படி இதைச் சாதித்தீர்கள்?" அதற்கு தயான், "வெற்றிக்கு நமக்குத் துணை புரியக்கூடிய விஷயம் ஒன்று இருக்கிறது: அது, நம் விரோதிகள் அராபியர்களாக இருக்குமாறு எப்படியாவது ஏற்பாடு செய்து கொள்வதுதான்!" என்றார்.



● சர்வதேசசுற்றுலா ஆண்டினை யொட்டி இஸ்ரேலிய விமானக் கம்பெனி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் பின் வருமாறு விளம்பரம் செய்தது: "இஸ்ரேலுக்கு விஜயம் செய்யுங்கள்-பிரமிட்டுகளைப் பாருங்கள்!" நன்றி: டைம்

அவரைப் பிடித்துத் தள்ளிவிட்டால் ஒரு வெள்ளையன் ஒழிந்தான் என்ற திருப்தி இருக்கும் என்று நினைத்தான். அப்படித் தள்ளினால் வெள்ளைக்காரர் எப்படி உருண்டு தண்டவாளத்துக்குள் சிக்குவார் என்பதைக் கற்பனை செய்து பார்த்தான். அவன் கற்பனை நீடிக்கவில்லை. அந்த வெள்ளைக்காரர் ரங்கமணியைப் பார்த்து, ''ப்ளீஸ்.... ப்ளீஸ்'' என்று அவனுடைய உதவியை நாடினார். ரங்கமணி, ஒரு கையை நீட்டி அவரை வண்டிக்குள் இழுத்தான். உள்ளே அவர் ஏறியதும், வியர்வையைத் துடைத்துக் கொண்டார். மூச்சு வாங்கியது. சிறிது நேரம் பேச முடியாமல் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

''மிக்க வந்தனம்.... நீங்கள் உதவி செய்யவில்லை என்றால், இந்த வண்டியைத் தவற விட்டிருப்பேன்....ஏன்? வண்டிக்குள் விழுந்து நசுங்கிக்கூடப் போயிருப்பேன்'' என்று ஆங்கிலத்தில் கூறிக் கொண்டே நன்றியுடன் ஒரு சிரிப்பை உதிர்த்தார் அந்த வெள்ளைக்காரர்.

''என் பெயர் மில்லர். அமெரிக்காவைச் சேர்ந்தவன். ஒரு பத்திரிகை நிருபர்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அந்த வெள்ளைக்காரர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்தவரல்லர் என்பதில் ரங்கமணிக்குப் பரம திருப்தி. தன்னை அவருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான். ரங்கமணியின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

வண்டி சென்ட்ரல் ஸ்டேஷனைக் கடந்து வேகமாக ஓடியது. ரங்கமணியின் நினைவோ பிளாட்பாரத்திலேயே நின்றது. முத்தையா பிள்ளையைச் சந்திக்க நினைவுதான் அவனைச் சுற்றிக் கொண்டிருந்தது.

'ராணி இன்னும் கோபத்தில்தான் இருக்கிறாள் போல் இருக்கிறது. அதனால்தான் முத்தையாபிள்ளை அவளைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இல்லையென்றால், இதற்குள் அவளைப் பற்றி எவ்வளவோ பேசியிருப்பாரே. இவருக்குக்கூட என் மீது கோபமிருக்கும். என்றால்தான் தம் மகள் படிப்பை விட்டு விட்டு வந்துவிட்டாள் என்று கோபம் இருக்கும். அதை வெளிக் காட்டாவிட்டாலும் உள்ளூற இருக்கும். இவ்வளவு இருந்தும் என்னைக் கண்டதும் எவ்வளவு ஆர்வத்தோடு கீழே இறங்கி வந்து ஆசையுடன் கைகளைப் பற்றிக் கொண்டார்!'

ரங்கமணியின் கண்களில் நீர் நிறைந்தது.

''என்ன மிஸ்டர் ரங்கமணி அழுகிறீர்களா?'' என்று கேட்டார் மில்லர்.

''என்ஜினிலிருந்து கரித் துண்டு பறந்து கண்களில் விழுந்து விட்டது'' என்று கூறிச் சமாளித்தான் ரங்கமணி.

''நிருபராக எத்தனை ஆண்டுகளாக வேலை பார்க்கிறீர்கள் ?'' என்று கேட்டார் மில்லர்.

'' ஆறு மாதங்கள்கூட ஆகவில்லை.''

''உங்களைப் போல் சுறுசுறுப்பான இளைஞர்களுக்கு இது நல்ல தொழில்.''

''இந்தியாவுக்கு எப்போது வந்தீர்கள் ?''

''பத்து வருஷங்களாக வந்து போய்க் கொண்டிருக்கிறேன். தமிழ் நாட்டில்தான் பெரும்பாலும் இருந்திருக்கிறேன். தமிழ் கொஞ்சம் படித்திருக்கிறேன். சம்ஸ்கிருதமும் எனக்குத் தெரியும்'' என்றார் மில்லர்.

''தமிழ் நாட்டைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?''

''தமிழ் நாடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உங்களுடைய கோயில்களும், சிற்பங்களும் மனத்துக்கு எவ்வளவோ அமைதியைக் கொடுக்கின்றன. உங்களுடைய வாழ்க்கை முறையும், அமைதியான சூழ்நிலையும் என் மனத்தைக் கவர்ந்து விட்டன. எங்கள் நாட்டுப் பரபரப்பிலிருந்தும், இரைச்சலிலிருந்தும் விடுபட வேண்டுமானால் இங்கு வந்துவிட வேண்டியதுதான். என்னுடைய கடைசிக் காலத்தில், தமிழ் நாட்டில், ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் கலை அழகு நிரம்பிய கோயில் உள்ள இடமாகப் பார்த்துத் தங்கி விடத்தான் விரும்புகிறேன். கடவுள் என்ன நினைக்கிறாரோ?'' என்றார் மில்லர்.

அவரையே வியப்புடன் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் ரங்கமணி.

''உலகத்தின் இன்றைய வெறி பிடித்த வேகமும், பரபரப்பும் மனிதனைப் பைத்தியமாக்கி விடாமல் காப்பாற்றும் ஒரு சக்தி உண்டென்றால், அது உங்களுடைய வாழ்க்கை முறையும், சமூக அமைப்பும்தான்.''

''என்னவோ நீங்கள் சொல்லுகிறீர்கள்; எனக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லை!''

'' நீங்கள் இங்கேயே இருக்கிறீர்கள் ; உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஒன்றிரண்டு ஆண்டுகள் மேற்கத்திய நாடுகளில் தங்கிவிட்டு வாருங்கள்; அப்போது புரியும் நான் சொன்னவற்றின் உண்மை. எங்களுடைய நாகரிகத்திலும், வாழ்க்கை முறையிலும் மனச்சாந்திக்கு வழியே இல்லை. எங்கு பார்த்தாலும் அவசரம், பரபரப்பு, இரைச்சல். ஆன்மீக வளர்ச்சிக்கே அங்கு வழியில்லை. மேற்கத்தியர்கள் இன்று தேடித் தவிப்பது உங்கள் நாட்டில் நிறைந்திருக்கும் இந்த அமைதியையும், சாந்தியையும்தாம். கடைசிக் காலத்தில் இங்கேயே தங்கிவிடுவது என்று முடிவு செய்து விட்டேன். உங்களுக்கு ஆட்சேபணையில்லையே?'' என்று கேட்டார்.

''ஆட்சேபணையா? எங்களை அடிமைப் படுத்தியிருக்கும் பிரிட்டிஷ்காரர்களையே வரவேற்று உபசரிக்கிறோமே, நண்பரைப் போல் உள்ள ஓர் அமெரிக்கரை வரவேற்பதில் என்ன தடை?'' என்றான் ரங்கமணி உற்சாகத்துடன்.

''நீங்கள் கூறுவது உண்மைதான். அமெரிக்கா உங்களுடைய நண்பன்தான். ஆனால் உங்களுக்கு இப்போதைக்குச் சுதந்திரம் கிடைத்து விடும் என்று எனக்கு நம்பிக்கையில்லை. ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வருகிறார். எல்லாம் ஒரே நாடகமாகக்கூட முடிந்து விடலாம்'' என்றார் மில்லர் சந்தேகத்துடன்.

''ஏன்....?''

'' பதவியில் சர்ச்சில் இருக்கும் வரை இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஒரு துரும்பைக்கூட அசைக்க மாட்டார். இரண்டு மூன்று முறை அவரைப் பேட்டி கண்டிருக்கிறேன். மனசாட்சியை இஷ்டப்படி தனியாகக் கழற்றித் தூர வைத்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர். இந்திய சுதந்திரத்தில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது. ஆனால், சர்ச்சில் ஒரு முட்டுக்கட்டைதான்'' என்றார் மில்லர்.

(தொடரும்)



போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பராமரிக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

அவள் தேர்ச்சி பெற்று வளர்ந்து வருகிறாள். பிற்கால வாழ்க்கையில் அவள் அநேக முக்கிய விஷயங்களைப் பற்றி உங்களிடமிருந்து கற்றுக்கொள்வாள். பற்களைத் தக்கபடி பராமரிக்கும் முறையை அவளுக்குக் கற்பிக்கத் தவறாதீர்கள். ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் எப்படி போர்ஹான்ஸ் தடுக்க உதவுகிறது என்று அவளுக்குக் கூறுங்கள் இப்போதே அவளுக்குக் கற்றுக் கொடுங்கள். ஏனெனில் அவள் பற்கள் ஆயுள்முழுவதும் நன்றாக இருக்க வேண்டும்.



பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் பற்பசை ஈறுகளுக்கென விசேஷ மருந்துகளைக் கொண்டது. உங்களுக்கும் சரி, அவளுக்கும் சரி நல்லதென்று நீங்கள் அறிந்த பற்பசை அது. எனவே இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் துலக்க அவளுக்குக் கற்றுக் கொடுங்கள் – ஆயுட்கால பற் பராமரிப்பு முறை அது போர்ஹான்ஸினால்

பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை"* என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்! கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

* வேண்டிய மொழியைக் கோடிட்டுக் காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.

*உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.

K 6

போர்ஹான்ஸ் பற்பசை–பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CMGM-19F & TM

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோழ

அத்தியாயம் 12

சந்திப்பு

செல்வந்தி அடிகள் தவச்சாலையின் விடுதிக் கூடத்திலே வந்து மும்முனைப் போரின் வெற்றியை அறிவித்துவிட்டு, வழிபாட்டிலே கலந்து கொள்வதற்காகத் துணை இளவரசி இளநன்னியும் கொங்குச் சேரரின் சுற்றத்தார்களும் அங்கே வரப் போகிறார்கள் என்று சொன்னதும், ஆதிரை அடிகளின் உள்ளத்திலும் பொன்மணியின் உள்ளத்திலும் ஏற்பட்ட உணர்ச்சிகளை என்னவென்று சொல்வது! வெற்றி என்ற செய்தி மட்டற்ற உவகையை உண்டாக்கிய அதே தருணத்தில், இளநன்னி வரப் போகிறாள் என்ற செய்தி திகைப்பு உணர்ச்சியை உண்டாக்கியது.

எந்த இளநன்னியைப் பற்றி இது வரை பேசிக் கொண்டிருந்தார்களோ அதே இளநன்னி இப்போது வரப் போகிறாளா? வந்து அதே தவச்சாலையின் வழிபாட்டுக் கூடத்திலே அதே பொன்மணியை அதே சூழ்நிலையில் சந்திக்கப் போகிறாளா?

பொன்மணியின் முகத்திலே மகிழ்ச்சி பொங்கிய அதே வேளையில் இன்னவென்று சொல்ல முடியாத ஏதேதோ உணர்ச்சிகள் புயல் வீசின! அழலாடியும் வரப் போகிறானா? தனது வெற்றி வாளிலே நன்னனுடைய உதிரத்தைத் தாங்கியவாறு நடுகற் காட்டுக்குச் சென்று விட்டு இப்போது பெருந்துருத்தித் தீவுக்கு வருகிறானா? அல்லது நன்னனுடைய வீழ்ச்சிக்கு, அந்தக் கொடுங்கோலனுடைய மரணத்துக்குக் காரணமாக அமைந்த வீரவாள், வேறு யாராவது வீரனுடைய வாளாக இருந்தால்? சேர வீரர்களிலே யாரோ ஓர் அரச வீரன் நன்னனுடைய தலையை வீழ்த்தியிருந்தால்? அல்லது போரிலே தோற்று நன்னன் ஓடித் தப்பியிருந்தால்? அல்லது நன்னன் அடைக்கலம் புகுந்திருந்தால்? அல்லது சிறைப் பிடிக்கப்பட்டிருந்தால்?

இப்படி யெல்லாம் குழம்பிய பொன்மணியின் உள்ளத்திலே ஆயிரம் ஆயிரம் கேள்விகள் எழுந்து குமைந்தன! அப்போது செல்வந்தி அடிகள், அந்த விந்தைச் சித்தர் சொல்லுவார் :

''மும்முனைப் போரிலே மிஞிலி மடித்தான்! அதோடு நன்னனுடைய கயமைத் தலையை வீழ்த்தியது யார் தெரியுமா? அழலாடி என்ற வீர மகன்! அவனுடைய வீர வாள் தனது மாபெரும் கடமையை வெற்றியோடு நிறைவேற்றி வாகை சூடியது!''

இவ்வாறு சொல்லிவிட்டுச் சித்தரின் போக்கிலேயே ஒரு துள்ளுத் துள்ளி அங்கிருந்து நகர்ந்தார் செல்வந்தி அடிகள்.

பொன்மணியும் ஆதிரை அடிகளும் தங்கள் உணர்ச்சிகளிலே மூழ்கி முழுகிக் குமைந்து கொண்டிருந்த அந்த




வினாடியே அடிகள் தவச்சாலையிலிருந்து வெளியே வந்தார். விரைவாக ஒரு சித்தனுக்குரிய வேகத்திலே விறு விறு என்று நடந்து பெருந்துருத்தித் தீவின் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்.

சித்தர் வந்து சேர்ந்த சற்று நேரத்துக்கெல்லாம் கரையிலே ஒரு பெரிய அரச மரக்கலம் வந்து நின்றது. அந்த அரச மரக்கலத்திலிருந்து கீழே இறங்கினார்கள் வேலவன் கோதையும் அழலாடியும். அவர்களைத் தொடர்ந்து வேறு சில அரச வீரர்களும் வந்தார்கள்.

செவ்வந்தி அடிகளுடைய முகத்தில் ஞானக் களிப்பு படர்ந்தது. வீரர்கள் அவருடைய பாதங்களில் வணங்கி எழுந்தார்கள்.

''வெற்றி வீரர்களே! உங்களுடைய வரவு நல்வரவாகுக! உங்கள் வரவினால் நம்முடைய அரச குலத்தின் முயற்சிகள் எல்லாம் மங்களம் பெறுக! பவளத் தீவிலே உள்ள சுற்றத்தார்களுடைய இதயங்கள் எல்லாம் உங்கள் வரவினால் ஆனந்தம் பெற்று, உங்கள் குலங்கள் எல்லாம் தழைத்து ஓங்குக!''

இவ்வாறு மேலும் மேலும் வாழ்த்தினார் செவ்வந்தி அடிகள்.



வாழ்த்தி விட்டு வேலவனுக்கு அருகே வந்து சொல்லுவார் :

''நீங்கள் இருவரும் முதன் முதலாகச் சந்திக்க வேண்டிய அரசச் சுற்றத்தார்கள் யார் யார் என்று உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ அது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லுவேன். வேலவன் கோதை இந்தப் பெருந்துருத்தித் தீவுக்குள் நுழைவதற்கு முன்னால் பவளத் தீவுகள் ஒன்றிலே நான் தருகிற படகிலே சென்று, சில முதன்மையான கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஆகையால் முதலில் அதை இப்போது கவனிப்போமாக!''

அடிகள் இவ்வாறு ஒரு புதிர் கலந்த அறிவிப்பை வெளியிட்டார்.

''அடிகளே! தங்களிடம் எது குறித்தும் கேள்விகள் கேட்பதில்லை என்றும், தாங்கள் கூறுகிற மொழிகளைக் கட்டளையாகக் கருதி ஏற்று நடப்பது என்றும் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்தவன் நான்! உத்தரவு இடுங்கள். அதன்படி செய்கிறேன்!''

செவ்வந்தி அடிகள் சிரித்தார்! அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து விரைவான ஏற்பாடுகள் நடந்தன. ஒரு சிறிய படகிலே வேலவன் கோதையும் இரண்டொரு காவல் வீரர்களுமாக அங்கிருந்து செவ்வந்தி அடிகள் குறிப்பிட்ட பவளத் தீவுகளிலே ஒன்றை நோக்கிப் புறப்பட்டார்கள்.

''வேலவரே! இந்த உலகம் ஒரு விந்தை நிறைந்த மாநிலம்! இந்த மனித மனம் அதைவிட விந்தை நிறைந்த மாபெரும் உலகம். எனவே, மாநில விந்தைகளைக் காண்பதற்காக நீங்கள் பவளத் தீவுக்குச் செல்ல வேண்டும். மனித மனத்தின் விந்தைகளைக் காண்பதற்காக அழலாடி இந்தப் பெருந்துருத்தித் தீவுக்குள் நுழையட்டும்!''

இவ்வாறு சொல்லி வேலவனை வழியனுப்பினார் செவ்வந்தி அடிகள்!

விந்தைகள் நிரம்பிய மாநிலம் இந்த உலகம் என்றாரல்லவா சித்தர்! ஆகா! எத்தகைய விந்தை வேலவனுக்காகக் காத்திருந்தது, பவளத் தீவிலே!

திசை அடைந்த மறு விநாடியே விந்தை தொடங்கியது வேலவனுக்கு! காரணம் பவளத் தீவிலே வேலவனை வரவேற்றது யார்?

'அடிகள் குறிப்பிட்ட விந்தை என்ற சொல்லுக்கு இத்தனை ஆழமான பொருளா?' என்று வேலவன் கண்களை மூடி மூடித் திறந்தான். இமைகளைத் துடைத்தான்!

பவளத் தீவின் கரையிலே வேலவனை வரவேற்று நின்றான் வெண்ணேந்தி தீவிலே அவனுக்கு உற்ற நண்பனாக விளங்கிய பவளப் பகடி!

அப்படியே பாய்ந்து சென்று பகடியை ஆலிங்கனம் செய்து அணைத்தான் வேலவன் கோதை.

''பவள வீரனே! நான் கனவு தான் காண்கிறேனா!'' என்றான் வேலவன் கோதை.

''சேரத்தானையின் தலைவரே! தங்களுடைய வியப்புகளையெல்லாம் இந்தக் கடற்கரையிலேயே கொட்டித் தீர்த்து விடாதீர்கள்! தீவுக்குள்ளே வேனில் மாடம் என்ற அரண்மனை இருக்கிறது. அதோ பாருங்கள், சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பிய முகப்பு தெரிகிறதல்லவா! அங்கே சென்று இதற்கு மேலும் வியப்பும் களிப்பும் அடைய வேண்டியவர் நீங்கள்! வாருங்கள்!''

வேலவனுக்குக் கால்கள் பதறின. உடம்பிலே வானத்திலிருந்து ஒரு மின்னல் இறங்கி வந்து பாய்ந்தது போல ஒரு துளக்கம்! அவனுக்கு நிலை கொள்ளவில்லை. பகடியின் பேச்சைக் கேட்டுக் கொண்டே அவனுக்கு முந்தி நடந்தான் வேலவன் கோதை!

வேனில் மாடம்! இந்தக் கடல் அலைகளுக்கு நடுவே எத்தகைய அழகான தோர் சிறிய தீவு! அந்தத் தீவிலே எத்தகைய பேரழகோடு கூடிய அரண்மனை! அந்த மாடத்தின் முகப்பிலே தான் தமிழ் நாட்டுச் சிற்பியர்கள் எத்தகைய மாபெரும் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள்! விந்தைக் கலைகளின் கனிந்தெழும் கற்பனைகளையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு மாடமாக அல்லவா நிர்மாணித்து நிறுத்தியிருக்கிறார்கள் தமிழகக் கலைஞர்கள்!

வேலவன் கோதை மாடத்துக்குள்ளே நுழைந்தான்! அரச வாயிலைத் தாண்டிக் கலையழகும் சிற்பச் சிறப்புகளும் நிரம்பி நின்ற பெருமன்றத்தைக் கடந்து உள்ளே புகுந்தான். அப்படியே சொல்லற்று உணர்ச்சிக் கடல் பொங்கி எழுந்த நிலையிலே, அந்தச் சொல் கடந்த விந்தைக் களிப்பின் ஆழம் காணாத அலைச் சுழிப்பிலே, மூழ்கி, உள்ளம் சிலிர்க்க, ஊனும் உடலும் உருக, மனம் தனது வசம் இழந்து நிற்க, அப்படியே அப்படியே —

''நீலவல்லி!'' என்றான் வேலவன்! அவ்வளவுதான். கண்களிலிருந்து மழை பெய்தது.

''வந்துவிட்டீர்களா! என் அன்பே!'' என்றாள் நீலவல்லி. வேலவனுடைய

அவரைக்காய் லேகியம்!



அவரைக்காய் நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்துகிறது என்று பெங்களூரிலுள்ள தேசிய உணவு ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்திருக்கிறது.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்குத் தினசரி 'இன்சுலின்' ஊசி போடுவது மூன்று மாதங்களுக்கு நிறுத்தப்பட்டு, பதிலாகத் தினசரி 6 அவுன்ஸ் அவரைக்காய் உணவுடன் கொடுக்கப்பட்டு வந்தது. குறிப்பிட்ட காலத்தில் 'இன்சுலின்' ஊசியில் கிடைத்த பாதுகாப்பு அவரைக்காயிலும் கிடைத்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் மேழிச்செல்வம், தகவல் : கே. பி. எஸ்.

அரசக் கரங்கள் அந்த அன்பழைப்பைத் தாங்கி உள்ளமும் உடம்பும், சொற்களையும் அவற்றின் பொருளையும் கடந்த உவகை எல்லையிலே ஒருமித்தன!

மொழிக்கு அந்த உணர்ச்சிகளைத் தாங்கிச் சுமப்பதற்கு வலிமை ஏது? சொற்களுக்கு அந்தச் சொல் கடந்த களிப்பைச் சொல்லுவதற்கு ஆற்றல் ஏது? பேச்சுக்கு அங்கே ஏது இடம்?

காலம் என்ற வட்டில் அப்படியே சுழலாமல் நின்றதோ? கடந்த காலம் நிகழ்காலம், எதிர்காலம் என்ற பாகுபாடுகள் எல்லாம் அப்படியே தம்முள் ஒன்று கலந்து ஒடுங்கி நின்றனவா? விநாடிகளும் நாழிகைகளும், கங்குலும் கதிரும் மோன அணைப்பிலே தங்களுக்குள் மயங்கி மறுகி முயங்கினவா? — அந்த வேனில் மாடம், அதன் எழில் உம்பர், அங்கேயிருந்த சிற்பங்கள், கலை விந்தைகள், அந்த விந்தைகளை அணைத்துக் கொண்டு வீசிய கடற்காற்று, அவற்றுக்கு அப்பால் உணர்ச்சி அலைகளைக் கொட்டி முழக்கித் தழுவிப் புரண்ட நீல அலைகள், அந்த அலைகடலை ஆவி சேர்த்துத் தழுவி முத்தமிட்ட நீல வானம் — எல்லாம், எல்லாம் ஒரு விநாடி ஒரு மாபெரும் மோன உவகையிலே ஒன்று கலந்து முயங்கி நின்றன!

''அன்பே! வந்து விட்டீர்களா! நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று நானே காத்திருக்கிறேன். என் அரசே, வந்து விட்டீர்களா?''

சொற்களா அவைகள்! அவற்றுக்கு ஏது பொருள்? மொழிகளா அவை? அவற்றுக்கு ஏது செயல்?

வேனில் மாடத்து அரச மன்றத்திலே சொல்லற்று, வசமற்றுச் சிந்தனையற்று, அப்படியே அந்த உறவானது காலம் என்ற விந்தைக் கனவையெல்லாம் தன்னுள் உட்கொண்டு ஒருமித்து நின்றது! ‡

ஃ ஃ ஃ



யவனப் பகடி வேனில் மாடத்து அரச மன்றத்துக்குள் மலர்களையும், மாலைகளையும், பழங்களையும், பழச் சாறுகளையும் சேடிப் பெண்களிடம் கொடுத்தனுப்பினான். வேலவன்கோதையும் நீலவல்லியும் பகடியின் அந்த அன்பையும், வெற்றிக் களிப்பையும் எண்ணி மகிழ்ந்து புன்முறுவல் செய்தார்கள்!

''வல்லி! இந்தப் பகடி இருக்கிறானே, இவனை முதன் முதல் நான் பார்த்தபோது ஒரு பொல்லாத ஒற்றன் என்று எண்ணிக் கலங்கினேன்! அப்படி அவனைச் சந்தேகப்பட்டேனே, எத்தகைய பாவம் அது!'' என்றான் வேலவன்.

''அன்பே, பகடியின் தோற்றமும், தன்னை மற்றவர்கள் கண்டு பிடித்து விடக் கூடாது என்பதற்காக அவன் செய்து கொள்கிற முன்னேற்பாடுகளும் அப்படி! உண்மையில் அவன் நமக்காகச் செய்துள்ள தியாகமும், நம்முடைய வாழ்வு மலர்வதற்காக அவன் அனுபவித்துள்ள துன்பமும் — எண்ணிப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது. கடம்ப மன்னரிடம் கசையடிகளைக்கூட நமக்காகத் தாங்கிக் கொண்டிருக்கிறான் இவன்! முடிவில் இவன் ஒருவனைத்தான் நம்பி என்னை இங்கே அனுப்பினார் வெள்ளைத் தீவு மன்னர்! அப்படியும் ஒரு காலம் வந்தது! அத்தகைய மன மாறுதலும் நேர்ந்தது!'' என்றாள் நீலவல்லி. அப்படிச் சொல்லும் போது அவளுடைய குரலிலே உணர்ச்சி இளகியது. கண்கள் கலங்கின.

''வல்லி! அத்தனை தூரம் வேதனை உண்டாகும்படியான நிகழ்ச்சிகளும் நடந்தனவோ?'' என்று கேட்டான் வேலவன்.

மன்றத்தின் அரச இருக்கையிலே நிமிர்ந்து உட்கார்ந்தாள் நீலவல்லி.

''அன்பே, அது வேதனையா அல்லது களிப்பா என்று சொல்ல முடியாதபடி அத்தனை விந்தையான அனுபவமாக

---

‡ அட்டைப் படம்: விறு



மகத்தான
தொல்பழங் காலச்
சிறப்பின் பிரதிபலிப்பு
மபத்லால் க்ரூப்
வாயில்களின்
மணியான வனப்பு
மறுமலர்ச்சி, மறைத்திட்ட
மரபின் மறுபிறப்பு.
மபத்லால் க்ரூப்
2x2 வாயில்கள் & லினேக்கள்
'டெரீன்'/காட்டன், 'டெரிலீன்ஸ்டு'
மற்றும் 'ம:.பினேஸ்டு' தரம்.

இருந்தது அது. அதை எண்ணி எண்ணி எத்தனையோ இரவுகள் நானும் மணி மாலையும் இந்த மாடத்திலிருந்து கண்ணீர் வடித்திருக்கிறோம்!'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் நீலவல்லி. பிறகு சொல்லுவாள்:

''அன்பே, வான மண்டலக் கடம்பன் கடல் நடுவே என்னை அத்தனை சிறு வயதில் மரக்கலத்திலிருந்து கைப்பற்றிக் கொண்டு வந்ததும், மணிமாலையையும் என்னையும் எவ்வளவோ அன்பு பாராட்டி நடத்தியதும் பற்றி உங்களுக்குத் தெரியும். பின்னர் நாம் தப்பி ஓட முயன்று, பிறகு அந்த முயற்சியும் நடைபெறாமல் நம்மைக் கடலின் நடுவே கடம்பன் தாக்கியது எத்தனை அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி! அதன் பிறகும்கூட மன்னன் எங்கள் இருவரையும் முன்போலவே மிகுந்த அன்போடு நடத்தி வந்தான். இது ஒரு பெரிய புதிராக இருந்தது. ஏனென்றால் வெள்ளைத் தீவு அரண்மனையில் உள்ள பணியாளர்கள் யாரும் எங்களிடம் வெறுப்போ மதிப்புக் குறைவோ காட்டக் கூடாது என்பதிலே மன்னனுக்கு அத்தனை ஆர்வம் இருந்தது!'' என்றாள் நீலவல்லி. இதைக் கேட்டபோது வேலவனுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் பின்னிப் பிரண்டன.

''வல்லி! என்ன இருந்தாலும், எத்தகைய கொடுமை நிறைந்தவனாக இருந்த போதிலும், வளர்த்த தந்தை என்ற பாசம் இருப்பது மனித இயல்பு தானே? எத்தகைய ஒரு அரக்கனுக்கும் இதயம் என்று ஒன்று இருக்கத்தானே செய்யும்!''

''இல்லை! அது மட்டுமில்லை. வான மண்டலக் கடம்பன் நாம் எல்லாம் நினைத்தது போலக் கொடுமைக்கும் பழி பாவங்களுக்குமே இடமாக இருந்த வெறும் கொள்ளைத் தலைவனில்லை! இப்போது நினைத்துப் பார்த்தால் அந்த உள்ளத்தில் எத்தகைய பாசமும் உணர்ச்சிச் சுழல்களும் நிரம்பி நின்றன என்பது —''

''வல்லி, இறைவனுடைய படைப்பிலே முழுவதும் கெட்ட மனிதன் என்றோ அல்லது முழுவதும் நல்ல மனிதன் என்றோ யாரும் இல்லை. சிந்தித்துப் பார்த்தால் நல்லது கெட்டது என்ற இரண்டும் தனித் தனியே இயங்குவதில்லை. சிலரிடம் நல்ல பண்புகள் அதிகமாக இருக்கும். அவர்களை நல்லவர்கள் என்கிறோம். சிலரிடம் தீய பண்புகள் அதிகமாக இருக்கும். அவர்களைத் தீயவர்கள் என்கிறோம். ஆழ்ந்து கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் படைப்பி

காட்டிக்கொடுத்துவிடும் கேசச் சுருள்

ஒரு சிறு தலைமயிரை மட்டும் வைத்துக்கொண்டு, அதன் சொந்தக்காரருடைய நிறம், அவருடைய வயது, அவர் ஆணா, பெண்ணா என்ற விவரங்களைப் பரிசோதனை மூலம் சொல்லி விட முடியும்! போலீஸ் மற்றும் துப்பறியும் நிபுணர்களுக்கு இந்த விஞ்ஞான சாதனை பெரிய சௌகரியம்.



'பாபு' - (காரோனெட்)

னுடைய விந்தையே இருளும் ஒளியும் விரவி நிற்பதுதான்!''

''அன்பே, நீங்கள் சொல்வது மெய்யான பேச்சு. ஆனால் இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் பிறகு, இப்போது வான மண்டலக் கடம்பன் என்ற தனி மனிதப் பிறவியை ஆராய்ந்து பார்த்தால் அந்த மன்னனை நல்லவன் என்று நீங்களும் சொல்லுவீர்கள்! அந்தகைய பாசமும் பண்பும் உள்ளத்தின் ஆழத்திலே —

''வல்லி! நீ சொல்வது எல்லையற்ற வியப்பையல்லவா தருகிறது!'' என்றான் வேலவன். நீலவல்லி சொல்லுவாள்:

''அன்பே, நீங்களே எண்ணிப் பாருங்கள். தப்பி ஓடிய பிறகும், மனப்பூர்வமாக நான் வெறுக்கிறேன் என்று தெரிந்த பிறகும், கடம்பன் என்னிடம் முன்போலவே அன்பு செலுத்தியது ஒரு விந்தையல்லவா! ஆனால் அதற்கும் ஒரு காரணம் சொல்லலாம். ஒரு நோக்கம் கற்பிக்கலாம். என்னிடம் ஏன் கடம்பன் அன்பு செலுத்த வேண்டும் என்பதற்கு ஒரு அரசியல் நோக்கம் இருந்தது என்று இப்போது யாரும் காரணம் சொல்லி விளக்கலாம். ஆனால் அந்த ஒரு அரசியல் நோக்கமும்கூட நிறைவேறுதபடி கடைசி வினாடியில் நான் மறுப்புத் தெரிவித்தேன். அதன்பிறகும் கூடக் கடம்பன் என்னிடம் கோபமோ வெறுப்போ கொள்ள வில்லை. அதை நினைத்துப் பார்க்கும் போதுதான் —''

நீலவல்லியின் கண்களிலிருந்து 'பொல பொல' வென்று கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. வேலவன் எழுந்து நின்று அந்தத் துயரத் துளிகளைத் துடைத்தான். வல்லி சொல்லுவாள்:

''அன்பே, வெள்ளைத் தீவின் மீது படையெடுத்து வந்தீர்களே நீங்களும்

செங்குட்டுவரும். அந்தத் தருணத்திலேதான் வானமண்டலக் கடம்பருடைய உள்ளத்தின் வடிவம் என்ன என்பதை நானும் மணிமாலையும் புரிந்து கொண்டோம். உண்மையில் அப்படி ஒரு வாய்ப்பு எங்களுக்கு ஏற்படாதவாறு, கடல் மீதுவேறிய வான மண்டலக் கடம்பர் உங்களைச் சந்திக்காமல் நீங்களே கோட்டைக்குள் புகுந்து மன்னனைத் தாக்கியிருந்தால், ஒரு நல்ல உள்ளத்தைப் புரிந்துகொண்டிருக்க மாட்டோம் நாம். வெள்ளைத் தீவின் வேந்தனுடைய உள்ளத்திலே எத்தகைய பாசமும் பிடிப்பும் உயிர் வாழ்ந்தன என்பது நமக்குத் தெரியாமலேயே போயிருக்கும். அப்படி நேராதவாறு விதி காப்பாற்றியது. நீங்களும் சேர இளவரசரும் வெள்ளைத் தீவின் மீது படையெடுத்து வருகிறீர்கள் என்ற செய்தி கடம்பருக்கு முன்னதாகவே தெரிந்து விட்டது! நீங்கள் தீவை அணுகப் போகிறீர்கள் என்று ஒரு வாரத்துக்கு முன்பாகவே கடம்பருக்குச் செய்தி வந்து விட்டது. அது மட்டுமில்லை. இந்தக் கடுமையான தாக்குதலில் இருந்து தானும் தன்னுடைய படையும் தப்ப முடியாது என்பதும் கடம்பருக்குத் தெரிந்து விட்டது!'' என்றாள் நீலவல்லி.

''அப்படியா! எத்தனையோ வீரர்களும் இயந்திரப் பொறிகளோடு கூடிய திண்ணிய மதிலும் விந்தைப் பொறிகள் தாங்கிய பெரிய படைகளும் இருந்தும்கூடத் தனக்குத் தோல்வி உறுதி என்பதைக் கடம்பரால் தீர்மானிக்க முடிந்ததா?'' என்று கேட்டான் வேலவன்.

''அன்பே, உண்மையில் நீங்களும் உங்களுடைய படையும் வெள்ளைத் தீவின் மீது படையெடுத்து வந்து அந்தக் கோட்டையைத் தாக்கி யிருப்பீர்களானால், அந்தப் போரானது மிகச் செருவாகப் பல நாட்களுக்கு நீடித்திருக்கும். வெள்ளைத் தீவுக் கோட்டையின் மதில்களிலே உள்ள வகை வகையான இயந்திரப் பொறிகள் உங்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்திருக்கும். உண்மையில் அத்தனை இயந்திரச் சூழ்ச்சிகளையும், வேகங்களையும் கடந்து நீங்களும் உங்களுடைய படையும் கோட்டைக்குள் புகுந்து வருவது கடினமாகவே இருந்திருக்கும். ஆனால் கடம்பர் அதற்கெல்லாம் இடம் வைக்கவில்லை. எத்தனை வன்மையாக எதிர்த்துப் போரிட்டாலும், நீங்களும் சேரர்களும் மேலும் மேலும் புதிய புதிய அணிகளைக் கொண்டு வந்து மேலும் மேலும் தொடர்ந்து போரிடப் போகிறீர்கள் என்பது கடம்பருக்குத் தெரியும். கோட்டைக்குள்ளிருந்து வெள்ளைத் தீவைப் பாதுகாக்கிற முயற்சியில் ஈடுபட்டால், எப்படியும் படிப்படியாக அந்தக் கோட்டையை அழிப்பதற்கு முனைவதோடு அந்தத் தீவின் அரிய பெரிய கலைச் செல்வங்களையும், சுவடிகளையும், விலை மதிப்பற்ற உயர்ந்த ஏடுகளையும், பள்ளிகளையும் எல்லாவற்றையுமே வெருண்டு அழித்து ஒழித்து விடுவதற்குச் சேரர் படை முனையும் என்று எதிர்பார்த்தார் கடம்ப மன்னர்! தாம் அழிந்தாலும் தமக்குப் பின் அந்தத் தீவு அழிவதை அவர் விரும்பவில்லை. காரணம், அந்தப் பௌத்த ஏடுகளிலே சொல்லியிருந்த சில நிகழ்ச்சிகள் அப்படி அப்படியே நடக்கத் தொடங்கி விட்டன என்பதைக் கண்கூடாகக் கண்டார் மன்னர்! இது ஒரு மன மாற்றத்தைத் தரத் தொடங்கியது. அத்தகைய அறிவுப் புதையல்களை அழியவிட அவருடைய மனம் ஒப்பவில்லை. அதோடு, அதோடு, அதோடு — ''

நீலவல்லிக்குக் குரல் அடைத்தது. பேசுவதற்கு வேண்டிய மனத் திடத்தை வரவழைத்துக் கொண்டு தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள்:

''அன்பே, தீவு அழிவதும், அறிவுச் செல்வங்கள் மறைவதும் ஒரு புறம் இருக்க, சேரப் படை வெள்ளைத் தீவுக்குள்ளே புகுந்து அழிவு வேலைகளைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பே நானும் மணிமாலையும் வெள்ளைத் தீவு அரண்மனையிலிருந்து தப்பிச் சென்று விட வேண்டும் என்பதிலே கடம்ப மன்னருக்கு மட்டில்லாத ஆர்வமும் கவலையும் இருந்தன. எனக்கு எந்தத் தீங்கும் நேர்ந்து விடக் கூடாது என்பதில் அவருக்கு எத்தகைய கவலை இருந்தது என்பதை அப்போதுதான் கண்டேன். நீங்கள் படையெடுத்து வருகிறீர்கள் என்ற முன்னறிவிப்பு ஒற்றர்கள் மூலம் கிடைத்த மறு விநாடியே, எங்களுடைய கன்னிமாடத்துக்குத்தான் ஓடோடியும் வந்தார். நாங்கள் உடனே அப்போதே தப்பித்து விட வேண்டும் என்று எங்களிடம் சொல்லி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதிலே முனைந்தார் — ''

''வல்லி! இப்படியும் ஓர் அன்பா! வானமண்டலக் கடம்பனுடைய உள்ளத்தில் இப்படி ஒரு பாசமும் இருந்ததா? இதற்கு என்ன காரணம்?'' என்று வியப்போடு கேட்டான் வேலவன் கோதை.

(தொடரும்)




திருமணம்

ஸ்ரீ என். வைத்தியநாதன் (டெல்லி கிளாத் மில்ஸ், டெல்லி) அவர்களுக்கும் சௌ. சாந்தாவுக்கும் (குஜராத் ஸ்டேட் ஸ்ரீ கே. சிவராஜ் I.A.S. அவர்கள் சகோதரி) சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



பலூனுக்குள் ஆப்பரேஷன்!



நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது, காற்றில் கலந்துள்ள கிருமிகள் நோயாளியின் உடலில் நுழையாமலிருக்க அமெரிக்க டாக்டர்கள் ஒரு புது முறையைக் கண்டுபிடித்துள்ளனர். அதாவது 9 அடி நீளம், 6 அடி அகலமுள்ள ஒரு பலூன் போன்ற பொருளை, விரைவில் உலரக்கூடிய பசையைக் கொண்டு, நோயாளியின் உடலைச் சுற்றி ஒட்டி விடுகின்றனர். பிறகு இந்தப் பலூனுக்குள் கிருமிகளின்றிச் சுத்தம் செய்யப்பட்ட காற்றைச் செலுத்தி, பலூனை 'விரிய' வைக்கிறார்கள். அந்தப் பலூனில் நான்கு 'ஜோடி' கைகள் நுழைவதற்காகவும், ஆப்பரேஷன் கருவிகள் நுழையவும் சிறிய வாயில்கள் உள்ளன. இதன் வழியாகத்தான் டாக்டர்கள் வெளியிலிருந்தபடியே ஆப்பரேஷன் செய்வார்கள். இவ்வாயில்களின் வழியாகக் காற்றோட்டம் ஏற்படாதவாறு அடைப்பான் அமைப்புகள் உள்ளன. டாக்டர்கள் ஆப்பரேஷன் செய்வதை மருத்துவ மாணவர்கள் இந்தப் பலூனுக்கு அருகிலிருந்தபடி கவனிக்கலாம். எதேச்சையான ஒரு தும்மலோ இருமலோ அறுவை சிகிச்சைக்கு உட்பட்டுக் கிடக்கும் நோயாளியைப் பாதித்துவிடும் என்ற பயம் இனி இல்லை!

தகவல்: கி. சம்பத்குமார்
ஆதாரம்: 'டிட்பிட்ஸ்'

அம்பாலா ஜில்லாவில் உள்ள கிராமம் ஒன்றில் ஒரு விநோதமான லைப்ரரி இருக்கிறது. 1963ம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது. முதல் ஆண்டு ஜில்லாபோர்டும், அடுத்த ஆண்டுகள் பஞ்சாயத்து சமிதியும் இதை நடத்துவதற்காக பணம் கொடுத்து உதவின. ஒவ்வொரு மாதமும் செலவுகளுக்காக 150 ரூபாயும் ஊழியருக்காக 100 ரூபாயும் கொடுத்து வருகின்றனர்.
ஆனால்..................



பல்சுவைப் பக்கம்

மேதையும் பேதையும்!

புகழ்பெற்ற தத்துவ மேதையான ரால்ப் வால்டோ எமர்சன் அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்க, ஒவ்வொரு முறையும் வீட்டு வேலைகளைச் செய்கின்ற வேலைக்காரி ஒருத்தி தவறாமல் வந்திருந்தாள்.

''எமர்சனின் சொற்பொழிவை உன்னால் புரிந்துகொள்ள முடியுமா?'' என்று வியப்போடு ஒருவர் கேட்டார்.

''நிச்சயமாக என்னால் ஒரு வார்த்தையைக் கூடப் புரிந்துகொள்ள முடியாது என்பது உண்மையே! ஆனால் கீழே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிற எல்லோருமே தன்னைப் போலவே மேதைகள் என்ற நினைப்பில் பேசிக்கொண்டே செல்லும் எமர்சனின் தோரணையைப் பார்க்கவே தினமும் வருகிறேன்'' என்று அவள் கூறியதும், கேட்டவர் வாய் மூடி மௌனமாகச் சென்றார்.

தகவல்: ''[illegible]''

ஓவியரின் காவியம்!


வெண்மையான சுவரில் கரிக்குச்சியால் குழந்தைகள் கிறுக்கினால் தாய் தந்தையர் என்ன பாடு படுகிறார்கள்! ஆனால் ஸர் ஜோஷுவா ரெனல்ட்ஸ் என்ற ஓவியப் புலவரின் தந்தை, தம் முடைய குழந்தைகள் கரிக் கோலங்கள் தீட்டிப் பார்க்கட் டும் என்பதற்காகவே அடிக் கடி தம் வீட்டுச் சுவர்களை வெள்ளையடித்து வைத்தார். காகிதம் பென்சில் வாங்கித் தர வசதியற்ற ஏழை அவர்.

சிறுவனான ஜோஷுவா சுவரில் வரைந்தவைகளை மக்கள் வந்து பார்த்து வியந்து சென்றார்களாம்.

பதினெட்டாம் நூற்றாண் டில் இங்கிலாந்தில் மிகச் சிறந்த ஓவிய மணியாகத் திகழ்ந்தவர் ஸர் ஜோஷுவா ரெனல்ட்ஸ். தங்கள் சித் திரங்களை இவர் எழுதிக் கொடுக்க வேண்டு மென்று பணத்தைக் கொட்டிக் கொடுத்தார்கள்.

சாதாரணப் பள்ளியில் கற்ற கல்விதான்; ஓவி யக் கல்வியும் சாதாரண ஓவியன் ஒருவனிடம் கற்றுக் கொண்டதுதான். சுய முயற்சியால் முன்னுக்கு வந்த இவர், பல்வேறு ஓவி யங்களிலும் உள்ள சிறந்த அம்சங்களை யெல்லாம் தைரியமாகக் கடன் வாங்கி அவற்றி லிருந்து தமக்கென ஒரு சிறப்பியல்பை அமைத் துக் கொண்டார்.

ஆதாரம்: 'சிரிப்பே பரிசு'
தகவல்: 'மதுரை மணியன்'



ஜில்லென்று ஒரு பானம்!



மருந்து வியாபாரி ஜான் எஸ். பெம்பர்டன் ஒரு பானம் தயாரித் தார். அவரது கணக்குப்பிள்ளை எப். எம். ராபின்சன் அதற்கு 'கோகா கோலா' எனப் பெயரிட்டார்.


தென் அமெரிக்காவின் புதர்ச் செடியான 'கோகா'வின் சாறுகளும் இலந்தைக் கொட்டையின் சாறும் சேர்ந்த கலவையே 'கோகா கோலா' உலகப் பிரசித்தி பெற்ற இந்தப் பானத்தைக் கண்டுபிடித்து எண்பது வருஷங்கள் ஆகிவிட்டன.

தகவல்: "பாலன்"

நிபுணர்கள் வேண்டாம்!

"உங்கள் தொழில் வெற்றிக்குக் காரணம் என்ன? நிபுணர் களையே நீங்கள் வேலைக்கு வைத் துக் கொண்டிருப்பீர்களா?" என்று ஹென்றி ஃபோர்டை ஒருவர் கேட்டார்.

"அதுதான் இல்லை. தொழில் நிபுணர் [illegible]



கையிலே கடிதத்துடனும், முகத்திலே கவலையுடனும் கூடத்திலே நடை பயின்று கொண்டிருந்த கோபாலனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. கவலைக்குக் காரணம் கையிலிருந்த கடிதம்தான். அதுவும் சற்று முன்புதான் வந்த கடிதம்.

சமையலறையிலிருந்து வெளியே வந்த மாலதி கணவன் கூடத்தின் நீள அகலத்தை அளந்து கொண்டிருப்பதைக் கண்டதுமே புரிந்து கொண்டு விட்டாள், ஏதோ இக்கட்டு வந்து விட்டது என்று.

மௌனமாக ஏறிட்டுப் பார்த்த மனைவியிடம் கடிதத்தை நீட்டினான் கோபாலன்.

கடிதத்தைப் பிரித்த மாலதிக்குக் கண்களில், முதல் வரியில் தென்பட்ட 'மாமா' என்ற வார்த்தையைக் கண்டதுமே 'திக்' கென்றது. மடமட வென்று கண்களைக் கடிதத்தின்மேல் மேய விட்டாள்.

''அன்புள்ள கோபாலனுக்கு, மாமா அநேக ஆசிர்வாதம். இங்கு எல்லோரும் சௌக்கியம். அங்கு நீயும் சௌ. மாலதியும் நலம் என நினைக்கிறேன்.

நிற்க, அடுத்த வாரம் பசங்களுக்கெல்லாம் கோடை விடுமுறை விடுகிறார்கள். பசங்கள் 'உன்னையும் மாலதியையும் பார்க்க வேண்டும்' என்று ரொம்பவும் ஆசைப்படுகிறார்கள். போன வருடம் அவர்கள் அங்கு வந்திருந்த போது பத்தே நாட்கள்தான் தங்கினார்கள் என்று நீயும் குறைப்பட்டுக் கொண்டாயாம். ஆகவே, இந்த வருஷம் விடுமுறை ஆரம்பத்திலேயே அவர்களை அங்கு அனுப்பிவிடுகிறேன். இரண்டு மாதங்கள் அங்கேயே இருந்து உங்கள் ஆசையையும் பூர்த்தி செய்வார்கள். அவர்கள் அடுத்த வாரம் எந்த ரயிலில் வருகிறார்கள் என்பதைப் பற்றி இன்னும் இரண்டு தினங்களில் எழுதுகிறேன்.

இப்படிக்கு,

உன் மாமா மாதவன்''

''அட கடவுளே! இந்த வருடமும் அந்த வால்கள் இங்கே டேரா போடப் போகிறார்களா? இந்த வீடு உருப்பட்டாற்போலத்தான்.....!'' என்று தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் மாலதி.

''அதுவும் ஒரு நாளா, இரண்டு நாளா? இரண்டு மாதங்கள்!'' என்று கன்னத்தில் கை வைத்தவாறு, அவள் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான் அவனும்.

அவர்கள் கவலைக்குக் காரணம் என்ன தெரியுமா?

மாமா பெற்றெடுத்த — அந்த மாமாகூட சொந்த மாமாவல்ல; ஏதோ ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட மாமா — அந்த நான்கு புத்திர சிகாமணிகளின் குண விசேஷம்தான்.

சென்ற வருடம் அவர்கள் வந்து விட்டு, இருந்த பத்து நாட்களும் அடித்த கூத்து இருக்கிறதே, அதை அவர்கள் ஆயுளுக்கும் மறக்க முடியாது.

சுபாவத்திலேயே, கணவன், மனைவி இருவருமே சிக்கனத்துக்குப் பெயர் போனவர்கள். சாம்பார் செய்தால் ரசம் செய்ய வேண்டாம், கூட்டு செய்தால் சாம்பார்

மாமா விஜயம்



செய்ய வேண்டாம் என்று. சமையலிலிருந்து எல்லாவற்றிலும் சிக்கனமாக இருப்பவர்கள். ஆனால் மாமாவின் புத்திர செல்வங்களோ—

ஒரு கூட்டு, சாம்பார், அப்பளம், ரசம், தயிர் என்று எல்லா அயிட்டங்களையும் ஒவ்வொரு வேளைக்கும் எதிர்பார்க்கும் ரகம். அதுவும் கொஞ்சம் என்ற வார்த்தையே அவைகளுக்குத் தெரியவே தெரியாது. ஒரு தட்டு சாம்பார் சாதம், ஒரு தட்டு ரசம் சாதம், ஒரு தட்டு தயிர் சாதம் என்று எதையுமே தட்டு தட்டாகத்தான் உள்ளே தள்ளும்; வஞ்சனையில்லாத பிறவிகள்.

சிக்கனத்துக்கும் தாராளத்துக்கும் எங்கேயாவது ஒத்து வருமா? அது மட்டுமா?

கோபாலனாகட்டும், மாலதியாகட்டும், 'ஜாக்கிரதை' என்ற வார்த்தைக்கே முழு அர்த்தமாக இருப்பவர்கள். எந்தச் சாமானையும் மிக மிக ஜாக்கிரதையாகக் கையாள்வார்கள். மேசை நாற்காலி, சுவர், தரை எல்லாவற்றையும் தினமும் பத்து தரமாவது துடைத்துச் சுத்தமாக, கண்ணாடி போல் பளபளவென்று வைத்திருப்பவர்கள். ஆனால் மாமாவின் செல்வங்களோ, வீட்டுக்குள்ளேயே கிரிக்கெட் ஆடும் அவர்கள், பீரோ கண்ணாடியைப் பற்றிக் கவலையே படவில்லை. வீட்டிலே சுவர், தரை, மேசை என்று கண்ட இடங்களில் கரிக் கட்டியினால் தங்கள் சித்திரத் திறமையை வெளிப்படுத்தினார்கள்.

இவை மட்டுமின்றி, இரண்டு நாட்களுக்கொரு தரம் சினிமாவுக்குப் போக வேண்டும் என்று அடம் பிடித்து அவர்களிடம் காசு பறித்துச் சென்றது: தினமும், இரண்டு வேளை காலையும் மாலையும் டிபன் பண்ணிக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று ரகளை செய்தது! ஓட்டப் பந்தயம் நடத்துகிறோம் என்று தோட்டத்திலிருந்த செடிகளையும் கொடிகளையும் துவம்சம் செய்தது. இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ...!

அவர்கள் அடித்த கொட்டத்தைப் பார்த்த பிறகு மாலதிக்கும் கோபாலனுக்கும் ஏற்பட்ட சந்தேகம்: ''இவைகள் பிள்ளைகள் தானா? மாமாவும் மாமியும் எப்படித்தான் இவர்களைக் கட்டி மேய்க்கிறார்களோ?''


அந்தச் சந்தேகத்துக்குப் பிறகு அவர்கள் ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டது :— ''ஆண்டவனே! எங்களுக்கு இந்த ஜென்மத்தில் பிள்ளைகுட்டியே வேண்டாம். அப்படிக் கொடுத்துத்தான் தீர்ப்பதென்றால், இந்த வானரங்களைப் போன்ற பிள்ளைகள் மட்டும் வேண்டவே வேண்டாம்.....''

ஒரு வழியாக, பத்து நாட்கள் கழித்து அவர்களை அனுப்பி வைக்கப் பட்டபாடு இருக்கிறதே.... அப்பப்பா... முதன் முறையாக அவர்கள் நரகத்தைப் பார்த்து விட்டார்கள்.

''மாலு, எப்படி நிறுத்துவது இந்த வானர விஜயத்தை....?'' என்றான் மாதவன்.

''அதுதானே எனக்கும் தெரியவில்லை. அந்தக் காலத்திலே நம் மாமாவின் பிள்ளைகள் கிஷ்கிந்தையில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். அடேயப்பா! ஒவ்வொன்றும் எப்படி எப்படியெல்லாம் ஆட்டம் காட்டியது!'' என்றாள் மாலதி.





ரசிகர்களும் பங்கு பற்றும் சினிமா!

கனடாவில் நடக்கும் மாண்ட்ரியல் அகில உலகக் கண்காட்சியில், செக்கோஸ்லாவாகியா நாடு ஒரு விநோதமான திரைப் படத்தைக் காட்டுகிறது. இந்தச் சினிமாவில் பார்வையாளரும் பங்கு பற்றலாம்.

திரைப்படத்தில் ஒருவன் மற்றொரு வனை அடிக்க முற்படுவது போல் ஒரு கட்டம் தோன்றும். அப்போது படம் நின்று விடும். இவன் அடிபட வேண்டுமா, தப்பிவிட வேண்டுமா என்று பார்வையாளர்கள் தீர்மானிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் முடிவை நாற்காலியில் உள்ள இரு பொத்தான் களுள் ஒன்றினை அழுத்துவதன் மூலம் தெரிவிக்கிறார்கள். அதிகபட்ச வோட்டுக்கள் எந்தக் காட்சிக்குக் கிடைக் கிறதோ அப்படி நடந்து படமும் அதற்குப் பொருத்தமான முறையில் மேலே தொடரும். இதே போல் ஒரு திரைப்படத்தில் பத்துப் பன்னிரண்டு கதைத் திருப்பங்களில் பார்வை யாளர்கள் பங்கு பற்றுவார்கள். இந்தப் பெண் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமா வேண்டாமா? இந்த இடத்தில் கதாநாயகி சாக வேண்டுமா அல்லது தப்பித்துக் கொண்டு கதாநாயகனுடன் இணைசேர வேண்டுமா? என்பன போன்ற திருப்புமுனை களில் பெரும்பான்மை வோட்டுகளே கதையின் போக்கைத் தீர்மானிக் கின்றன. நன்றி: 'டைம்'

"மாலு.... இப்படிச் செய்தால் என்ன?" அவன் கண்களைக் கொட்டினான்.

"நீ போய் ஒரு பேனாவும் பேப்பரும் கொண்டு வா....!" என்றான் அவன்.

சொன்னபடியே பேனாவும் பேப்பரும் கொண்டு வந்தாள் அவள். ஸ்டேஷனுக்கு 'டிக்கெட்' செய்யும் அதிகாரி போல் தொண்டையைக் கனைத்துக் கொண்ட அவன், 'டேக் இட்' என்றான் கம்பீரமாக.

அவள் தயாரானாள்.

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

அநேக நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. குழந்தைகளை இரண்டு மாத லீவுக்கு இங்கே அனுப்புவது குறித்து எழுதி யிருந்ததைக் கண்டு எனக்கும் மாலதிக்கும் ரொம்பவும் மகிழ்ச்சி. போன தடவைபோல் இல்லாமல் இந்த முறை விடுமுறை ஆரம்பத்தி லேயே அனுப்புவதாக வேறு நீங்கள் எழுதி யிருந்ததைக் கண்டு எங்களுக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது.

ஆனால்? இந்தச் சந்தோஷத்தை முழுமை யாகக் குழந்தைகளுடன் இரண்டு மாதங்கள் கூட இருந்து அனுபவிக்க முடியவில்லையே என் பதை நினைக்கும் போதுதான் வருத்தமாக இருக்கிறது. காரணம், அடுத்த வாரம் நானும் மாலதியும் ஊட்டிக்குப் போகி றோம். மாலதியின் அக்கா பெண்ணுக்கு வளை காப்பு அங்கே. போன வாரமே நேரில் வந்து கூப்பிட்டு விட்டுப் போய்விட்டார்கள். வளைகாப்புக்கு வருவதோடு, இரண்டு மாதங்கள் அங்கேயே தங்கி, சீஸனையும் அநு பவிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டார்கள். ஆகவே, நான் இரண்டு மாதங்கள் லீவு போட்டு விட்டு, மாலதியுடன் அடுத்த வாரம் ஊட்டிக்குப் போகிறேன். பசங்களுடன் உற்சாகமாக இரண்டு மாதங் களை அநுபவிக்கத்தான் கொடுத்து வைக்க வில்லை. அடுத்த வருடமாவது, அவர்களோடு இருக்க ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

கோபாலன்."

கடிதத்தைக் கூறி முடித்துவிட்டு ஒரு வீரனைப் போல், முகத்திலே வெற்றிக் களை நடனமிட, நாற்காலியில் அமர்ந்தான் அவன்.

நான்காம் நாள்!

ஊட்டிக்குப் போகாமலேயே மாமாவை ஏமாற்றி விட்டோம் என்ற ஆனந்தத்தில் ஊட்டி சுகத்தைச் சென்னையிலேயே அநுப வித்துக் கொண்டிருந்த மாலதியும் கோபால னும், வாசலில் 'போஸ்ட்' என்ற குரலைக் கேட்டதும் விரைந்து வந்தனர் வெளியே.

விலாசத்தைப் பார்த்ததுமே 'திக்'கென் றிருந்தது கோபாலனுக்கு. மாமாவின் கையெழுத்து! கடிதத்தைப் பிரித்தவன் மடமடவென்று படிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள கோபாலனுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. பசங்களிடமும் எங்களிடமும் நீ கொண்டுள்ள அன்பைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. பாவம், நீ என்ன செய்வாய்? வளைகாப்புக்கு நீயும் மாலதியும் போய்த்தான் ஆக வேண்டும். போகாவிட் டால் நன்றாக இருக்காது.

நீயும் மாலதியும் அங்கே இருந்தால், பசங் களை மட்டும் அங்கே அனுப்பலாம் என்று நினைத்திருந்தேன். இப்போது நீங்கள் ஊட் டிக்குப் போகிறீர்கள். பசங்களை அனுப்பினும் சாப்பாட்டுக்கு அவர்கள் என்ன செய் வார்கள்? அதுவும் தவிர, உன் மாமியும், என் மைத்துனியும் அவள் கணவனும் வேறு சென்னையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீயோ ஊட்டிக் குப் போகிறாய். வீடு காலிதானே! ஆகவே, நான் மாமியையும், என் மைத்துனி, அவள் கணவர், பசங்கள் எல்லோரையும் அழைத் துக் கொண்டு சனிக்கிழமை அங்கு வந்து சேருகிறேன். நான் வந்த பிறகு, நீயும் மாலதியும் ஊட்டிக்குக் கிளம்பலாம்.

மாமா மாதவன்."


இதுதான் ஈ
FLIT
இதுதான் கொல்லிமருந்து: சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட்
ஃப்ளிட் தெளித்து உங்கள்வீட்டைப் பாதுகாப்பீர்
—அதுவே உலகில் முதன்மை வகிக்கும் பூச்சிக்கொல்லி!

கணவன் மனைவி இருவருமே திகைத்து விட்டனர். வெறும் வெட்டப் பூதமல்லவா கிளம்புகிறது !

"மாலதி..... போச்சு.... போச்சு.... நம் திட்டம் தவிடுபொடியாகப் போய்விட்டது" என்று ஓலமிட்டான் கோபாலன்.

"பசங்களோடு மட்டுமல்லாமல், மாமா, மாமி, மைத்துனி, அவள் கணவர்...நம்ம வீடு தாங்குமா அத்தனை பெரிய கூட்டத்தை?" என்று அவன் முகவாய்க்கட்டையில் கை வைத்து விட்டான்.

"அவர்கள் வந்து தங்குவதோடா? மாமி பெரிய 'தூபர்தண்டி'யாயிற்றே.... வீட்டிலே உள்ள அத்தனை சாமான்களையும் நான்கே நாட்களில் காலி செய்து விடுவாள்."

"காலி செய்வதோடு மட்டுமா? எதிரே உள்ள மளிகைக் கடையில் நம் பெயரில் சாமானை யெல்லாம் கடன் வாங்கி விடுவாளே! அடுத்த மாதம் உங்கள் சம்பளப் பணம் அதற்கே சரியாகப் போய்விடும்."

கணவன் மனைவி இருவருமே கதிகலங்கிப் போய் விட்டனர் மாமா விஜயத்தால்.

"மாலு! மாமா விஜயம் நிச்சயம் நமக்கு ஒரு சோதனைதான். இப்போது எப்படி இதை நிறுத்துவது...?"

"ஏன், அப்படிச் செய்தால் என்ன? மாமா சனிக்கிழமைதானே வருவதாக எழுதியிருக்கிறார். நாம் வெள்ளிக்கிழமையே கிளம்பி நிஜமாகவே ஊட்டிக்குப் போய் விட்டால் என்ன......?" — மாலதியின் யோசனை.

"அருமையான யோசனைதான். ஆனால் ஊட்டிக்குப் போய் வர ரயில் சார்ஜ் அது இது என்று ஒரு நூறு ரூபாயாவது ஆகிவிடும். சாப்பாடு வேண்டுமானால் உன் அக்காள் போட்டு விடுவாள்....."

"செலவைப் பார்த்தால் மாமா தன் பரிவாரத்தோடு இங்கே வந்து தங்கினால் அதைப் போல் நான்கு பங்காகி விடுமே. நமக்கும் இந்த இக்கட்டிலிருந்து விடுபட்டது போலவும் இருக்கும். ஊட்டியையும் அநுபவித்ததாக இருக்கும்......"

"உம்.... ஊட்டிக்கு அப்படிப் போனால் தான் உண்டு. நமக்காக, பணம் வந்து, ரயில் சார்ஜ் கொடுத்துக் கொண்டு எங்கே போகப் போகிறோம்? நாம் வெள்ளிக்கிழமை கிளம்பி விடுவோம். சனிக்கிழமை வரும் மாமாவை வாசலில் தொங்கும் பெரிய திண்டுக்கல் பூட்டுத்தான் வரவேற்கும். பாவம், மாமா... தம் பரிவாரங்களுடன் ஏமாற்றத்துடன் திரும்பப் போகிறார்......!"

வெள்ளிக்கிழமையும் வந்தது!

மாலதியும் கோபாலனும் கிளம்பத் தயாராகி விட்டனர். பெட்டி படுக்கையுடன் வெளியே வந்த கோபாலன், வாசற் கதவைச் சாத்தினான். தயாராக வைத்திருந்த திண்டுக்கல் பூட்டை எடுத்துப் பூட்டினான்.

பெட்டி படுக்கைகள் ஆட்டோ ரிக்ஷாவில் ஏற, இருவரும் ஏறி அமர்ந்தனர்.

ஆட்டோ கிளம்பிச் சென்று ஐந்து நிமிடங்கள்கூட ஆகியிருக்காது. "சார், போஸ்ட் !" என்றவாறு, வீட்டுப் படி ஏறினார் தபால்காரர். வீடு பூட்டி இருக்கவே, கதவு இடுக்கு வழியாகக் கடிதத்தைப் போட்டுவிட்டு அவர் போய்ச் சேர்ந்தார். உள்ளே விழுந்த அந்தக் கடிதத்தில் —

"அன்புள்ள கோபாலனுக்கு,

இடைரென்று நேற்று, உன் மாமி பின்பக்கத்தில் வழுக்கி விழுந்து விட்டாள். காலில் பலமான அடி. கட்டோடு கட்டிலில் படுத்திருக்கிறாள். இன்னும் கொஞ்ச காலத்துக்கு இப்படி அப்படி அசையக்கூடாது என்று டாக்டர் சொல்லி விட்டார். ஆகவே, சொன்னபடி சனிக்கிழமை அங்கு வர முடியாததற்கு வருந்துகிறேன். பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருட லீவுக்கு எல்லோரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்.

இப்படிக்கு,

உன் மாமா மாதவன்"

ஒரு விடுமுறை நாளின் மாலை நேரம் !

ஜனசந்தடி நிறைந்த வீதியின் ஓரத்திலே தம் பெட்டியுடன் நின்று வானத்தில் எதையோ ஒருவர் தேடத் தொடங்கினார்.

"வானத்தில் என்ன?" என்று சிலர் கேட்டவாறே அவர்களும் தேடலானார்கள்.

"ரஷியா புதிதாக ஒரு கோளைப் பறக்க விட்டிருக்கிறதாம். அது பகல் வெளிச்சத்தில் கூடப் பிரகாசமாகத் தெரியுமாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த நகரத்தின் மீது அது பறந்து செல்லுமாம்" என்று கூறி விட்டுத் தேடத் தொடங்கினார் வானத்தில்.

செய்கைக் கோளைக் காண்பது எப்படி?

அடுத்த சில நிமிடங்களில் அங்கு பெரிய தொரு கூட்டமே கூடி வானில் அந்தக் கோள் வருமா எனப் பார்க்கத் தொடங்கியது.

தம்முடைய பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு முதன் முதலாக வதந்தியைக் கிளப்பியவர் தம்முடைய 'பைனாகுலர்களை'க் குறைந்த விலைக்குத் தருவதாகக் கூறி விற்கத் தொடங்கினார்.

வியாபாரம் மும்முரமாக நடந்தது. பெட்டி நிறைய இருந்த தம் 'பைனாகுலர்கள்' விற்று பிறகு அது ஒரு வதந்தி என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார். கூட்டமும் பரிதாபமாகக் கலையத் தொடங்கியது.

தகவல்: "பாலன்"

சிவனருட் செல்வர்



திருமுருக கிருபானந்த வாரியார்

70. வெண்பா இசைத்த வேந்தர்

பூமாலை வாடும் இயல்புடையது. பூமாலையினும் பன்மடங்கு உயர்ந்தது பாமாலை. என்றும் வாடாதது; அழியாதது; ஞான வாசனை வீசுவது. உள்ளத்தை உருக்கி அன்புத் தேனைப் பெருக்கி நம்மை உய்விப்பது.

இத்தகைய தமிழ்ப் பாமாலை புனையும் திருத்தொண்டு புரிந்து அதன் பயனால் அரனடி சார்ந்தவர் ஐயடிகள் காடவர்கோன்.

தொண்டை மண்டலத்தின் தலைநகராகிய காஞ்சிமாநகரின் கண் பல்லவர் குலத்தில் அவதரித்தவர் ஐயடிகள் காடவர்கோன் நாயனார். இவர் கலியையும் பகைவரது வலிமையையும் அடக்கிச் சைவ நெறியை எங்கும் பரவச் செய்து நீதிநெறி வழுவாது அரசு புரிந்தார்.

வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வல்லவராய்த் தொண்டு புரிந்து வந்த காடவர்கோன் காலக்கிரமத்தில் உலகத்தை அரசு புரிவது துன்பம் என்று கருதினார். அவர் மனம் சிவனடியார்களிடமே லயித்து நின்றது. இவ்வுலகியலில் அவர் மனம் துளியும் தோயவில்லை. மேலும், மனம் ஒட்டாமல் அரசு புரிவதை அவர் பாவமெனக் கருதினார். அரசாட்சியைத் தம் புதல்வனிடம் ஒப்புவித்து விட்டு, திருத்தொண்டிலேயே ஈடுபட்டு நின்றார்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள்தோறும் சென்று, உள்ளங் குழைந்து உருகி அங்கு பணிகள் பல புரிந்து ஒவ்வொரு கோயிலுக்கு ஒவ்வொரு வெண்பாப் பாடிப் பரவுவார். யாவரும் எளிதில் ஓதி உய்யும் பொருட்டே இவர் ஒரு கோயிலுக்கு ஒரு வெண்பாவே பாடும் நியமம் கொண்டிருந்தார்.

தல யாத்திரை முடித்துத் தமது தேக யாத்திரையும் முடித்துச் சிவபெருமானுடைய திருவடி நிழலையடைந்து இன்புற்றார்.

71. தலையைத் தந்த அன்பு

வடவெள்ளாற்றின் தென் கரையில் இருக்கு வேளூர் என்று ஒரு தலம் உண்டு. சோலையில் உள்ள பலாப் பழங்கள் வெடித்து, அதனின்றும் வழியும் தேன் பாய்ந்து வயல் விளையும். அவ்வூரிலே தலைவராய் வாழ்ந்தார் கணம்புல்ல நாயனார். நிறைந்த செல்வம் உடையவராய், நற்குணசீலராய் அவர் விளங்கினார். ஈசன் திருவடி ஒன்றே மெய்ப்பொருள் என்று விரும்பி அன்பு செய்வார். ''திருக்கோயிலின் உள்ளே ஒளியுற விளக்கெரித்தலே'' என்று உணர்ந்து, திருக்கோயிலில் திருவிளக்கிட்டு, நாவார நம்பனைப் பாடி அன்பு செய்வார்.

அவருக்கு வறுமை வந்து எய்தியது. தேவாதி தேவராம் அம்பலவாணர் எழுந்தருளியுள்ள தில்லையம்பதி சென்றார்; ஆடலரசை அன்புடன் பலகாலும் பணிந்து தில்லையிலேயே தங்கியிருந்தார். வீட்டில் உள்ள பொருள்களை விற்று விற்றுத் திருப்புலீச்சுரம் என்ற கோயிலில் விளக்கெரித்து வந்தார். விற்பதற்கு வேறு ஒரு பொருளும் இல்லாதொழிந்தது. அயலாரிடம் போய் இரப்பதற்கு அஞ்சினார். உடல் உழைப்பினால் அரிந்த கணம் புல்லைக் கொண்டு வந்து விற்று, அப்பொருளால் நெய் வாங்கி விளக்கிட்டுத் தொண்டு புரிந்தார்.

இவ்வாறு தொண்டு புரியும் நாளில் அரிந்து கொண்டு வரும் கணம் புல்



எங்கும் விலையாகாமல் இடர்ப்பட்டார். அதனால் அவர் அப்புல்லையே திரித்து விளக்காக எரித்தார். இவ்வாறு தொடர்ந்து செய்த போது அப்பும் போதாத நிலை ஏற்பட்டது. கணம் புல்ல நாயனார் அன்புருகும் சிந்தையுடன் என்புருக அவ்விளக்கில் தலையை வைத்து எரித்தார். உடனே சிவபெருமான் திருவருள் புரிந்து அவருக்குச் சிவலோகம் அருள் புரிந்தார். கணம் புல்ல நாயனார் திருக் கயிலையில் இறை வரையடைந்தார்.

72. கூண்டோடு கைலாசம்

ஈட்டின்றி வந்த பொருளைச் சிவாலயத்துக்கும் சிவனடியார்க்குமே வழங்குவது பதிபுண்ணியம். திருக்கடவூரிலே அவதரித்த காரிநாயனார் செந்தமிழை நன்கு ஆய்ந்து அறிந்தவர். கவி பாடுவதில் வல்லுநர். இவர் மூவேந்தரிடமும் சென்று, சொல் விளங்கப் பொருள் மறைந்து நிற்கும் படி தமது பெயரால் காரிக்கோவை என்று பாடி, உரையும் விளக்குவார். அம்மன்னர்கள் மகிழ்ந்து கொடுத்த பொற்குவியலைக் கொண்டு வந்து சிவபெருமானுக்குப் பல திருக்கோயில்கள் புதுக்கினார். தமிழறிவால் கோவை பாடி அதனால் வந்த பொருள் அத்தனையும் கோயிற் பணிக்கும் அடியார்க்குமே ஆகுமாறு அறம் புரிந்தார். எல்லாருக்கும் உள்ளம் உவக்கும்படி இன்சொல்லே கூறுவார். சிவனடியார்களுக்கு இருநிதியும் அன்புடன் வழங்குவார். வடகயிலையை மறவாது தியானம் புரிந்து கொண்டிருந்தார்.

யாவர்க்கும் மனமுவக்கு மின்பமொழிப் பய
னியம்பித்
தேவர்க்கு முதல்தேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகஅளித்து விடையவர்தம்
"காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய்

இடையறாத கயிலைத் தியானத்தால் சிவபெருமான் அருள் துணை புரிய உடம்புடன் கயிலைமலை சேர்ந்து இன்புற்றார். "வாய்ந்த மனம் போலுடம்பும் வடகயிலைமலை சேர்ந்தார்" என்பது சேக்கிழார் பெருமானின் வாக்கு.


இவ்வுடம்பு பஞ்சபூதங்களின் பரிணாமம். பிராகிருத உடம்பு. திருக்கயிலை அப்பிராகிருதம். ஐம்பூத சேர்க்கையினால் ஆகாதது. அப்பிராகிருத கயிலையும் பிராகிருத உடம்புடன் சேர முடியாது. ஆனால் இவர் உடம்புடன் சென்றார் என்று வருகிறது. இவ்வுடம்போடு சென்றவுடன் இவ்வுடம்பு கற்பூரம் கனலில் மறைவது போல் அங்கு மறைந்துவிடும் என்பது இதன் கருத்து.

சுவர்க்கத்துக்குத் தர்மர் உடம்புடன் சென்றார் என்றும், சென்றபின் உடம்பு மறைந்து ஒளியுடம்பு பெற்றார் என்றும் மகாபாரதம் கூறுகிறது.

73. மங்கையர்க்கரசி ம்ஞளர்

நின்றசீர் நெடுமாற நாயனார் மதுரையம்பதியை அரசு புரிந்திருந்தார். இவர் மங்கையர்க்கரசியாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளும் பெரும் பேறு பெற்றவர். இவர் சமண் வலைப் பட்டுத் திருஞான சம்பந்தருடைய அருட் பெருங் கருணையால் சைவ சமயம் சார்ந்து, சைவத்தை வளர்த்து உலகெங்கும் புகழ் பெற்றார். தென்னாடு முழுவதும் சிவம் பெருக்கி இனிது அரசு புரிந்தார்.

ஒரு சமயம் வடபுலத்துப் பகை மன்னர் திருநெல்வேலியில் வந்து தேர், யானை, புரவி, காலாள் என்ற நால்வகைச் சேனையுடன் போர் தொடுத்தார்கள். நெடுமாறனார் இதனையறிந்து வீரமிக்க தமது சேனையுடன் சென்று அஞ்சாது அமராடினார். கடும் போர் நிகழ்ந்தது. உதிர வெள்ளம் பெருகியது; சிரமலை குவிந்தது.


சக்திக்கும், வலிமைக்கும்!
பால்
கோக்கோ
சர்க்கரை
மால்ட்
Bournvita
THE IDEAL FOOD DRINK FOR STRENGTH AND VIGOUR
காட்பரீஸ்
போர்ன்விடா
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச் சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.

பாரி மிட்டாய்கள்
தவிர்க்க முடியாதவை.
அவை ருசிமிக்கவை.
சத்துள்ளவை. பிறருடன்
பங்கிட்டு ருசித்து
மகிழுங்கள்.
பாரி மிட்டாய் இருக்கையில்
வாழ்க்கை மேலும்
இனிக்கிறது.
ருசித்திருக்கிறீர்களா?
ஜிஞ்சர்காப்ஸ் -
லாக்டோபான்பான்ஸ்
டெவன் க்ரீம்
டாபி—ஹெல்த் ப்ருட்ஸ்

Parry's

பாரிஸ்—
உயர்தர மிட்டாய்
தயாரிப்பவர்கள்

பாரிஸ்
கன்பெக்ஷனரி
லிமிடெட்
மதராஸ்.

என்ன அலட்சியம்
ஓஹோ... அவளிடம்
பாரி மிட்டாய்
இருக்கிறதோ!



prs-4024a

கவந்தங்கள் நடம் புரிந்தன. பேய்கள் விருந்துண்டன. முடிவில் பகைவர்களாகிய வடநாட்டு மன்னர்கள் தோல்வியுற்றுச் சென்றார்கள். வெற்றிமாலை புனைந்த பாண்டிய மன்னர் ஆலயப் பணிகள் பல புரிந்து அருள் பெருக அரசளித்தார். திருநீற்றின் பெருமையை எங்கும் விளக்கி ஏனோரும் திருநீற்றைப் புனையுமாறு செய்து, பெரும் புகழுடன் நெடுங்காலம் அரசாண்டு சிவபதமடைந்து பேரின்பம் எய்தினார்.

74. அகவழிபாடு செய்த அடியார்

வழிபாடு இரு வகை. புற வழிபாடு அகவழிபாடு எனப்படும். அகவழிபாடு இல்லாத புறவழிபாடு பயனில்லாதது. அந்தர் யாகம் எனப்படும் அகவழிபாடில்லாத சிவபூசை சிறப்புறாது.

வாயிலார் நாயனார் அகவழிபாட்டிலேயே அழுந்தி நின்றவர். இவரைத் 'தபோதனர்' என்கிறார் சேக்கிழார் பெருமான்.

திருமயிலாப்பூர் தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குவது. கடற்கரையில் செல்வம் மிக ஓங்கி மாட மாளிகை நிறைந்து பொலிவது. புன்னை மரத்தின் கீழ் உமையம்மை மயிலுருவுடன் பூசித்த அம்மயிலாபுரியில் வேளாளர் குலத்தில் வாயிலார் என்ற தபோதனர் அவதரித்தார்.

இறைவனை ஒரு போதும் மறவாமையாகிய மனக்கோயிலில் இருத்தி, உணர்வு என்னும் விளக்கேற்றி, இடையறாத ஆனந்தம் என்ற திருமுழுக்காட்டி, அன்பு என்ற அமுதை நிவேதித்து, அர்ச்சித்து வழிபட்டு வந்தார்.

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதிதனை யுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்
சனைசெய்தார்.

இவ்வாறு அகப்பூசை நெடுங்காலம் புரிந்து சிவபெருமானுடைய திருவடி நிழலையடைந்து இன்புற்றார் வாயிலார் நாயனார்.

75. கத்தி முனையில் பத்தி

சோழ வள நாட்டிலே வயல் சூழ்ந்து செல்வம் நீடிய ஊர் நீடூர். அத்தலத்தில் வேளாண் மரபில் வந்து அக்குலத்துக்குத் தலைவராய் வாழ்ந்தார் முனையடுவார் நாயனார். முனை என்றால்

ஒரு நாள் செலவு ஒன்பதாயிரம் ரூபாய்!



ஜெமினி சர்க்கஸில் உள்ள கஜேஷ் என்ற காண்டா மிருகம் மைசூர் மிருகக் காட்சிசாலையிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது. இது தினமும் மூன்று மணங்கு உருண்டைக் கிழங்கு சாப்பிடுகிறது. இதன் பொழுதுபோக்கு தூக்கம்தான். அதே போல் அங்குள்ள கிங்காங் என்ற கொரில்லாக் குரங்கின் விலை அறுபதாயிரம் ரூபாய். கிங்காங் சர்க்கஸ் வேலைகள் அவ்வளவாக ஒன்றும் செய்யா விட்டாலும் தினமும் காலன் கணக்கில் பாலும் தேனும் குடிக்கும். தின்றும் இன்னும் வாழைப் பழத்துக்குக் கணக்கே கிடையாது.



அங்குள்ள சிங்கம் புலிகளுக்கு ஆகும் மாமிசச் செலவு தினமும் 1500 ரூபாய். யானைகளுக்கு (எண்ணிக்கை இருபது) ஆகும் கரும்புச் செலவு தினமும் அறுநூறு ரூபாய். பிரயாணத்தின் போது மாமிசமோ கரும்போ கிடைக்கா விட்டால் இவைகளுக்கு ஆகாரம் பால் மட்டும்தான். போன தடவை சென்னையிலிருந்து கல்கத்தா போனபோது வால்டேரில் வாங்கிக் கொடுக்கப்பட்ட பாலின் விலை ரூபாய் மூவாயிரம்! இந்த சர்க்கஸுக்கு ஒரு நாள் செலவு ஒன்பது ஆயிரம் ரூபாய்! - பானி

ஆதாரம்: "ஜூனியர் ஸ்டேட்ஸ்மன்"

போர். பல முனைகளுக்குச் சென்று பகைவரை வென்றதனால் இவர் முனையடுவார் எனப் பேர்பெற்றார். அவர் சிவபெருமானிடத்தில் மாறாத காதல் கொண்டு உள்ளம் உருகி வெள்ளம் போல் கண்ணீர் பெருகி வழிபடுவார். அன்பு நெறி நின்ற அவர் வீரம் செறிந்து விளங்கினார். பகைவர்களுக்குத் தோற்றவர் இவர்பால் வந்து வேண்டி நிற்பர். நடுவு நிலையுடன் அவர்பால் நிதி பெற்றுப் பகைவரை எதிர்த்து வெற்றி பெறுவார். உயிரைத் துரும்பாக எண்ணிப் போர் புரிந்து அதனால் வந்த பொன் கொண்டு அடியார்க்கு வழங்கித் திருத்தொண்டு புரிந்தார். அடியார்க்கு அறுசுவை உண்டி அளித்து இன்புறுவார்.

இவ்வாறு நெடுநாட்கள் சிவத்தொண்டு புரிந்து சைவநெறி நின்று சிவலோகம் அடைந்து ஆராஅமுதாம் பேராப் பெருவாழ்வு பெற்றார்.

76. மனையாளை முனிந்த பத்தி

பழைமை மிக்க பல்லவர் குலத்திலே அவதரித்தவர் கழற்சிங்க நாயனார். அவர் முப்புரமெரித்த முக்கட் பெருமானுடைய திருவடியை அன்றி வேறு ஒன்றையும் அறிவிற் குறிக்கோளாகக் கொள்ளாது, சேனைகளுடன் நாட்டை நன்னெறியில் செலுத்தி அரசு புரிந்து வந்தார்.

காடவர் தலைவராகிய கழற்சிங்க நாயனார், மேரு மலையை வில்லாகப் பிடித்த சிவபெருமானுடைய கருணையால், வடநாடு சென்று அங்கே பகைத்து நின்ற வடபுல மன்னரை வென்று நவநிதிகளையும் கொண்டு வந்தார். அரனார் ஆலயங்கள் பலவும் சென்று, ஆராத அன்புடன் பணிந்து நித்திய நைமித்திகங்கள் அமைத்து, திருத்தொண்டு புரிந்து வந்தார்.

ஒரு சமயம் சிவலோகம் போன்ற திருவாரூரை யடைந்தார். பிறப்பை யொழிக்கும் பிறைமுடிப் பெருமான் எழுந்தருளிய பூங்கோயில் புகுந்தார். புற்றிடங் கொண்ட புண்ணியரைக் கண்ணீர் மல்கி, கைகூப்பி, உள்ளம் உருகித் தரிசித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய பட்டத்து நாயகியராம் ஒப்பற்ற அழகும் பெருமையும் மிக்க மனைவி கோயிலை வலம் வந்தாள். அந்தக் கோயிலின் பெருமைகளைத் தனித் தனியே கண்டு களிப்புற்றாள். அங்கு ஒருபுறம் இறைவனுக்கு மலர் மாலை தொடுக்கும் மண்டபத்தின் அருகில் கிடந்த ஒரு புதிய மலரை எடுத்து மோந்தாள்.

இறைவனுக்குரிய மலர் மாலைக்கு ஏற்ற புதிய மலரை அவள் எடுத்து மோந்ததைக் கண்ட செருத்துணை நாயனார் என்பவர் இது சிவ அபராதம் எனக் கருதி, மிக விரைந்து சென்று வாள் எடுத்து, திருமகள் போன்ற அரசமாதேவியின் நாசியை அறுத்துவிட்டார்.

உதிரம் பெருக, மலர்க் குழல் சரிய, சோர்ந்து மண்மிசை வீழ்ந்து மயில் போல் புரண்டு அழுதாள் மன்னர் மனையாள். சிவமூர்த்தியை வணங்கிய பின், மன்னர் கழற்சிங்கர் அங்கு வந்தார். பூத்த கற்பகத்தின் பைந்தளிர்க் கொம்பு புவியில் விழுந்தது போல் வீழ்ந்து விம்மியழுகிற மனைவியை நோக்கி, "பெண்மணியே! இப்பாரிலே இக்கொடிய செயலை அஞ்சாது செய்தவர் யார்?" என்று வினவினார்.

அங்கு நின்ற செருத்துணை நாயனார் வேந்தர்பெருமானை நோக்கி, "அரசரேறே! இவர் எம்பிரானுடைய மலர் மாலைக்குரிய பூவை எடுத்து மோந்தார். அதனால் இக்கருமம் யானே புரிந்தேன்" என்றார்.

கழற்சிங்க நாயனார் அவரைப் பணிந்து, "இந்தக் குற்றத்துக்கு ஏற்ற தண்டனை செய்திரில்லை" என்று கூறி வடிவாளை எடுத்தார். "மலரை எடுத்தது கையேயன்றோ? ஆகவே, முதல் குற்றவாளி கையேயாகும். கையெடுக்காதிருந்தால் மூக்கு மோந்திராது. ஆதலால் குற்றம் புரிந்த கரத்தையும் கண்டிக்க வேண்டும்" என்று கூறிக் காதல் மிகுந்த மனைவியின் கரமலரை வடிவாளால் வெட்டினார்.

கட்டிய உடைவாள் தன்னை உருவிஅக்
கமழ்வா சப்பூத்
தொட்டு முன்னெடுத்த கையாம் முற்படத்
துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில் பெருந் தேவியான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடுந்
துணித்தா ரன்றே.

மனைவி எந்தக் குற்றம் புரியினும், பொறுத்து அவளைப் புகழ்ந்து போற்றுவதன்றோ நாம் இந்நாளில் காணும் புதுமை? கழற்சிங்கநாயனார் மனைவியாரிடம் அன்பில்லாதவரன்று. மிக்க காதலுடையவர். அவளும் திருவினும் உருவுடையவள். இவர் மனைவியாரைத் தண்டிக்க வில்லையாயின், அவளுக்கு மறு பிறப்பில் அவ்வினை ஒன்றுக்குக் கோடியாக வளர்ந்து வாட்டும். ஆதலால், அவ்வினை அப்பொழுதே கழியும் பொருட்டுக் கருணையுடன் தண்டித்தார். (தொடரும்)

திரும்பிய பாதை

ஜி. கே. பொன்னம்மாள்

குழாயடியில் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு கைக்குட்டையால் அழுத்தி முகத்தைத் துடைத்தபடி, ரிக்ஷா ஸ்டாண்டில் இருந்த சிறு பிள்ளையார் கோவிலுக்கருகே வந்து நான்கு தோப்புக் கரணம் போட்டு விட்டு அங்கு வைத்திருந்த பித்தளைத் தட்டிலிருந்து விபூதியை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டான் லாரி டிரைவர் கண்ணன்.

''அண்ணே, செங்கல் எல்லாம் ஏத்தியாயிற்று. கிளம்ப வேண்டியது தான்'' என்றான் லாரியில் — கண்ணனுக்கு ஒத்தாசையாக உடன் வரும் முத்து.



''என்னடா, அது! வயிற்றைப் பசிக்கிறது. ஏதாவது சாப்பிட வேண்டாமா? பட்டினியோடு எப்படியடா வண்டி ஓட்டுவது?'' என்றான் கண்ணன்.

''அண்ணே, பசியைக் கொஞ்சம் பொறுத்துக்குங்க அண்ணே! இப்போ புடாலுக்கு என்ற நாயர் கடையிலே நுழைஞ்சா எப்படியும் அரைமணி நேரமாயிடும். சீக்கிரம் போனாத் தானே, அந்தச் சினிமா நடிகையைப் பார்க்க முடியும்? நேற்றுக்கூட எட்டு மணிக்குச் செங்கல் இறக்கப் போன போது அவுங்க ஸ்டுடியோவுக்குப் போயிட்டாங்களே. இன்னிக்காவது ஏழு மணிக்குள் போய்விடலாம் அண்ணே! வரும்போது சாப்பிட்டுக்கலாம்'' என்று குழைந்தான் முத்து.


''ஐயோ, பைத்தியமே! உனக்கு நல்ல சினிமாப் பித்துப் பிடித்திருக்கு. அந்த லட்சம் ரூபாய் வாங்கற நடிகையைப் பார்த்ததிலே உனக்கென்ன லாபம் இருக்குது? வயிறு பட்டினி. அவ்வளவுதான். சரி, உன் ஆசையைக் கெடுப்பானேன்? ஏறு வண்டியிலே!'' என்று துண்டைத் தலையில் கட்டிக் கொண்டு லாரியில் டிரைவர் சீட்டில் ஏறி உட்கார்ந்தான் கண்ணன். முத்துவும் பின்னால் தொத்தி ஏறிக் கொள்ளக் 'இர்' என்ற சத்தத்துடன் வண்டி நகர்ந்தது.

பத்து வருடங்களாக அந்தக் கண்ணை பிரான் "செங்கல்" கம்பெனியில் லாரி யோட்டியாக வேலை பார்த்து வருகிறான் கண்ணன். முதலாளிக்கு அவனிடம் மிகவும் திருப்தி. குறிப்பிட்ட சமயத்துக்குச் செங்கல் போய்ச் சேர வேண்டும் என்றால் கண்ணன் தான் லாரி ஓட்ட வேண்டும் என்பார் முதலாளி. தனது எட்டாவது வயதிலேயே முத்துவும் லாரி துடைக்கும் பொடியனாகக் கண்ணனிடம் வந்து சேர்ந்தான். முத்துவின் சுறுசுறுப்பும், சிரித்த முகமும் கண்ணனுக்கு மிகவும் பிடித்திருந்தன. லாரியைத் துடைத்துக் கழுவிவிட்ட பிறகு அவ்வப்பொழுது இரண்டணா, நாலணா என்று முத்துவுக்குக் கொடுப்பான் கண்ணன். அப்பொழுது கண்ணனுக்குக் கல்யாணமாகி யிருக்கவில்லை. அதனால் அவனுக்கு ஹோட்டலிலிருந்து டிபன் சாப்பாடு முதலியவை வாங்கி வருவது, கிடைத்தபோது தேநீர் வாங்கிக் குடிப்பது, கண்ணனின் காக்கிச் சட்டையைக் குழாயடியில் சோப்புப் போட்டுத் தோய்த்துக் காய வைத்துக் கொடுப்பது முதலிய வேலைகளைச் செய்து வந்தான் முத்து. அப்படி கண்ணன் வாழ்க்கையில் முத்து ஒண்டிக் கொண்டான்! பிறகு கண்ணனே முத்துவைப் பற்றி முதலாளியிடம் சொல்லி லாரியில் செங்கல்லை ஏற்றி இறக்க வேண்டிய இடத்தில் இறக்கி வைக்கும் வேலைக்கு அமர்த்திக் கொண்டான். இந்த எட்டு வருஷங்களாகக் கண்ணனுடனேயே முத்துவும் வேலை செய்து வந்தான். இருவரும் ஒருவரையொருவர் மிக அன்பாக நேசித்து வந்தார்கள். அதனால்தான் முத்துவின் வேண்டுகோளுக்கிணங்கி டிபன்கூடச் சாப்பிடாமல் வண்டியைக் கிளப்பினான்.

ஆசையோ; காற்று விர்ரென்று சீறியது. ரஸ்தாவில் அதிக நடமாட்டம் இல்லை. ஒன்று இரண்டு வைக்கோல் ஏற்றிய மாட்டு வண்டிகள் மட்டும் போய்க் கொண்டிருந்தன. கண்ணன் சற்று வேகமாகவே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். அரைமணி நேரத்தில் செங்கல் இறக்க வேண்டிய சினிமா நடிகையின் வீடு வந்ததும் முத்து, லாரியில் எழுந்து நின்று பார்த்துவிட்டு, "அண்ணே! இன்னும் அவுங்க படம் பிடிப்புக்குக் கிளம்பலே, அண்ணே! கார் நிக்குது போர்டிகோ விலே!" என்று குஷியாகச் சொன்னான்.

லாரியை வளைத்துத் திருப்பிக் கேட்டுக்குள் நுழைந்து வண்டியை முன்பக்கமாக நிறுத்தி விட்டுத் துண்டை எடுத்து விசிறிக் கொண்டே கீழே இறங்கினான் கண்ணன். முத்து மடமடவென்று செங்கல்லைக் கீழே இறக்க ஆரம்பித்தான். "யோ, யாரய்யா அது? லாரியை நகர்த்தி நிறுத்தய்யா! செங்கல்லை எடுக்கும்போது காற்றில் புழுதி வந்து கார் மேலே படுது. இரண்டு தடவை வண்டியைத் துடைச்சாச்சு. அப்படி ஓரமாக நிறுத்து லாரியை!" என்று கம்பீரமாக அதிகார தோரணையில் உத்தரவிட்ட ஆளை நிமிர்ந்து பார்த்தான் கண்ணன்.

அந்த ஆளை எங்கோ பார்த்த ஞாபகம் வந்தது அவனுக்கு. நெற்றியைத் தடவிக் கொண்டு யோசித்தான். அவனுக்கு நினைவு வந்து விட்டது. "அண்ணே! முருகேசன் அண்ணே! நீங்கதானா? நான் யாரோ என்று நினைச்சேன். பார்த்து ரொம்ப நாளாச்சு. எப்படி இருக்கீங்க? கேட்கவே வேண்டாம், பார்த்தாலே தெரியுது. வசதியாத்தான் இருக்கீங்கன்னு. நாம்ப இரண்டு பேரும் சேர்ந்து லைசென்ஸ் எடுத்ததுக்கப்புறம் இப்



பத்தான் சந்திக்கிறோம். அப்ப நீங்க ஒல்லியாக இருப்பீங்க. ரொம்ப சந்தோஷம் அண்ணே! இதோ, வண்டியை நகர்த்திப் போட்டுவிட்டு வருகிறேன்" என்று வெகு சந்தோஷமாகப் பேசினான் முருகேசன். புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தூர எறிந்துவிட்டு "அடடே! கண்ணன் இல்லே. நான் வேறு யாரோ என்று நினைச்சேன். வாப்பா, இந்த லாரியைத்தான் ஓட்டிக்கிட்டு இருக்கியா? ரொம்பப் பேஜாரு பிடிச்ச வேலையாச்சே அப்பா! ஸ்டியரிங்கைப் பிடிச்சுத் திருப்பவே மூணு கோழி திங்கணுமே!" என்று சிரித்தான்.

"தினசரி கோழி திங்கிற அளவுக்கு நமக்குச் சம்பளம் இல்லே, அண்ணே! ஏதோ இந்த வண்டியைத்தான் பத்து வருஷங்களா ஓட்டிக்கிட்டு இருக்கிறேன்!" என்றான் கண்ணன் தலையைச் சொறிந்தபடி. எதிரே நிற்கும் முருகேசனைக் கடைக்கண்ணால் கவனித்தான் கண்ணன். வாசனைத் தைலம் போட்டுப் பளபளவென்று வாரிவிடப்பட்ட கிராப்புத் தலை; சலவை சில்குச் சட்டை. பொத்தான் போடாத சட்டைக்குள்ளிருந்து தங்கச் சங்கிலியும், அதில் கோத்திருந்த புலி நகமும் நன்றாகத் தெரிந்தன. மெல்லிய ஜரிகை வேஷ்டி. எல்லாமாகப் பார்வைக்கு வெகு சொகுசாக இருந்தான். அவன் தரையில் புரளப் புரள வேஷ்டி கட்டியிருந்ததே அலாதியாக இருந்தது. கைவிரல்களில் மோதிரம், சட்டை ஜேபியில் விலை உயர்ந்த சிகரெட்டுப் பாக்கெட்டு, அழகிய கைக் கடிகாரம் இப்படி வெகு ஆடம்பரமாகக் காட்சி அளித்தான் முருகேசன். மறுகணம் எண்ணெயும் கரியும் நிறைந்த தன் காக்கிச் சட்டையைப் பார்க்கவே அவனுக்கு அவமானமாக இருந்தது.

மாடியிலிருந்து நடிகை ரமாதேவி வருகிறாள் என்பதற்கு அடையாளமாக வேலைக்காரி முத்தம்மாள் ஒரு தோல் பெட்டி; பழரசம் நிரம்பிய பிளாஸ்க், டிரான்ஸிஸ்டர் முதலியவைகளைக் காரினுள் கொண்டு வந்து வைத்தாள்.

"கண்ணு, அம்மா வருங்க. நானும் ஸ்டுடியோவுக்குக் கிளம்பறேன்" என்று புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை எறிந்துவிட்டுக் கார் கதவைத் திறந்து கொடுத்தான் முருகேசன். கையில் ஒரு பத்திரிகையுடன் தந்தப் பதுமை போல் வந்த ரமாதேவி, காரில் ஏறிக் கொண்டு, பத்திரிகையைப் பிரித்தாள். சத்தமில்லாமல் வண்டி கிளம்பியது. முத்து திறந்த வாய் மூடாமல் போகும் காரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

லாரியில் வந்து உட்கார்ந்த கண்ணனுக்கு முதல் முதலாக இந்த லாரி ஓட்டும் பிழைப்பில் அலுப்புத் தோன்றியது. "டேய், சோமாரி! குந்துடா வண்டியிலே. திறந்த வாயிலே ஈ போவதுகூடத் தெரியாமல்" என்று அதட்டிய கண்ணன் எதற்காக இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறான்? ஒருவேளை பசியாக இருக்குமோ என்னமோ என்று தன்னுள் நினைத்துக் கொண்டு வண்டியில் பேசாமல் ஏறிக்கொண்டான், முத்து. வழியில் இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை. அவனுக்குக் கண்ணனின் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது.

காலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணி வரையில் இந்த லாரியில் அல்லல் படும் தொழிலை எண்ணி வருந்தினான் கண்ணன். ஒரு நாளைக்காவது நல்ல உடை உடுத்த வாய்ப்பு இல்லை. பொழுது விடிந்து பொழுது போனால் இந்தக் காக்கித் துணிதான். சம்பளம், மனைவி இரண்டு குழந்தைகள் அடங்கிய குடும்பத்துக்கு வயிற்றுப் பாட்டுக்கே சரியாக இருந்தது. இதில் மோதிரம், கடிகாரம் எல்லாம் கனவில்கூட நினைக்க முடியாது. ஆக மொத்தம் கஷ்ட ஜீவனம். முருகேசன் எப்படி இருக்கிறான்? தளதளவென்ற உடற்கட்டும், அழகும்? எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். நானும் முருகேசனும் சேர்ந்து லைசென்ஸ் எடுத்தோம். இன்று அவன் எங்கே, நான் எங்கே? என்றெல்லாம் எண்ணிக் குமுறியபடி வண்டியைச் சற்று வேகமாகவே ஓட்டினான் கண்ணன். இடையே ஒரு கூடைக்காரக் கிழவி மேல் வண்டி மோத 'இருந்தது. கணப்பொழுதில் கைப்பழக்கத்தினால் வண்டியை ஒடித்துத் திருப்பி விபத்தைத் தடுத்துவிட்டான். என்றாலும், அவன் மனம் படபடத்துக்கொண்டுதான் இருந்தது. 'இன்று என்னமோ அண்ணனுக்கு மனசு சரியில்லை. நாம்ப ஜாக்கிரதையா நடந்துகொள்ளணும்' என்று நினைத்துக் கொண்டான் முத்து.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. வழக்கமாகச் சாப்பிடும் நாயர் கடை வந்ததும் "அண்ணே, நாயர் கடை வந்துவிட்டது" என்று மெதுவாக முனகினான் முத்து. "உம்" என்று முனகியவாறு திடீரென்று பிரேக்கைப் போட்டான் கண்ணன். அவன் அப்படித் திடீர் என்று பிரேக் போடுவதை அதிகமாக முத்து பார்த்ததே இல்லை.

"என்ன சாப்பிடறீங்க, டிரைவர் ஐயா? இன்று ஆப்பம், உருளைக் கிழங்கு குருமா ஸ்பெஷல் கொண்டு வரட்டுமா?" என்று நாயர் கேட்டதற்கு "ஏதாவது" என்று பதில் கொடுத்தான் கண்ணன். அவன் தட்டிலிருந்து பலகாரத்தைச் சாப்பிடும்போதும், சில்லறையைக் கொடுக்கும்போதும் எல்லாம் வேறு ஏதோ கவனத்தில் இருப்பதைக் கண்டான் முத்து.

இரவு ஒன்பது மணிக்கெல்லாம் லாரியை ஷெட்டில் போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தான் கண்ணன். மனைவி செல்லம் கணவனுக்கு ஆசையாக வெந்நீர் போட்டுவிட்டு, சமையலும் செய்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள். ஏனோ, தானோ என்று குளித்துச் சாப்பிட்டுவிட்டு, குழந்தைகளிடம் கூடப் பேசி விளையாடாமல் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்த கணவனை முறைத்துப் பார்த்தாள் செல்லம்.

"என்ன அத்தான், உங்களுக்கு? என்ன வந்திடுச்சு? இப்படிச் சோர்ந்திருக்கிங்களே? உடம்புக்கு ஒன்னும் இல்லையே?" என்று அவன் பக்கத்தில்வந்து உட்கார்ந்தாள்அவள்.

"உடம்புக்கு ஒரு கேடும் இல்லே. மனசு தான் தவிக்குது. வாழ்ந்தால் நல்லபடியாக வாழணும். இப்படி உழைச்சு உழைச்சு வயிற்றுக்கும் வாய்க்கும் பத்தாமே, அவல


இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை
குளோப்
மஹாராணி
புவனேசுவரி
சீனிவாசா
மற்றும்
தென்னுடெங்கும்
பத்மஸ்ரீ
சிவாஜி கணேசன்
அளிக்கும்
கமலா பிக்சர்ஸ்
பாலாடை
டைரக்ஷன் • A. பீம்சிங்
தயாரிப்பு: M.R. சந்தானம்
ELEGANT

வாழ்வு வாழறது என்ன வாழ்வு செல்லம்? ஒவ்வொருத்தன் பணத்தை வாரி இறைக்கிறான். என் சிநேகிதன் ஒருத்தனைப் பார்த்தேன் இன்னைக்கு. அவன் சினிமா நடிகை ரமா தேவி வீட்டிலே வண்டி ஓட்டறான். எப்படி இருக்கிறான் தெரியுமா? ஊட்டி, கோயமுத்தூர் என்று சுகவாசம். நல்ல சாப்பாடு. அலுங்காமல், நலுங்காமல் வேலை செய்கிறான். அவனைப் பார்த்த பிறகு எனக்கு என் வாழ்க்கையே பிடிக்கல்லே. இந்த லாரியைக் கட்டிக்கிட்டுப் பத்து வருஷமா மாரடிக்கிறேன். எதைக் கண்டேன்? ஒரு நகை உனக்குப் பண்ணிப் போட்டிருக்கிறேனா? நான்தான் ஏதாவது அனுபவித்தேனா?'' என்று பெருமூச்சுடன் பேசி நிறுத்தினான்.

செல்லத்துக்கு அவன் பேச்சுப் புரியவே இல்லை. ''இது என்னங்க வேடிக்கையாக இருக்கு? உங்க வாழ்க்கை அப்படி ஒன்றும் வீணாயிடல்லே. உடல் வருந்தச் சம்பாரிச்சு, குடும்பத்தைக் கௌரவமாக் காப்பாத்தறீங்க. ஒங்க மொதலாளியும் ரொம்பவும் நல்லவரு. எனக்கு அப்படி நகை நட்டு வேணும் என்று உங்களை என்னிக்காவது கேட்டிருக்கேனா? நீங்கள் கட்டின மஞ்சள் கயிறு ஒன்றே ஆயிரம் நகைக்குச் சமானம். எனக்கு அது நிரந்தரமாக இருந்தால் போதும். நீங்களும் பெங்களூர் ஊட்டி என்று என்னையும் பிள்ளைகளையும் விட்டு விட்டுப் போவதை நாங்க விரும்பல்லேங்க. ராவு எட்டு மணி ஆச்சுன்னா புள்ளைங்க ஒங்க முகத்தைப் பார்க்காமெ தூங்காதுங்க. நானும் அப்படித்தான். இப்ப நம்ம வாழ்விலே கடவுள் ஒரு குறையும் வைக்கலீங்க'' என்றாள் செல்லம். கண்ணன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். ''உனக்குச் சுக வாழ்க்கையைப் பற்றி ஏதாவது தெரிந்தால்தானே? அடுப்படி, கணவன் முகம் — இவை தவிர நீ வேறு எதைப் பார்த்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. கண்ணனுக்கு வரவர எதுவுமே பிடிக்கவில்லை. கடனே என்று வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். அவன் உடலும் இளைத்துக் கொண்டு வந்தது. இடை இடையே பத்திரிகையில் விளம்பரங்களைப் பார்த்து வேறு வேலைக்கு விண்ணப்பம் போடுவதும், நண்பர்களிடமெல்லாம் 'ஏதாவது டிரைவர் வேலை காலியிருந்தால் சொல்லுங்கள் — இந்த லாரி டிரைவராக மட்டும் வேண்டாம் — காராக இருக்கட்டும்' என்றும் சொல்லிக் கொண்டிருந்தான். விளையாட்டுப் போல் ஒரு வருடம் ஓடி மறைந்தது. கண்ணன் அதே லாரி டிரைவராகத்தான் இருந்தான்.

அன்று காலையில் எழுந்ததுமே அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. முதலாளியைப் பார்த்துச் சம்பளம் கூடுதலாவது கேட்டு விட வேண்டும் என்பதுதான் அது. கம்பெனி ஆபீஸ் வாசலில் லாரியை நிறுத்தி விட்டு ஆபீஸ் அறைக்குள் விரைந்தான் கண்ணன். முதலாளி, கண்ணனிடம், ''நானே உனக்கு ஆள் அனுப்ப வேண்டும் என்று இருந்தேன். நீயே வந்துவிட்டாய். நீ ஏதோ வேறு வேலை தேடுவதாய்க் கேள்விப்பட்டேன். உனக்கு லாரி ஓட்டப் பிடிக்கவில்லைபோலிருக்கிறது. பரவாயில்லை. நானும் இன்றையப் பத்திரிகையில் ஒரு லாரி டிரைவர் வேண்டும் என்று விளம்பரம் செய்திருக்கிறேன்'' என்று நிறுத்தினார் முதலாளி.

'நாம் சம்பளம் கூடுதல் கேட்பதற்கு முன்னால் நம்மை வேலையை விட்டு நீக்கவே முதலாளி திட்டம் போட்டுவிட்டாரே' என்று எண்ணியபோது கண்ணனுக்குத் 'திக்' கென்றது. திடீரென்று வேலை போய்விட்டால் என்ன செய்வது? எப்படிப் பிழைப்பது என்ற எண்ணம் எழுந்து அவனைத் திக்கு முக்காடச் செய்தது. பேசவே தோன்றவில்லை. மென்று விழுங்கிக் கொண்டு நின்றான். வியர்வையில் அவன் காக்கி உடை தெப்பமாக நனைந்து விட்டது. சற்று நேரம் அமைதியாகச் சுருட்டைப் புகைத்துவிட்டு முதலாளி ''உனக்கும் இனிமேல் லாரி ஓட்டும் வேலை இல்லை. நான் கார் வாங்கியிருக்கிறேன். அந்தக் காரை நீயே ஓட்டு. எனக்கு நம்பிக்கையான ஆள் தேவை. அடுத்த வாரமே வியாபார விஷயமாக நாம்ப ஊட்டிக்குப் போகணும். உனக்கு வேண்டிய உடைகளை வாங்கிக்கொள்'' என்று ஐம்பது ரூபாயை எடுத்து அவன் பக்கம் நீட்டினார். கண்ணனுக்குத் தான் காண்பது கனவா, நினைவா என்றே முடிவுசெய்ய முடியவில்லை. இப்படி ஓர் அதிர்ஷ்டம் வரும் என்று அவன் நினைக்கவே இல்லை. அன்றெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்தான் கண்ணன்.

ஈரம் உலராதோ!



பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் ஆறுமாத காலமாக அடைபட்டிருந்தார்கள் அந்த இருவரும். ஒரு நாள் கதவு திறந்திருந்தது. யாருக்கும் தெரியாமல் இருவரும் வெளியேறி விட்டனர். சற்று நேரத்தில் அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் இல்லாதது கண்டு பிடிக்கப்பட்டது. எங்கு தேடியும் அவர்களைக் காணவில்லை!

சிறிது நேரம் கழித்து ஒருவன் மட்டும் வந்தான். அதிகாரி விவரத்தைக் கேட்டார்.

''என்னோடு வந்தவன் திடீரென்று ஆற்றில் குதித்து விட்டான்!''

''ம்: அப்படியா....?'' என்றார் அதிகாரி பதற்றத்துடன்.

''நான் விடுவேனா? உடனே நானும் அவனைக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டேன்.''

''மிகவும் மகிழ்ச்சி. இதிலிருந்து உனக்குப் பூரணமாகக் குணமாகி விட்டதென்றே தெரிகிறது. நாளை நீ வீட்டிற்குப் போகலாம்.''

அப்பொழுது ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஒருவன் அங்கு வந்தான். பைத்தியக்காரனைப் பார்த்து ''ஒரு துன்பச் செய்தி. உன்னால் ஆற்றிலிருந்து காப்பாற்றப் பட்டவன் கழுத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டான்'' என்றார்.

''தற்கொலை செய்து கொண்டானென்று யார் சொன்னது? நானல்லவா ஈரம் காயட்டும் என்று மரத்தில் அவனைத் தொங்க விட்டேன்!'' என்றான் அந்தப் பைத்தியக்காரன்.

- அடந்தையான்

மெல்லிசையில் அறுவைச் சிகிச்சை



சென்ற டிசம்பரில் வின்ட்ஸர் கோமகனுக்கு ரண சிகிச்சை நடந்தபோது அவருடைய டாக்டரான மைக்கேல் பேக்கி என்பவரது ஆப்பரேஷன் தியேட்டருக்குள் மெல்லியசங்கீதம் இசைக்கப்பட்டதாம். இம்மாதிரி சங்கீதம் ஆப்பரேஷனை வெற்றிகரமாகச் செய்ய உதவுகிறதாம். ஒவ்வொருவிதமான அறுவைச் சிகிச்சைக்கும் ஒவ்வொருவிதமான மெட்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறாராம் இந்த டாக்டர்.

ஆதாரம்: ''கத்தோலிக் டைஜஸ்ட்''

தகவல்: ''பாபு''

அன்று முத்துவை இராவி ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய், பிரியாணி — கோழிக் கறி — ஐஸ்கிரீம் என்று வாங்கிக் கொடுத்தான் கண்ணன். முத்துதான் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே யிருந்தான்.

''எனக்கு நீங்க இப்படியெல்லாம் உபசாரம் பண்ணத் தேவையில்லே அண்ணே. நீங்க என்னை விட்டுப் போகாமல் இருந்தால் போதும்'' என்றான். வீட்டுக்குக் கிளம்பும் போது, செல்லத்துக்கு இனிப்புப் பண்டம், பூ எல்லாம் வாங்கிக் கொண்டு போனான். அவனும், ''ஆமாம், எங்களை யெல்லாம் விட்டுவிட்டுக் கோயம்புத்தூர், பெங்களூர் என்று நீங்களும் போகப் போறீங்க. அவ்வளவுதானே?'' என்றான் கண் கலங்க. சுருக்கமாக, 'நமக்கு வேலே உயர்வு கிடைத்த தால் என்னைத் தவிர யாருக்கும் சந்தோஷம் இல்லையே?' என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள் குளித்து நன்றாக உடை உடுத்துக் கொண்டு கண்ணன் ஆபீசுக்குள் நுழையவும் முருகேசன் குனிந்த தலையுடன் முதலாளியின் அறையிலிருந்து வெளியே வரவும் சரியாக இருந்தது. முருகேசனைப் பார்த்து மலைத்து நின்றுவிட்டான் கண்ணன். அவன் பரட்டைத் தலையும், கசங்கிய உடையும் இளைத்துக் கறுத்த உடலுமாக முதலில் அடையாளம் கண்டுகொள்ளவே சிரமமாக இருந்தது கண்ணனுக்கு. ''அண்ணே! எங்கே அண்ணே வந்தே!'' என்றான் கண்ணன் வியப்புடன்.


முருகேசன் கண்ணனை ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''உங்க முதலாளியைப் பார்க்கலாம் என்றுதான் வந்தேன். பத்திரிகையிலே விளம்பரம் பண்ணியிருந்ததைப் பார்த்தேன். முதலாளி உனக்கு லாரி ஓட்டும் பழக்கம் உண்டா இன்னாரு. இல்லே. மத்தபடி எத்தனையோ வண்டிகளை ஓட்டியிருக்கேன் என்றேன். எனக்கு லாரி ஓட்டிப் பழக்க முள்ள டிரைவர்தான் வேணும் இன்னாரு. சரின்னு திரும்பிக்கிட்டிருக்கேன். எனக்கு ஆறு மாசமா வேலே இல்லே. ரொம்பக் கஷ்டப்படறேன். போன இடத்திலே எல்லாம் வேலே கெடைக்கல்லே'' என்றான்.

''ஆமா, ரமா தேவி வீட்டு வேலையை ஏன் விட்டுட்டே?'' என்று குறுக்கிட்டான்.

''நானு விடல்லே. அவுங்கதான் திடீர்னு கலியாணம் பண்ணிக்கிட்டு, சினிமா நடிப்பையும் விட்டு விட்டு பம்பாய்க்குப் போயிட்டாங்க. என்பாடு திண்டாட்டமாய்ப் போச்சு. வீட்டுலே புள்ளே குட்டீங்க மனைவி இவுங்க படற பாடு சொல்ல முடியாது. இருக்கிற நகையெல்லாம் வித்துச் சாப்பிட்டாச்சு. வேறு வேலே கிடைக்காமத்தான் லாரியாவது ஓட்டலாம்னு வந்தேன். அதுவும் கிடைக்கல்லே. ஏதோ நடிகை வீட்டுப் பழக்கத்தாலே நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டு, செயின், கடிகாரம் என்று ஜம்பமா இருந்திட்டேன். அதையெல்லாம் பார்த்துட்டு 'நீ பெரிய ஆளாச்சே அப்பா. ரமாதேவி வீட்டுலே வேலே செஞ்சேன் என்கிறே, உனக்குச் சம்பளம் தர எனக்குக் கட்டுபடியாகாது' என்கிறாங்க'' என்று பேசிக் கொண்டிருந்த முருகேசனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது கண்ணனுக்கு.

தானும் ஒரு நாள் முருகேசனைப் போல் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டதை நினைக்கச் சற்று வெட்கமாகக்கூட இருந்தது அவனுக்கு. ''இருங்க அண்ணே. இதோ வர்றேன்'' என்று சொல்லிவிட்டு முதலாளி அறைக்குள் விரைந்தான் கண்ணன். ''முதலாளி, எனக்கு ஒரு உபகாரம் பண்ணணுமுங்க. இப்போ வந்துட்டுப் போறானே, அவன் என் சிநேகிதன். வேலையில்லாமே ஆறு மாசமாத் திண்டாடறான். நீங்க வாங்கியிருக்கும் புதுக் காருக்கு நான் டிரைவராக இருக்கவேங்க. அவனையே தயவு செய்து டிரைவராக வைச்சுக்கிடுங்க. நான் கார் ஓட்டணும் என்று ஆசைப்பட்டது உண்மை தானுங்க. ஆனா இவன் குடும்பம் கஷ்டப் படறதைப் பார்க்கும்போது என் ஆசையைப் பெரிசா நினைக்கலீங்க. அவனுக்கு லாட்டிகூணூர் என்று வண்டி ஓட்டி நல்ல பழக்கம் உண்டு. எனக்காக நீங்க இந்த உபகாரம் பண்ணணுமுங்க'' என்று கெஞ்சினான். முதலாளி சற்று யோசித்துவிட்டு, ''சரி, உன் இஷ்டம்'' என்றார்.

அறைக்கு வெளியே அமர்ந்து கண்ணன் முதலாளியிடம் பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் கேட்ட முருகேசனின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. எத்தகைய தியாக உள்ளம் அவனுக்கு? அவனுக்குக் கிட்டிய சந்தர்ப்பத்தைத் தனக்காகத் தியாகம்செய்து விட்டானே என்பதை நினைத்ததும் கண்ணன் வெறும் லாரி டிரைவராகத் தோன்றாமல் எதிரே சுவரில் மாட்டியிருக்கும் கீதோபதேசப் படத்தில் அர்ஜுனனுக்கு ரதம் ஓட்டும் கண்ண பரமாத்மாவாகவே தோன்றினான் முருகேசனுக்கு.



விடிந்தால் லதாவுக்குப் பிறந்த நாள்.
பல சிநேகிதிகளுக்கு அழைப்பு அனுப்பியாகிவிட்டது. ஆனால் பத்மாவுக்கு இப்பொழுது ஒரு பெரிய பிரச்னை!
கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்க வேண்டாமே, பத்மா! உனக்கு இப்போது என்ன கவலை?
LECO
லீக்கோ

* வருவாய் வந்து குவிய ஒரு வழி
* பிளாட்பாரம் டிக்கெட்
* நல்ல சிறுகதை
* சினிமா விமரிசனம்

அண்மையில் இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு செஸ்டர் பௌல்ஸ் அவர்கள், இந்திய அரசாங்கம் அந்நியச் செலாவணி ஈட்டுவதில் எவ்வளவு பின்தங்கியிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்திய சர்க்காரின் சுற்றுலாத் துறையின் வாயிலாகவே, நமது நாடு கோடிக்கணக்கான டாலர்களை அந்நிய யாத்திரிகர்களின் மூலம் வெளி நாணயச் செலாவணியாகத் திரட்டியிருக்கலாம்தான். அவ்வாறு இயலாமல் போனதற்கு, மத்திய அரசின் விழிப்பின்மையும் — விவேகமற்ற தன்மைகளுமே காரணம் என்பதை உணர்த்தும் சொற்பிரயோகங்களை அவர் மிக நாசுக்காகக் கையாண்டிருப்பது, அவரது தேர்ந்த ராஜதந்திர முதிர்ச்சிக்கும், பண்புக்கும் ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டுமே தவிர நம்முடைய மத்திய அமைச்சர்களின் சாரமற்ற போக்குகளைத் திரு பௌல்ஸ் போன்ற அறிவாளிகள் கடுமையாகக் கண்டிக்கத் தயங்குகிறார்கள் என்பதாகாது!

3.1 கோடி மக்கள் தொகை மட்டுமே பெற்றுள்ள ஸ்பெயின், சென்ற ஆண்டு சுற்றுலாத் துறையிலிருந்து 100 கோடி டாலருக்கு மேல் (ரூ. 750 கோடி) அந்நியச் செலாவணி ஈட்டியது. அதாவது, உதவிக் குழு நாடுகள் (உலக பாங்கு அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி முதலியன) ஆண்டுதோறும் இந்தியாவுக்குக் கடன் தரும் அயல்நாட்டுச் செலாவணிக்கு இது சமம்!

85 லட்சம் மக்களை கொண்ட கிரீஸ் நாடு 10 கோடி டாலர் (ரூ. 75 கோடி) சம்பாதித்தது; இரண்டு கோடி மக்கள் வாழும் யுகோஸ்லாவியா, பதினைந்து கோடி டாலருக்குமேல் (ரூ. 112 கோடி) ஈட்டியது.

மாறாக, 1966–ல் சுற்றுலாத் துறையில் இந்தியா ஈட்டிய அந்நியச் செலாவணி 3.4 கோடி டாலர் (ரூ. 25 கோடி)தான்; இவ்வளவுக்கும் இந்நாடு உலகின் முக்கியமான ஒரு நாடு. உள்ளங்கவர்ந்த நாடு.

இவ்வாறு கூறிவிட்டு, திரு பௌல்ஸ், மாபெரும் அளவில் வளர்ந்தோங்கியுள்ள உலகச் சுற்றுலாவினால் இந்தியாவைக் காட்டிலும் அதிகமாக எத்தனையோ நாடுகள் நன்மையடைவானேன் என்பதற்கும் விளக்குகிறார்:

"எங்கு தங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்குமென்று சுற்றுலாக்காரர்கள் நினைக்கின்றனரோ அங்குதான் அவர்கள் செல்கின்றனர். அவர்கள் விடுமுறையில் வருபவர்கள். எனவே, இலகுவான, வசதியான குறித்த நேரத்தில் போய் வரும் போக்குவரத்து வேண்டுமென விரும்புகிறார்கள். இது இயற்கையே!"

பல்வேறு காரணங்களினால் சுற்றுலாத் துறையில் இந்தியாவுக்குள்ள வாய்ப்பு குறைகிறது என்பது திரு பௌல்ஸ் அவர்களின் திட்டமான கருத்து.

தரமும், வசதிகளுமிக்க போதிய ஹோட்டல்கள் இல்லாமை, விமானப் போக்குவரத்திலுள்ள பல நிலையற்ற தன்மைகள் காலத்துக்கு ஒவ்வாத — அடிக்கடி எரிச்சலூட்டும் அரசாங்க விதிமுறைகள் ஆகிய குறைபாடுகளினால், செலவு செய்வதற்கு கையில் பணமுள்ள லட்சக்கணக்கான உலகப் பிரயாணிகள் ஆண்டுதோறும் இந்தியாவைத் தாண்டிப் பறந்து போகிறார்கள்!

புது தில்லி — ஏ. ஆர். ராஜாமணி

பிளாட்பாரம் டிக்கெட் கட்டணம் பத்து பைசாவிலிருந்து பதினைந்து பைசாவுக்கு உயர்த்தியதற்கான காரணங்களில் டிக்கெட் தயாரிப்பதற்கான செலவை மந்திரியவர்கள் குறிப்பிடுகின்றார். ஒரு டிக்கெட் தயாரிக்க நான்கு பைசா செலவு ஆகிறதென்று. அதன் காரணமாகவும் டிக்கெட் கட்டணத்தை உயர்த்த வேண்டி ஏற்பட்டதாம். பிளாட்பாரம் டிக்கெட்டைக் குறைந்த செலவில் (சாதாரண பஸ் டிக்கெட்டைப் போல்) தயாரித்தால் கால் பைசாவுக்குக் குறைவாகவே தயாரிக்கலாம். அவ்வாறு தயாரிப்பதில் அரசாங்கத்துக்கு லாபம் ஏற்படுவதுடன் மேற்கொண்டு அடுத்த ஆண்டில் இதன் விலை உயராது.

நெடுங்காடு
2–6–67 — என். ஜி. ஜகந்நாதன்

'பிசுமாவிக்கும் பேசத் தெரியும்' என்ற கதை மனத்தைத் தொட்டது. சிறு ஆட்டுக்குட்டியை வைத்துக் கொண்டு சிறந்ததொரு கதையை எழுத முடியும் என்பதைப் பூனை எஸ். ஆறுமுகம் நிரூபித்து விட்டார்.

பம்பாய்–62
17–6–67 — மீனாட்சி முத்துராமன்

'கல்கி'யில் 18ந் தேதி வெளிவந்த இருபட ('அதே கண்கள்'; 'வாலிப விருந்து') விமரிசனங்களையும் பார்த்து வியப்பும் ஏமாற்றமுமே அடைந்தேன். அப்படங்களில் காணப்படும் இல்லாத மட்டரகமான காட்சிகளையும் இன்னும் பல அநாவசியங்களையும் பற்றிக் குறிப்பிடாமல் பொழுதுபோக்குச் சித்திரமென்றும் கண்ணுக்கினிய கலர்ப் படம் என்றும் எழுதி விட்டீர்களே! இத்தகைய படங்களைப் பார்க்காமலிருப்பதே நலம்.

திருச்சி–2
16–6–67 — என். ராமதுரை

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே ஸில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.

கேச உதிர்வு. உச்சந்தலையிலே தினவு. நார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மைதான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்–கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.

18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று சேர்ந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன் மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:

உங்கள் உச்சந்தலைமீது அன்றாடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட் ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1.



ஸில்விக்ரின் தயாரிப்புகள்—ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்

கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு

LPS-Aiyars S. 1 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி